# இன்னொரு சீதை!

நீ பாதி நான் பாதி கண்ணே
அருகில் நீயின்றி தூங்காது கண்ணே
நீ இல்லையேல் இனிநானில்லையே
உயிர் நீயே!

**கா**கங்களின் கரைதலும் குருவிகளின் கீச்கீச் சங்கீதமும் பொழுது விடி கிறது என்பதை அறிவிக்க, தூக்கம் கலைந்தாள் சீதாலஷ்மி. சோம்பல் முறித் தவாறே எழுந்தவளின் கண்கள் இயல்பாய் தன்படுக்கையை வருட, கண வன் இல்லாத வெறுமை தாக்கியது.

''இன்றோடு நான்கு நாட்களாகிறது. இன்னும் வரவில்லையே? இரண்டே நாளில் வந்துவிடுவேன் என்றாரே. ஒரு போனாவது பண்ணியி ருக்கலாமே'' மனதிற்குள் முனகியவாறே கூந்தலை உதறி கொண்டையாக் கினாள்.

மெடிக்கல் ரெப் ஆக வேலை செய்யும் ராம்குமார் மாதத்தில் இருமுறை வெளியூர் சென்றுவிடும் நாட்களில் அவன்படுத்திருக்கும் இடத்தைத் தொட்டு வணங்குவதும் வழக்கமாயிற்று. இன்றும் வழக்கம்போல் தொட்டு வணங்கி விட்டு அறையை விட்டு வெளியேறியபோது அன்னபூரணி வெளிமுற்றத்தை பெருக்கிக் கொண்டிருந்தாள்.

வேகமாக மாமியாரை நெருங்கினாள். ''அத்தே! துடைப்பத்தை கொடுங்க. நான் பெருக்குறேன்.''

அன்னபூரணி தன் வேலையை நிறுத்திவிட்டு நிமிர்ந்தாள். ''நான் பெருக் குறேன். நீ போய் குளிச்சிட்டு நல்லதா உடுத்திக்க. போ''

''எதுக்கு அத்தே?''

''ராம் வர்றானாம். போன் பண்ணினான்''

கணவன் வருகிறான் என்றதும் முகம் மலர்ந்தாள் சீதாலஷ்மி.

''எப்போ போன் பண்ணினார் அத்தே?''

''நேற்று நைட் பதினோரு மணி இருக்கும்மா. வேலை முடிய அவ்வளவு நேரமாகிடுச்சாம். உங்கிட்ட பேசணும்னு சொன்னான். நீ அப்பதான் படுக்க போன. அதான் எழுப்பல்ல''

''சரிங்க அத்தை''- சொல்லிவிட்டு உற்சாகமாய் அறைக்குள் நுழைந்தாள். அலமாரியைத் திறந்து கணவன் விரும்பி ரசிக்கும் சந்தன நிறகாட்டன் புட வையை எடுத்து வைத்துவிட்டு பத்தே நிமிடத்தில் குளித்து முடித்தாள்.

புடவைமாற்றி தலையை உலர்த்தி நுனிமுடிச்சிட்டு, பவுடர்பூசி பொட்

**சொ. கலைவாணி சொக்கலிங்கம்**

டிட்டுக் கொண்டு கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்து புன்னகைத்துக் கொண்டாள்.

வெளியே வந்த போது அன்னபூரணி சாணம் தெளித்து வைத்திருந்தாள்.

''சீதா! வாசல்ல ஒரு கோலம் போட்டுடு. நான் இந்த பூவை பறிச்சு கட்டி வெக்கிறேன்''- என்றவாறு கையில் ஒரு கிண்ணத்தோடு முற்றத்தில் படர்ந்து விரிந்திருந்த மல்லிகை பந்தலை நோக்கிச் சென்றாள்.

இரவு முழுக்க மலர்ந்து மணம்பரப்பிய மல்லிகைகளை பொறுமையாய் பறித்து கிண்ணம் நிரம்பியவுடன் வெளித்திண்ணையில் அமர்ந்தாள் அன்ன பூரணி.

''உமா! ஏய் உமா! அந்தப் பூ கட்டுற நூலை எடுத்துத்தாம்மா''- வீட்டினுள் பார்த்து குரல் கொடுக்க, எவ்வித பதிலும் வரவில்லை.

கோலம் போட்டு முடித்து விட்டு வந்த சீதா குரல்கொடுத்தாள்.

''உமா இன்னும் எழுந்துக்கலை அத்தே. நான் எடுத்துட்டு வர்றேன்.''

''என்ன? இன்னும் எழுந்துக்கலையா? இப்பத்தானே எழுப்பிவிட்டேன்''

''இன்னிக்கு லீவுதானே அத்தே. தூங்கட்டுமே''

''எல்லாம் நீ கொடுக்கிற இடம். கழுதை மாதிரி வளர்ந்திட்டு இவ்வளவு நேரமா தூங்குறது?''

''போதும்மா. காலையிலேயே ஆரம்பிச்சுடாதே. நீ அண்ணியோட மாமியாரா? இல்லே எனக்கு மாமியாரா?''- கலைந்த கூந்தலோடு எழுந்து வந்து உமா சிடுசிடுத்தாள்.

''ரெண்டு பேருக்குமே நான் அம்மாதான்டி. உன்னைப்போல பொண்ணுதானே அவ. பாரு! காலையில எழுந்து.. குளிச்சு..''

பட்டென கைகளை அடித்து கும்பிடுபோட்டாள் உமா. ''தாயே அன்ன பூரணி. போதும். உம்பிள்ளை வர்றதுக்குள்ள குளிச்சிடுறேன். நீ பூ கட்டு''- என்றவாறு வீட்டினுள் நுழைந்தாள்.

''கடைக்குட்டி கழுதைக்கு உடம்புல ஒரு பயம்இல்ல. எது சொன்னாலும் கேட்காம என் வாயை அடைச்சுடுது.''

''விடுங்க அத்தே. சின்னப் பொண்ணுதானே''

''சின்னப் பொண்ணா? வர்ற ஆவணியோட இருபத்திரெண்டு வயசு முடியுதும்மா. இப்ப இருந்தே வீட்டுவேலை பார்த்து பழகினாத்தானே நாளைக்கு புருஷன் வீட்லபோய் தடுமாறாம சமைக்க முடியும்.''

''அதெல்லாம் தானா பழகிப்பா. இந்தாங்க அத்தே நூல்''

''சரிம்மா. நீ போய் காபிபோட்டுட்டு இட்லி ஊத்து. மணி ஆறு தாண்டிப்போச்சு''

''சரிங்க அத்தே''- என்றவாறு சமையலறைக்குள் நுழைந்து பரபரவென வேலையில் மூழ்கியபோது ஈரக்கூந்தலுடன் உள்ளே நுழைந்தாள் உமா.

''அண்ணி! நான் எதுவும் செய்யணுமா?''

''ம். காபி ரெடியா இருக்கு. குடி''- என்றவாறு டம்ளரில் ஊற்றி நீட்டினாள்.

''தேங்க்யூ அண்ணி. நீங்களே எனக்கு அம்மாவா இருந்திருக்கலாம். ஜாலியா இருந்திருக்கும்''- என்றவாறு காபியை வாங்கி துளித்துளியாய் பருகினாள் உமா.





''சீரியல் டைரக்டர்களையெல்லாமே எனக்கு ரொம்பவும் பிடிக்கும்''

''ஏன்?''

''அவங்கதானே என் மனைவியை அழ வெச்சுப் பார்க்கிறாங்க!''

-எம். அசோக்ராஜா, திருச்சி.

''அம்மாவை அப்படியெல்லாம் சொல்லக்கூடாது. அம்மா எது சொன்னாலும் நம்ம நல்லதுக்குத் தானே சொல்வாங்க''

''அதானே பார்த்தேன். உங்க மாமியாரை நீங்க விட்டுக்கொடுப்பீங்களா?''

''அதெப்படி விட்டுக் கொடுப்பேன்?''

''ஆச்சர்யம்தான் அண்ணி''

''என்ன ஆச்சர்யம்?''

''நானும் எத்தனையோ இடத்துல பார்த்திருக்கேன். இப்படி ஒரு மாமியார் மருமகளைப் பார்த்ததே இல்லை''

''கண்ணுவெச்சிடாதே கழுதை. தலையைக் கூட உலர்த்தாம என்ன காபி வேண்டிக்கிடக்கு?'' என்றவாறே மல்லிகைச்சரத்துடன் சமையலறைக்குள் நுழைந்தாள் அன்னபூரணி.

''இது ப்ரூம்மா.''-என்றவாறு காபியை முழுவதுமாய் குடித்து முடித்தாள் உமா.

''வாயைப்பாரு. வாயாடிக்கழுதை''

''ம்மா. சும்மா கழுதைன்னாதே. அப்புறம் உன் புருஷன்கிட்ட சொல்லிக் கொடுத்திடுவேன்.''

''உமா! அப்பான்னு சொல்லு''- சீதாலஷ்மி அதட்டினாள்.

''அவ கெடக்குறா விடும்மா. இந்தா பூ வெச்சிக்க''- கை நிறைய பூச்சரத்தை கொடுத்த மாமியாரிடம் வாங்கி அதை மூன்றாய் பிரித்து மாமியாரின் கொண்டையில் ஒரு சரத்தை சூட்டினாள்.

''மொத்தமா வெச்சுக்கம்மா''

''இருக்கட்டும் அத்தே. மூனு பொண்ணுங்க இருக்கோமே. ஆளுக்குக் கொஞ்சம் வெச்சுக்கலாம்''.

நடைபயிற்சியை முடித்துவிட்டு வீட்டிற்குள் நுழைந்த உலகநாதன், ''சீதா! காபி கொடம்மா''- என குரல் கொடுக்க, உடனே எழுந்தாள் சீதா.

''இதோ கொண்டுவர்றேன் மாமா''

''நீ இரும்மா. நான் கொடுக்கிறேன். மணி ஏழு அடிச்சிடுத்தே. இன்னும் ராமைக் காணோமே''

''டிராபிக்கா இருக்கும். இப்பல்லாம் எந்த பஸ் சரியான நேரத்துக்கு வருது?''

''சரிசரி. டிபன் வேலை சீக்கிரம் முடியட்டும்''-என அன்னபூரணி சொல்லிக்கொண்டிருக்கும் போதே ஆட்டோ வந்து நிற்கும் ஓசைகேட்டது.

''அன்னம்! புள்ள வந்துட்டான் பார்''- உலகநாதனின் உற்சாகக் குரலில்

அனைவரும் சமையலறையை விட்டு வெளியேவர, கணவனைக் காணும் ஆவலில் வேகமாய் வாசலை அடைந்தாள் சீதா.

கலைந்த தலையுடனும் சிவந்த கண்ணுடனும் ஆட்டோவை விட்டு இறங்கிய ராம்குமார் மனைவியை பார்த்ததும் புன்னகைத்தான்.

''எப்படி இருக்க சீதா?''

''நல்லா இருக்கேங்க. வாங்க'' கணவனின் கையிலிருந்த பெட்டியை வாங்கிக்கொண்டாள்.

''வாப்பா ராம். ஏன் நாலுநாளாச்சு?''

''ஹெவி வொர்க்குப்பா. கூட ரெண்டு இடம் அலையவேண்டியதாப் போச்சு. நாலுநாளா தூக்கமே இல்லை.''

''அடடா! அதான் கண்ணெல்லாம் சிவந்திருக்கு. நல்லெண்ணெய் தேய்ச்சுக் குளிச்சிட்டு நல்லா தூங்கியெழுந்தா சரியாகிடும். சீதா! தம்பிக்கு காபி குடும்மா''- என்றாள் அன்னபூரணி.

''இல்லம்மா! இன்னும் பல் தேய்க்கல்ல. பிரெஷ் பண்ணிட்டு குளிச்சிட்டு டிபன் சாப்பிடுறேன்.''

''சரிப்பா. குளிச்சிட்டு வா''

''அண்ணே! ஊர்ல இருந்து என்ன வாங்கிட்டு வந்தே?''

''இருநூறு விட்டமின் டாப்லெட்ஸ், ஐம்பது காப்சிரப், நூறுஜெலுசில்.''

''ச்சீ உன் மருந்து அயிட்டத்தை யார் கேட்டது? எங்களுக்கு என்ன வாங்கிட்டு வந்தே?''

''ஒரு டஜன் ஆப்பிள். கவர்ல இருக்கு பார்''

''அவ்வளவு தானா?''

''வேற என்ன வேணும்?''

''ஒரு ட்ரெஸ், காஸ்மெட்டிக் அயிட்டம் இப்படி ஏதாவது வாங்கிட்டு வந்திருக்கலாமில்ல''

''ஏய்! அவன் என்ன டூர் போயிட்டா வந்திருக்கான். வேலை விஷயமா அலைஞ்சிட்டு வந்திருக்க புள்ளையை கேள்விகேட்டு குடையாதே''-அம்மா அதட்டியதும் முகத்தை சுளித்தாள் உமா.

''உன் பிள்ளை உன்னை மாதிரியே கஞ்சன்மா. என்ன இருந்தாலும் எங்க சிவாண்ணா மாதிரி வருமா? வரும்போது எனக்கு என்னெல்லாம் வாங்கிட்டு வரும் தெரியுமா?''

''உமா! சிவா டில்லியில வேலை பார்க்கிறான். கைநிறைய சம்பளம் வாங்கிட்டு வர்றான். நான் அப்படியா? டையும் ஷூவும் மாட்டிக்கிட்டு தெருத்தெருவா அலையுறேன். கிட்டத்தட்ட நாய் பொழப்பு''

''பரவாயில்லண்ணா. சிலசமயம் உண்மையை ஒத்துக்கிற''

''உமா! அண்ணனை போகவிடு. அப்பாவுக்கு காபி எடுத்திட்டுவா''

''சரிப்பா''- உமா விலகிவிட, ''நீ போப்பா''- என்றாள் அன்னபூரணி.

''சரிம்மா''- என்றவாறு ராம்குமார் தங்கள் அறைக்குள் நுழைய, சமையலறையில் இருந்த உமா சீதாவை கேலியாய் பார்த்தாள்.

''அண்ணி! இப்போ உங்களுக்கு அழைப்புவரும்''

''என்னது?''

''உங்க வீட்டுக்காரர் கூப்பிடுவார் பாருங்க''

''ச்சீ! என்ன உமா இது? இப்படியெல்லாம் பேசிட்டு..?''



''சீதா! ஒரு நிமிஷம் வந்துட்டு போ''- ராம்குமாரின் குரல் கேட்டதும் உமாவின் புன்னகை பெரிதானது.

''சொன்னேன்ல. நீங்க போங்க. நான் சட்னி பண்ணிடுறேன்.''

''அப்பாவுக்கு காபி?''

''நான் கொடுக்கிறேன் நீங்க போங்க அண்ணி''

''இல்ல, நான்.. சமைச்சுட்டு..''

''அட! போங்கன்னு சொல்றேனே. இல்லன்னா அண்ணன் இங்க வந்திடும்''

''சீதா! என்ன பண்றே''- மீண்டும் கணவன் குரல்கொடுக்க, உமாவை நிமிர்ந்தும் பாராமல் வெட்கம் பிடுங்கித்தின்ன, ''இதோ வர்றேங்க''- என குரல் கொடுத்துக் கொண்டே நகர்ந்தாள்.

தயக்கமாய் தன் அறைக்குள் நுழைந்தவளை ஆவலாய் இழுத்து அணைத்துக் கொண்டான் கணவன்.

''விடுங்க. எனக்கு வேலை இருக்கு''

''நாலுநாளா பிரிஞ்சிருந்த கணவன் வந்திருக்கும் போது வேறென்ன வேலை உனக்கு? உன்னைப் பார்க்காம எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரியுமா?''- என்றவாறே மனைவியை இறுக்கிக் கொண்டான் ராம்குமார்.

**வாழ்வினில் ஒளிதரும் தீபத்தை**
**ஏற்றுவேன் கோவிலைப் போலவே**
**குடும்பத்தை போற்றுவேன்-மாலையிட்ட**
**மன்னனோடு மனம்நிறைந்து வாழுவேன்!**

# 2

**கோ**விலில் கூட்டம் அதிகமில்லாமல் காற்றோட்டமாய் இருந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாய் ஒரு சிலரே வந்து போய்க் கொண்டிருக்க, சீதாவும் ராம்குமாரும் அர்ச்சனை கூடையோடு வெளிபிரகாரத்தில் அமர்ந்தனர்.

கருநீல பட்டுடுத்தி தலைநிறைய பூச்சூடி அமர்ந்திருந்த மனைவியை லேசான புன்னகையோடு பார்த்துக் கொண்டிருந்தான் ராம்குமார்.

''என்னங்க! அப்படிப் பார்க்கிறீங்க?''- வெட்கப் புன்னகையோடு கேட்டாள் சீதா.

''சீதா! நீ ஒவ்வொரு நாளும் புதுவித அழகா தெரியுற. அதுவும் இந்தப் புடவை உனக்கு ரொம்ப எடுப்பா இருக்கு''- கணவனின் பாராட்டில் சீதாவின் முகம் செம்மையானது.

''சீதா! புடவைத் தலைப்பால தோளைப் போர்த்திக்க''

''ஏங்க?''

''உன் சந்தன நிறத்தை இந்தப்புடவை இன்னும் தூக்கிக்காட்டுது. முதுகெல்லாம் பளபளன்னு இருக்கு. மூடிக்கோ''- கணவனின் பேச்சுக்கு மறுபேச்சின்றி போர்த்திக் கொண்டாள்.

''ம். இப்பத்தான் இன்னும் அழகா இருக்க''

மெலிதாய் புன்னகைத்தாள். ''சீதா! என்னடா இவன். வாரத்தில் ஒரு நாள் தான் லீவு. அதிலயும் இப்படி கோவிலுக்கு மட்டுமே கூட்டிட்டு போறான்னு பீல் பண்றியா?''

''அச்சோ! கோவிலுக்கு போறது எவ்வளவு புண்ணியம். அதுக்கு போய் யாராவது வருத்தப்படுவாங்களா?''

''தேங்க்ஸ் சீதா. என் மனசுபோலவே பக்குவமா நடந்துக்கிற. உங்க அம்மா உன்னை நல்ல பெண்ணா வளர்த்திருக்காங்க. அத்தைக்குத்தான் நான் நன்றி சொல்லணும்.''

கணவனின் பாராட்டில் மனம் நெகிழ்ந்தாள் சீதா. தன் அன்னையைக் கூட பாராட்டுகிறாரே. இப்படி ஒரு கணவன் கிடைக்க நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும். மனம் நிறைந்து புன்னகையோடு கணவனை ஏறிட்டாள்.

''சீதா! உன்னை தியேட்டர் பீச்சுன்னு வெளியே கூட்டிட்டு போகலாம். ஆனா எனக்கு அதிலெல்லாம் விருப்பம் இல்லை. ஏன் தெரியுமா?''

''ஏங்க?''

''நீ என் மனைவி. என் பொக்கிஷம். உன்னை என் கைக்குள் பத்திரமாய் பொத்திவெச்சுக்கணும்னு நினைக்கிறேன். அடுத்தவங்களோட காட்சிப்பொருளா உன்னைக் காட்ட எனக்கு விருப்பமில்லை.''

''கோவிலுக்கு வந்தா அடுத்தவங்க பார்க்கமாட்டாங்களா?''- என்று கேட்கக் கூட தோன்றாமல் அதற்கும் புன்னகையையே பதிலாய் அளித்தாள்.

''கோவிலுக்கு கூட விசேஷநாள்ல வர்றது எனக்கு பிடிக்காது. கூட்டத்தில நெருக்கி கசக்கி பிழிஞ்சிடுவாங்க. இப்படி சாதாரணநாட்கள்ல வந்தா சாமிதரிசனமும் திருப்தியா பார்க்கலாம். எந்த டென்ஷனும் இல்லாம இப்படி உட்கார்ந்திட்டு போலாம். என்ன சொல்ற?''

''ஆமாங்க. இன்னிக்கு நல்ல தரிசனம். சாமிக்கு அலங்காரம் கூட ரொம்ப அருமையா இருந்தது.''

''சரிசரி. நம்ம குடும்பம் சீதா. நம்ம குடும்பத்தில மொத்தம் எத்தனை பேர் இருக்கோம்?''

''ம். மொத்தம் ஆறு பேர்''

''அந்த எண்ணிக்கைக் கூட வேண்டாமா?''

''என்னது?''

''ஏழாவதா ஒரு ஜூனியர் ராம் வரவேண்டாமா?''

''ஐயோ! கோவில்ல வெச்சு பேசுற பேச்சா இது?''

''ஏன் பேசினா என்ன? அங்கே பார்''- கணவன் சுட்டிக்காட்டிய திசையில் பார்த்தாள் சீதா. பெரிய ஆலமரத்தில் ஏராளமான தொட்டில்கள் கட்டப்பட்டிருந்தன. மஞ்சள், பச்சை நிறத் துணியாலும் மரத்தினால் செய்யப்பட்ட சிறு தொட்டில்களும் கலர்கலராய் வளையங்களும் மரம் முழுக்க தொங்கிக் கொண்டிருந்தது.

''பார்த்தியா. அவங்க எல்லாம் குழந்தை வேணும்னுதானே இதைக் கட்டியிருக்காங்க.''

''அது.. வேண்டுதல்ங்க''


''நாமளும் வேண்டிக்குவோம், நீ தொட்டில் கட்டிப்போடு.''

''எங்க அது கல்யாணமாகி வருஷக்கணக்கா குழந்தை இல்லாதவங்க வேண்டிக்கிட்டு கட்டுவாங்க. நமக்கு கல்யாணமாகி நாலு மாசம்தான் ஆச்சு.''

''இருக்கட்டுமே சீதா. எங்க அம்மாவுக்கு கல்யாணமான பத்தே மாசத்தில நான் பொறந்திட்டேனாம். அப்படிப்பார்த்தா நமக்கு லேட்தானே.''

''என்னங்க நீங்க?''





"பிளீஸ் தேநா. எனக்காக ஒரு தொட்டில் கட்டிப்போடேன்" - கணவனின் கெஞ்சுதல் தேநாவை பேசவிடவில்லை.

"சரிங்க. ஆனா.. தொட்டில் கட்ட துணி வேணுமே."

"இந்தப்புடவைய ஓரமா கிழிச்சிடு" -கணவன் சொன்னதும் பேசாய் அதிர்ந்தாள்.

"என்னங்க! இந்தப்புடவையைப் போய் கிழிக்கச் சொல்றீங்க?" -கேட்டுவிடாதே தொண்டை அடைத்தது.

"ஏன்? இந்தப் புடவைக்கு என்ன?"

"இது... இது என் அம்மா தந்த ஒரே ஒரு பட்டுப்புடவை. கல்யாணத்துக்கு கொஞ்சநாள் முன்னேதான் எடுத்தாங்க."

"உன் அம்மாவுக்கு கலர் சென்ஸ்ஸே கிடையாது தேநா. வெண்ணைக்கட்டி மாதிரி இருக்கிற பொண்ணுக்கு இப்படியா அடர்த்தியான கலர்ல புடவை எடுக்கிறது..?"

தேநாவின் முகம் மாறியது. சற்று முன்பு தானே இந்தப் புடவை எடுப்பாய் இருப்பதாய் கூறினார். அதற்குள் என்ன?

"உன் கலருக்கெல்லாம் லைட் கலர்தான் சரி. சந்தனகலர், சாம்பல் கலர், லைட் பிங்க் கலர்.. இப்படி எடுத்தாத்தான் சூட்டாகும்" -கணவன் சொன்ன நிறங்களில் அம்மா ஒரு புடவை கூட எடுத்ததில்லை.

தன் மகளின் மஞ்சள் நிறத்திற்கு எடுப்பாய் இரத்தசிவப்பு அடர் நீலம், கரும்பச்சை, குங்குமக்கலர், பட்டுரோஜாக்கலர், டார்க்மெரூன் என எல்லாமே கணவன் சொன்ன அடர்த்தியான கலரில்தான் எடுப்பாள்.

திருமணமாகி வந்தபின் கணவன் எடுத்துதந்த இரண்டு புடவைகள் மட்டுமே லைட்கலர். அதைக்கூட குப்பைக்கலர் என்பாள் உமா.

"என்ன தேநா பேசாம இருக்க. சீக்கிரமா தொட்டில் கட்டு. டயமாகுது வீட்டுக்கு போக வேண்டாமா?" - கணவனின் குரலில் திடுக்கிட்டாள்.

"எங்க இன்னிக்கு வேண்டாமே. நாளைக்கு வெள்ளிக்கிழமை நாளைக்கு கட்டலாமே."

"ஏன்? இன்னிக்கு கட்டினா என்ன?"

"இல்லங்க. இந்தப் புடவையை..."

"கிழிக்க மனசு வரலையாக்கும்?" - கோபமாய்க் கேட்டான்.

"அ..அப்படியில்லீங்க. இது கருநீலம். தொட்டில் கட்டுறதுக்கு மஞ்சள், சிவப்பு, பச்சை இப்படி ஏதாவது ஒரு நிறத்திலதான் கட்டணும்"

"அப்படின்னு உனக்கு யார் சொன்னா?"

"யா.. யாரும் சொல்லலீங்க.. மரத்தில் அந்தக் கலர்தானே கட்டியிருக்காங்க."

"அது அவங்க விருப்பத்தை பொறுத்தது. வேண்டிக்கிட்டு கட்டுறதுக்கு எந்தக் கலரா இருந்தா என்ன?"

"அப்படி இல்லீங்க. அது... வந்து..."

"ஓ.கே. எனக்கு புரிஞ்சு போச்சு. உனக்கு என்னைவிட, என் ஆசையை விட இந்த புடவைதான் பெரிசாப் போச்சு இல்ல, சரிவிடு. கிளம்பலாம்" - முகம் கறுத்துவிட சட்டென எழுந்தான் ராம்குமார்.

பதறிப்போனாள் தேநாலஷ்மி. "வீட்லயோ வெளியிலயோ புருஷன் மனசு கோணாம நடந்துக்கணும். புருஷன் கோபப்படும்போது நாமதான் பணிஞ்சு



போகணும். விட்டுக் கொடுத்து வாழ பழகிக்கணும்" - அம்மாவின் அறிவுரை காதில் ஒலித்தது.

"விட்டுக் கொடுப்போமே. வெறும் புடவைதானே. இது இல்லாவிட்டால் வேறு வாங்கித்தரப்போகிறார். அதற்கேன் பிரச்சனை செய்ய வேண்டும்." -தன் மனதை சமாதானம் செய்தவாறே தானும் எழுந்தாள்.

"வாங்க. தொட்டில் கட்டிட்டு வீட்டுக்குப் போகலாம்."

"வேண்டாம் வேண்டாம். கடவுளிடம் வேண்டும் போது உளமார வேண்டிக்கணும் மனசை வருத்தத்தோட வேண்டிக்கக் கூடாது" - விட்டேற்றியாய் சொன்ன கணவனின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

"எனக்கு எந்த வருத்தமும் இல்லங்க. உங்களை விட இந்தப்புடவை ஒன்றும் எனக்கு பெரிதில்லை."

"நிஜமாத்தான் சொல்றியா?"

"ஆமாங்க. வாங்க போலாம்" - கணவனின் கைபற்றியவாறே அந்த ஆலமரத்தடியை நெருங்கினாள். புடவையின் முந்தானைப் பகுதியை கணவனிடம் நீட்டினாள்.

"புதுப்புடவை சட்டுன்னு கிழியாது. நீங்களே கிழிச்சுக்கொடுங்க. நான் கட்டுறேன்."

"சரி" - என்றவன் தன் பலத்தை திரட்டி ஒரே வீச்சில் கிழித்தான். "டர்" -என மனதும் கிழிந்தது போல் உணர்ந்தாள் தேநா. மறுகணமே "சே!சே! இதற்கெல்லாம் வருத்தப்படக்கூடாது" - என தன்னையே தேற்றிக்கொண்டாள்.

கணவனின் விருப்பப்படியே தொட்டிலைக் கட்டிவிட்டு கடவுளை வேண்டிக்கொண்டு வெளியே வந்தனர். ஓரமாய் இருந்த தனது பைக்கை உசுப்பினான் ராம்குமார்.

"உட்கார் தேநா. போற வழியில காபி சாப்பிட்டு போவோமா?"

"வேண்டாங்க. நேரமாச்சு. வீட்ல போய் காபி குடிச்சுக்கலாம்."

"தேங்க்ஸ் தேநா. எனக்கும் வெளியே சாப்பிடறது பிடிக்காது. வீட்ல அதுவும் உங்கையால குடிக்கிற காபிக்கு ஈடு இணை எதுவுமே இல்லை தேநா."



"டைம் இஸ் கோல்டு'னு சொன்னா, நீ ஏன் அதை ஒத்துக்க மாட்டேன்கிற?"

"அதை அடமானம் வைக்க முடியாதே!"

- [illegible], சித்தாபுரம்.

பதிலேதும் பேசாமல் அமைதியாகவே வந்தாள்.

"அப்புறம் தேநா. இந்த புடவையை அம்மா கண்ல காட்டிடாதே"

"ஏன்?"

"இந்த மாதிரி வேண்டிக்கிட்டதை வெளியே சொல்லக்கூடாதாம். சொன்னா பலிக்காது. அம்மா புடவையைப் பார்த்து ஏன் கிழிஞ்சிருக்குன்னு கேட்டா நீ உண்மையை உளறிக்கொட்டிடுவியே. உனக்கு சாமர்த்தியமா ஒரு பொய் கூட சொல்லத் தெரியாது."

குறைபட்டுக் கொள்கிறானா? பாராட்டுகிறானா என்று புரியாமல் மௌனமாக இருந்து கொண்டாள்.

[illegible]ந்ததும் புடவையை கழற்றி

மடிச்சிவெச்சிடு''

''ச. சரிங்க.''

''இனிமே இந்தப் புடவையைக் கட்டவேண்டாம். கிழிச்ச புடவை எதுக்கு? பழைய பாத்திரம் போடும்போது இதையும் போட்டுடு''

மனம் லேசாய் வலிக்க, ''சரிங்க'' - என்றாள்.

''உனக்கு ஒண்ணும் வருத்தமில்லையே சீதா?''

''சேச்சே! அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல''

''ம். இது தான் சீதா உங்கிட்ட எனக்கு ரொம்ப பிடிச்ச குணம்'' - வீட்டை நெருங்கிவிட வேகத்தைக் குறைத்தான். லேசாய் முனகியவாறே வண்டி நின்றுவிட. இருவரும் இறங்கினர்.

புடவை தலைப்பை நாசூக்காய் மறைத்து செருகிக் கொண்டே, வீட்டினுள் நுழைந்தவளை உற்சாகமான குரல் வரவேற்றது.

''ஹாய் அண்ணி! ஹௌ ஆர் யூ?'' - கணீரெனக் கேட்ட குரலில் நிமிர்ந்தவள் மலர்ந்து சிரித்தாள்.

''அட சிவராம்! வாங்க. நீங்க எப்போ வந்தீங்க?''

''வந்து ஒன் அவர் ஆச்சு அண்ணி. எப்படி இருக்கீங்க?''

''நல்லா இருக்கோம். இருங்க, காபிகொண்டு வர்றேன்.''

''அண்ணி. இருங்க அண்ணி. உங்களுக்கெல்லாம் ஒரு குட்நியூஸ் சொல்லத்தான் வெயிட் பண்ணிட்டு இருக்கேன். ப்ளீஸ் ஸிட் டவுன்'' - அருகே இருந்த நாற்காலியைக் காட்டினான் துடிப்பான துள்ளலான சிவராம்.

''என்ன? என்ன குட்நியூஸ்?''

''அதைத்தானே அண்ணி நாங்களும் ஒரு மணிநேரமாய் கேட்டுக்கொண்டிருக்கோம். சொல்லாம கடுப்பேத்துறானே'' - உமா சிணுங்கினாள்.

''வெயிட்மா. இன்னும் ஒரு ஆள் பாக்கி. அண்ணனும் வந்துடட்டும்''

வண்டிச்சாவியோடு உள்ளநுழைந்த ராம்குமார் தம்பியைப் பார்த்ததும் லேசாய் சிரித்தான். ''என்னடா? திடீர்னு வந்து நிக்கிற. ஏதாவது லீவா?''

''இப்பவாவது சொல்லேண்டா'' - அன்னபூரணி அவசரப் படுத்தினாள்.

''சொல்றேன் சொல்றேன்'' - என்றவாறு எழுந்து நின்று கொண்டான்.

''இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால் சிவராம் என்கிற நான் இனிமேல் தங்களைப் பிரிந்து டெல்லி போவதாக இல்லை.'' -என நிறுத்தினான்.

''ஏன்? என்னாச்சு? வேலையை விட்டுட்டியா?''

''நோநோ. இனிமேல் சென்னை அடையாறில் உள்ள எங்கள் கிளை நிறுவனத்திற்கு நான்தான் புல் இன்சார்ஜ். பதவி உயர்வோடு உங்களுடனே இருக்கப்போகிறேன்.''

''வாவ்!'' -உமா குதித்தாள்.

''அதோடு இனி என் சம்பளம் பதினெட்டாயிரமும் உமாவின் திருமண சேமிப்பாக சேரப்போகிறது. கூடியவிரைவில் இந்த வீட்டில் டும்டும் கொட்டப்போகிறது.''

''அட! பொண்ணு எதுவும் பார்த்து வெச்சிருக்கியாண்ணா?''

''இல்லை. மாப்பிள்ளை பார்த்து வெச்சிருக்கேன்.'' - ரகசியமாய் சொன்ன சின்ன மகனைப் பார்த்து வியந்தார் உலகநாதன்,

''என்னப்பா? பெரிய பெரிய விஷயமாச் சொல்ற?''



''ஆமாம்ப்பா. இனிமே எல்லாம் நல்ல விஷயம்தான் நடக்கும். அண்ணி! எனக்காக சூடா ரவாகேசரி பண்ணித்தர்றீங்களா? ப்ளீஸ்''

''இதோ செய்து தர்றேன். இதுக்கு ஏன் ப்ளீஸ் எல்லாம்.''

''அண்ணின்னா அண்ணிதான். மை ஸ்வீட் அண்ணி'' - தம்பியின் பேச்சில் முகம் கறுத்த கணவனை சற்றே பயமாய்ப் பார்த்தாள் சீதா.

# 3

**உன்னிடம் நான் கண்ட**
**பெருமைகள் பலவுண்டு- கோபம்**
**வேகம் மாறாதோ மாறும்**
**நன்னாள் எந்நாள் காண்பேனோ?**

கணவனின் முகம் மாறியதைக் கண்டு துணுக்குற்று கணவனை நெருங்கினாள் சீதா.

''என்னங்க! முகமெல்லாம் ஒரு மாதிரி இருக்கு?''

''அண்ணா! என்னாச்சு?''

''என்னப்பா ராம். உடம்புக்கு எதுவும் பண்ணுதா?'' - அனைவரும் சூழ்ந்து கொள்ள சற்று தடுமாறினான்.

''லேசா தலைவலிக்குது. காபி குடிச்சா சரியாகிடும்.''

''அண்ணி! முதல்ல அண்ணனுக்கு சூடா காபி கொடுங்க'' - என்ற தம்பியை நிமிர்ந்து பார்த்தான் ராம்குமார்.

''நீ. கேசரி கேட்டியே.''

''அதை எப்பவேணா சாப்பிடலாம் அண்ணா. முதல்ல நீ காபி சாப்பிட்டுட்டு ரெஸ்ட் எடு.''

''சரி. நான் போய் கொஞ்சம் படுத்து எழுந்துக்கிறேன். நைட் பேசலாம்.'' என்றவாறு தன் அறைக்குள் நுழைந்து கொண்டான். கையில் காபியோடு அறைக்குள் வந்த மனைவியிடம் சீறினான்.

''இவன் ஏன் இப்படிப் பண்றான்?''

''யாருங்க?''

''சிவாதான்.''

''ஏன்? சிவாவுக்கு என்ன?''

''அவனை யார் டெல்லி வேலையை விடச்சொன்னது?''

''ஏங்க அவரா வேலையைவிட்டார்? மேலிடத்தில இருந்து பிரமோஷனோட ட்ரான்ஸ்பரும் தந்திருக்காங்க. இது நல்ல விஷயம்தானே. முதல்ல காபிய குடிங்க.''

''எதை நல்ல விஷயம்ன்ற?''

''அவர் நம்ம கூட வந்து இருக்கிறது''

''இது நல்ல விஷயமா? உனக்கு தலையில ஒண்ணுமே இல்லையா?''

''ஏங்க? இப்படியெல்லாம் பேசுறீங்க?''

''பேசாம? என் நிம்மதியே போச்சு''

''ஏங்க?''

''சீதா! நான் நாலாயிரமோ கூட கொஞ்சமோ சம்பளம் வாங்குறேன். அவனைப் பார்த்தியா? பதினெட்டாயிரம் வாங்குறானாம். அதைஎங்கிட்டயே சொல்லிக் காட்டுறான்''

''இதுல என்னங்க இருக்கு? அவரோட படிப்பு திறமையால முன்னேறி இருக்கார். அது நமக்கும் பெருமைதானே''

''என்ன பெருமை? இனிமே எனக்கு இந்த வீட்ல என்ன மரியாதை கிடைக்கும். எல்லாரும் அவனைத்தான் தலையில தூக்கிவெச்சிட்டு கொண்டாடுவாங்க. நீ கூட என்னை மதிக்கமாட்டே''

''தப்புங்க. பொறாமைப்படுறது ரொம்பத் தப்பு. சிவா யார்? உங்க கூட பொறந்த தம்பிங்க. அவர்மேல ஏன் இவ்வளவு பொறாமையும் கோபமும் வருது உங்களுக்கு?''

''தம்பியா இருந்தா என்ன? வாயும் வயிறும் வேறதானே''

''சரி விடுங்க. சத்தமா பேசாதீங்க. காபியை குடிங்க''

''காபியும் வேண்டாம். ஒண்ணும் வேண்டாம்''

''கேட்டீங்களே!''

''அப்போ கேட்டேன். இப்ப வேண்டாம்''

''சரி. படுத்துக்கங்க'' என்றவாறு எழுந்தாள் சீதா.

''என்ன? மச்சினனுக்கு கேசரி செய்து கொடுக்கப் போறியா?'' கோபமாய் கேட்டான்.

''என்னாச்சுங்க உங்களுக்கு? நைட் சாப்பாடு செய்ய வேண்டாமா?''

''ஒண்ணும் தேவையில்லை. நீ பேசாம எம்பக்கத்துல உட்கார்''

''என்னங்க இது? வீட்ல இத்தனைபேர் இருக்கும் போது விளக்கு வெக்கிற நேரம் நாம ரூமுக்குள்ள இருந்தா.. அது நல்லாவா இருக்கும்?''

''நீ என் பெண்டாட்டி தானே?''

''என்னங்க?''

''எம் பெண்டாட்டி கூட நான் இருக்கிறதுல என்ன தப்பு''

''இன்னிக்கு ஏன் இப்படிப் பண்றீங்க?''

''சீதா! மத்தவங்க என்னை அலட்சியப்படுத்தினா பரவாயில்ல. ஆனா நீயும் என்னை ஒதுக்கிடாதே. பிளீஸ் சீதா'' அழுகுரலில் கெஞ்சிய கணவனை பரிவாய் தலைவருடினாள்.

''இதோ பாருங்க! யார் எவ்வளவு உயரத்தில் இருந்தாலும் எனக்கு நீங்கதாங்க உசத்தி. உங்களை நான் எப்படி உதாசீனப்படுத்துவேன்?. நீங்க என் கணவர் மட்டுமில்லங்க. என் கடவுள். அப்படித்தான் நான் நினைச்சிட்டு இருக்கேன்.''

''சீதா'' மனைவியின் கையைப் பற்றிக் கொண்டான்.

''இனிமே இப்படியெல்லாம் பேசக்கூடாது. சரியா?''

''சரி''

''அமைதியா படுத்துத் தூங்குங்க.''

''சீதா! நீ எம்பக்கத்துலயே இரேன்''

''என்னங்க சின்னக் குழந்தை மாதிரி...''

''பிளீஸ் சீதா. எனக்கு உன்மடி மேல படுக்கணும் போல இருக்கு. உட்காரேன்.''

கணவனின் அருகே அமர்ந்தாள். அவள்து மடியில் தலை வைத்துக் கொண்டான்.

''சீதா''

''ம்?''



''சிவா உமாவுக்கு ஏதோ மாப்பிள்ளை பார்த்திருக்கிறதா சொன்னாவில்ல''

''ஆமா''

''அப்போ எனக்கு அந்த அக்கறை இல்லன்னு அம்மா நினைக்க மாட்டாங்களா?''

''ம்ப்ச்! நீங்களா ஏன் இப்படி எதை எதையோ கற்பனை பண்றீங்க?''

''இல்ல சீதா உனக்குத்தான் புரியல்ல. அவங்க மனசுல நிச்சயமா அந்த எண்ணம் வந்திருக்கும். இனிமே என்னை தூசிமாதிரி நினைப்பாங்க பாரேன்''

சீதாவின் மனம் கலங்கியது. ஆறடி உயரம் வளர்ந்திருக்கிறாரே தவிர இன்னும் குழந்தையாகவே இருக்கிறாரே. குழந்தைத்தனமா இல்லை குழப்பவாதியா? தனக்குத் தானே கற்பனை செய்து கொண்டு பேசுபவரை எப்படி தேற்றுவது?

''என்ன சீதா! எதுவுமே பேசமாட்டாங்கிற''

''இதோபாருங்க. இதெல்லாம் தேவையில்லாத கற்பனை. உமா உங்களை மாதிரியே சிவாவுக்கு தங்கை. அவளுக்கு நல்ல வரனா பார்க்க வேண்டிய கடமை அவருக்கும் இருக்கு. அவர் அவரோட கடமையைத்தான் செய்திருக்கிறார்.''

''அப்போது நான்..''

''இருங்க உங்களுக்கும் கடமை இருக்கு. உங்களால முடிஞ்ச பணத்தை புரட்டி அத்தை மாமாகிட்ட கொடுங்க. மாப்பிள்ளையைப் பத்தி விசாரிங்க. நல்ல இடம்னு தோணினா கல்யாணவேலையை முன்னே நின்று கவனிங்க. நீங்க இந்த வீட்டுக்கு மூத்தபுள்ளைங்க.

இதெல்லாம் உங்க கடமை. சிவா சொன்னதுமே நீங்க உற்சகமா மாப்பிள்ளையைப் பத்தி விசாரிச்சிருந்தா எல்லோருமே சந்தோஷப்பட்டிருப்பாங்க.

இப்பவும் ஒண்ணும் கெட்டுப்போயிடல. நைட்சாப்பிடும்போது சிவாகிட்ட விசாரிங்க. ஒண்ணாச் சேர்ந்து பேசிமுடிங்க.''

''அவன் எங்கிட்ட சொல்வானா?''

''உங்க தம்பிக்கு உங்கமேல ரொம்பப் பிரியம். மரியாதையும் கூட. நீங்கதான் இப்படி ஒதுங்கிப் போறீங்க.''

''இல்ல சீதா. அவன் என்னைவிட அழகு. படிப்பும் சம்பாத்தியமும் கூட என்னைவிட அதிகம்தான். என்னை ரொம்ப அலட்சியமா நினைப்பான்.''

சீதாவிற்கு தலையை வலித்தது. இனி இவனிடம் பேசிப்பயனில்லை. திரும்ப திரும்ப சொல்லி தன்னை பைத்தியமாக்கி விடுவான் என்று தோன்ற.

''நீங்க படுங்க. நான் புடவை மாத்திட்டு காபிகுடிச்சிட்டு வர்றேன். ரொம்ப தலைவலிக்குது''

''சீக்கிரம் புடவைமாத்து, நான் வெளியே என்னை நடக்குதுன்னு பார்த்திட்டு வர்றேன்.'' என கட்டிலை விட்டு இறங்கினான் ராம்குமார்.

புடவை மாற்றிவிட்டுத் திரும்பியவள் அதிர்ந்தாள். கதவிடுக்கின் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தான் ராம்குமார். இதென்ன திருட்டுத் தனம். கோபமாய் கணவனை அழைத்தாள்.

''என்ன பண்ணிட்டு இருக்கீங்க.?''

''அங்கே பாரு. உங்கொழுந்தன் வாங்கிட்டு வந்த பொருளையெல்லாம் கடைபரப்பிட்டு இருக்கான். உமாவோட முகத்தில எவ்வளவு சந்தோஷம் பார்''

''அதையேன் இப்படி ஒளிஞ்சுநின்று பார்க்கிறீங்க?''

''ம்ப்ச்! என்னைப்பத்தி ஏதாவது பேசுறாங்களான்னு பார்த்தேன்''

''ஒட்டுக்கேட்கிறீங்களா?'' சீதாவின் குரலும் முகமும் மாறியது.

''என்ன நீ? என்னையே விசாரணை பண்றியா? எனக்கு இதெல்லாம் பிடிக்காது'' கறாராய் சொன்னவனை முறைத்துவிட்டு கதவைத் திறந்து வெளியேறினாள்.

கதவு திறந்த ஒலியில் நிமிர்ந்தான் சிவா. ''வாங்க அண்ணி. அண்ணனுக்கு தலைவலி எப்படி இருக்கு?''

''சும்மா லேசானதலைவலிதான். படுத்திருக்கார்.''

''உட்காருங்க அண்ணி. உங்களுக்கு என்ன வாங்கிட்டு வந்திருக்கேன் பாருங்க'' சிவா உற்சாகமாய்ச் சொல்ல, தன் அறையை ஒருமுறை திரும்பிப் பார்த்தான்.

''இருக்கட்டும் சிவா. நான் சமைக்கணுமே. அத்தே! நைட்டுக்கு என்ன பண்ணட்டும்.?''

புதுப்புடவையை விரித்துப் பார்த்துக் கொண்டிருந்த அன்ன பூரணி, குழம்பு பொரியல் எல்லாம் இருக்கு. மிளகுரசம் கேட்டான் சிவா. சாப்பிடும்போது சூடா செய்துக்கலாம். இப்ப உட்காரு'' மருமகளின் கையை பற்றி தன் அருகே அமர்த்தினாள்.

''இதோ பாரு. உனக்கும் உமாவுக்கும் ஒரே மாதிரி பட்டுப் புடவை எடுத்துட்டு வந்திருக்கான். உன் கலருக்கு எடுப்பா இருக்கும்'' என கையிலிருந்த புடவையை சீதாவிடம் கொடுத்தாள்.

புடவையை பார்த்த சீதாவிற்கு புல்லரித்துப் போயிற்று. சற்று முன் கிழித்துவிட்டேமே என்று பதறிய கருநீலப்பட்டுப்புடவை கெட்டியான ஜரிகையுடன் பளபளத்தது. உடம்பு முழுக்க மழைத்துளி புட்டா மின்ன அகலமான பார்டருடன் இருந்த புடவையை ஆவலாய் எடுத்துக் கொண்டாள்.

''புடிச்சிருக்கா அண்ணி''

''ரொம்பப் பிடிச்சிருக்கு சிவா''

''தேங்க்ஸ் அண்ணி. ரெண்டும் ஒரே கலர் ஒரே டிசைன். பார்த்த உடனே பிடிச்சுப் போச்சு. பட், உங்களுக்கு பிடிக்குமோ என்னவோன்னு பயந்திட்டே இருந்தேன்.''

''அட நீ ஒண்ணுண்ணா. ராம் அண்ணா எடுத்துதர்ற குப்பைக் கலர் புடவையையே அண்ணி ரொம்ப சந்தோஷமா கட்டிப்பாங்க. இதைப் பிடிக்காம போகுமா?'' உமா துடுக்காய்ச் சொல்ல.

''சேச்சே! அவர் எடுத்துத் தர்றது அழகாய்த்தான் இருக்கும்'' என்றாள் சீதா. ''அண்ணி! அநியாயத்துக்கு ஏமாளியா இருக்கீங்களே''

''உமா இப்படியெல்லாம் பேசக்கூடாது. நாளைக்கே கல்யாணமாகி போயிட்டா நீயும் இப்படித்தான் சொல்லுவ. அப்பத்தான் குடும்பவண்டி சிக்கல் இல்லாமல் ஓடும்'' அம்மா சொல்ல அவசரமாய் மறுத்தாள் உமா.

''நோ நோ. ஒரு ஜாக்கெட் பிட் எடுத்தாக்கூட என்னைக் கூட்டிட்டு போய் என் விருப்பப்படி தான் எடுக்கணும்னு எம்புருஷன் கிட்ட முதல்



லயே சொல்லிடுவேன்.''

''அவன் வாய் மேலயே போடுவான்''

''எதுக்கு? உடுத்திக்கிறது நான். என் விருப்பத்துக்கு எடுக்கிறதுக்கு எனக்கு உரிமை இல்லையா?''

''பெண்களோட உரிமையெல்லாம் அம்மா வீட்டோட போயிடுது''

''யார் சொன்னது? அண்ணி உங்களை மாதிரி பணிஞ்சு போறவங்களைத் தான் ஏறி மிதிப்பாங்க. முதல்லயே நிமிர்ந்து நிற்கணும். யாருக்காகவும் எதுக்காகவும் நம்ம விருப்பு வெறுப்ப மாத்திக்கக் கூடாது. நம்ம உரிமையை விட்டுக் கொடுக்கவும் கூடாது'' உமா சற்று உரத்தகுரலில் கூற படீரெனக் கதவைத் திறந்து வேகமாய் வெளியே வந்தான் ராம்குமார்.

''என்ன பெரிய மாநாடு போட்டுட்டு இருக்க. வீட்டுச்சத்தம் வெளியே கேட்கக் கூடாதுன்னு உங்கிட்ட எத்தனை தரம் சொல்லியிருக்கேன். நீ கெட்டுப் போறது போதாதுன்னு இவளையும் கெடுக்கிறியா? விளங்குன மாதிரி தான்'' அண்ணனின் வார்த்தையில் முகம் சுணங்கினாள் உமா.

மற்றவர்களின் முகமும் மாறிவிட சிவா சிரித்தவாறே அண்ணனை ஏறிட்டான்.

''என்ன அண்ணா. சும்மா ஏதோ விளையாட்டுக்கு பேசுறதுக்குப் போயி கெட்டுப்போறது அப்படி இப்படின்னு பெரிய வார்த்தையெல்லாம் சொல்ற.''

''எது? இது விளையாட்டுப் பேச்சா? இப்படியே போய் புருஷன் வீட்லயும் போய் பேசட்டும். அவன் நாலு போட்டு நம்ம வீட்டுக்கு அனுப்பி வெச்சிடுவான்.''

''ராம். என்னடா பேச்சு இது? அவ உன் தங்கை'' அம்மா அதட்டினாள்.

''அதுக்காக இப்படி பேசுறவளை கொண்டாடச் சொல்றீங்களா?''

''அண்ணா! இப்ப அவ என்ன தப்பா பேசிட்டா.?''

''அப்போ அவ பேசினதை சரிங்கிறியா?''

''ஆமா. பொண்ணுங்க எப்பவுமே தன்னம்பிக்கையோடவும் சுயகவுரவத்தோடவும் இருக்கணும். அண்ணா தன்னை ஒரு அடிமையா அவங்க எப்பவுமே நினைச்சிக்கக் கூடாது. அதனாலதான் ஒடுங்கிப்போயிடுறாங்க.''

''டேய்! எல்லாம் இப்பப் பேசுவடா. நாளைக்கு கல்யாணமான பிறகும் இதையே சொல்லு பார்ப்போம்.''

''கண்டிப்பா சொல்வேன். இதுல என்ன இருக்கு? நம்மையே நம்பிவர்ற ஒரு பொண்ணோட சந்தோஷம்தானே நமக்கு முக்கியம். அவங்களை அடிமையாக்கி கண்ணீர் சிந்தவைப்பது எந்த விதத்துல நியாயம்? உனக்குத் தெரியுமா அண்ணா? எந்த வீட்டில் பெண்கள் மனம்வருந்தி கண்ணீர் வடிக்கிறாளோ அங்கே சகல சவுபாக்கியமும் வெளியேறிவிடுமாம்.

இப்போ நம்ம அம்மா அப்பாவையே எடுத்துக்க. நம்ம அப்பாவுக்கு. வெஜிடபிள் குருமா அறவே ஆகாது. அதனால அம்மாவும் அதை செய்வதும் இல்லை. சாப்பிடுவதும் இல்லை. ஆனா அம்மாவுக்கு சுருட்டு வாடையே பிடிக்காது. அதை அப்பா விட்டார்களா?''

''டேய் பையா. முன்னெல்லாம் பதினைஞ்சு சுருட்டு பிடிப்பேன் இப்போ மூணே மூணுதான் பிடிக்கிறேன்'' உலகநாதன் பெருமையாய் கூறினார்.

''முழுசா விடமுடியலியே அப்பா. இதுல இருந்து என்னதெரியுது?

ஆண்களுக்காக பெண்கள்தான் விட்டுக் கொடுக்கிறாங்க. பெண்களுக்காக நாமே எதையுமே விட்டுத்தர்றதில்ல. இது கூட ஒருவிதத்தில் ஆணாதிக்கம் தானே?''

''இப்படியே பேசிட்டு திரி. வர்றவ உன்னை காலுக்குக் கீழே வெச்சுக்குவா''

''இல்ல அண்ணா. யாரும் அடிமையாகவும் கூடாது. ஆதிக்கமும் செலுத்தவும் கூடாது. பரஸ்பரம் அன்பை பரிமாறிக்கிட்டாலே போதும். ஒருத்தரோட விருப்பத்தை அடுத்தவங்க மேலே திணிக்காம இருந்தாலே இல்வாழ்க்கை இனிக்கும்'' சிவா புன்னகையோடு சொல்ல. ராம்குமார் தன் கடுப்பை மறைக்க இயலாமல் மனைவியிடம் திரும்பினான்.

''எய்! நீ ஏன் வாயைப் பொளந்துகிட்டு உட்கார்ந்திருக்க. போ. போய் வேலையைப்பார். வெட்டிப் பேச்சு பேசி நேரத்தைக் கெடுக்காதே''

சீதா பதறி எழுந்து சமையலறைக்குள் நுழைந்து கொள்ள, ராம்குமார் சட்டையை மாட்டிக் கொண்டு வெளியேறினான். சிவா அமைதியாய் அன்னையிடம் திரும்பினான்.

''அண்ணன் இன்னும் மாறவே இல்லையாம்மா?''

''இதெல்லாம் பிறவி குணம்ப்பா. மாறாது. ஏதோ தெய்வ செயலா ஒரு தங்கமான பொண்ணு கிடைச்சிருக்கு. இல்லன்னா இவன்கூட எந்தப் பெண்ணும் குடும்பம் நடத்திக்க மாட்டா''

''ஆமாண்ணா. அண்ணி ரொம்பப் பாவம் தெரியுமா? இவன் என்ன சொன்னாலும் தலையாட்டிப்பாங்க. ஒருவார்த்தை கூட எதிர்த்தோ மறுத்தோ பேசமாட்டாங்க'' உமா சலிப்போடு சொன்னாள்.

அன்ன பூரணி மகளைப் பார்த்தாள். ''உமாக்கண்ணு, நீயும் அண்ணி மாதிரி பொறுமையையும் நிதானத்தோடும் இருக்க பழகிக்கம்மா கல்யாண வாழ்க்கைக்கு அதுதான் முக்கியம்''

''சரிம்மா. எனக்குத் தெரியாதா? அதையெல்லாம் நான் பார்த்துக்கிறேன். அண்ணா! நீ பார்த்திருக்கிற மாப்பிள்ளை எப்படி? ராம் அண்ணா மாதிரியா? உன்னை மாதிரியா?''

''அட! அதுக்குள்ள மாப்பிள்ளையைப் பத்தி விசாரணையா?''

''அதுக்கில்லண்ணா. ஒருவேளை ராம் அண்ணா மாதிரி இருந்திடக்கூடாதே அதான் கேட்கிறேன்.''

''நான் பார்த்தவரைக்கும் மாப்பிள்ளை ரொம்ப நல்ல வரும்மா. என் கூடத்தான் வேலைப்பார்த்திட்டு இருக்கார். நான் இங்க வந்திட்டதால இப்ப அவர்தான் என்பதவியில இருக்கார். நல்ல சம்பளம். நீ ராணி மாதிரி வாழலாம்'' சிவா சொல்லிக் கொண்டிருக்கும்போதே நெய்மணத்துடன் கேசரியைக் கொண்டு வந்தாள் சீதா.

''நல்ல விஷயம் பேசுறீங்க. இனிப்பு சாப்பிட்டுட்டே பேசுங்க''

''அண்ணி..'' சந்தோஷமாய் நிமிர்ந்தான் சிவா. எளிமையான அழகோடும் கனிவோடும் மென்மையான புன்னகையோடும் நின்றவளை விழிகளை விரித்துப் பார்த்தான். புன்னகைத்தாள் சீதா.

''என்ன சிவா?''

''அண்ணி! என் அம்மா மாதிரியே தெரியுறீங்க அண்ணி'' நெகிழ்ந்து சொன்னவனை தன் பிள்ளையாகவே எண்ணிக் கொண்டாள் சீதா.



நீ காற்று நான் மரம்-என்ன
சொன்னாலும் தலையாட்டுவேன்
நீ மழை நான் பூமி - எங்கு
விழுந்தாலும் ஏந்திக்கொள்வேன்!

# 4

வட்ட வட்டமாய் வெட்டி வைத்திருந்த உருளைக்கிழங்கை கடலை மாவில் மூழ்கவைத்து எண்ணெயில் போட்டுக் கொண்டிருந்தாள் சீதா. உருளைக்கிழங்கு வெந்து கொண்டிருக்க, பெரியவெங்காயத்தை தோல் உரித்து வட்டமாக நறுக்கத் தொடங்கினாள்.

சமையலறைக்குள் நுழைந்த ராம்குமார் மனைவியின் அருகில் வந்தான்.

''என்ன பண்றே சீதா?''

''இன்னிக்கு ஸண்டே இல்ல. எல்லாரும் வீட்ல இருக்கீங்களே. அதான் பஜ்ஜி போட்டுட்டு இருக்கேன்'' என்றவாறு எண்ணெயில் மிதந்த பஜ்ஜிகளை திருப்பிப் போட்டாள்.

''என்ன வட்டமா இருக்கு பஜ்ஜி''

''உருளைக்கிழங்கு பஜ்ஜிங்க?''

''இது எனக்கு ஒத்துக்காதுன்னு தெரியுமில்ல. பிறகேன் பண்ற?''

''இல்லங்க சிவாவும் உமாவும் கேட்டாங்க. இது அவங்களுக்கு. உங்களுக்கு மாமாவுக்கெல்லாம் வெங்காய பஜ்ஜி''

''என்ன சட்னி பண்ணியிருக்கே?''

''புதினாச் சட்னி''

''ஏன்? தேங்காய் சட்னிதானே வெப்பே. இப்போ என்ன புதுசா?''

''டேய்! புதினா பரெஷ்ஷா இருந்ததுடா. நான்தான் வாங்கிட்டு வந்தேன். நான் தான் சட்னி வெச்சேன். சாப்பிட்டுப்பாரு. புதினா உடம்புக்கு ரொம்ப நல்லதுடா''

''ம்க்கும். எல்லாத்துக்கும் ரெடியா பதில் வெச்சிருப்பீங்களே'' ராம்குமார் முணுமுணுத்துக் கொண்டே வெளியேற சிவாவின் குரல் கேட்டது.

''அண்ணி! எவ்வளவு நேரம்தான் அடுப்பிலேயே நிற்பீங்க? சீக்கிரம் வாங்க''

''நீங்க விளையாடுங்க சிவா. நான் பஜ்ஜி போடுறேன்''

''போட்டவரைக்கும் போதும் வாங்க. நீங்க வந்தபிறகுதான் இன்னிக்கு கேம் ஸ்டார்ட் ஆகும்'' உமா சொல்ல, அடுப்பை அணைத்து விட்டு சூடான பஜ்ஜிகளை தட்டுகளில் வைத்து புதினாசட்னி கிண்ணத்தையும் எடுத்துக் கொண்டு வந்தாள்.

கூடத்தின் தரையில் அனைவரும் அமர்ந்திருக்க உமாவின் கையில் டேப்-ரிக்கார்டரும் சிவாவின் கையில் பெரிய பந்தும் இருந்தது. உலகநாதன் தொலைக்காட்சியில் மூழ்கியிருக்க, சிவா அழைத்தான்.

''அப்பா! மொதல்ல அதை ஆப் பண்ணுங்க. அண்ணி வந்தாச்சு''

''அடடா! பஜ்ஜி வாசனை மூக்கைத் துளைக்குதே. முதல்ல பஜ்ஜி. அப்புறம் தான் உன் விளையாட்டு'' என பஜ்ஜியை சுவைக்க ஆரம்பித்தார். அனைவருமே பாராட்டுதலோடு சாப்பிட எதுவும் பேசாமல் அமைதியாய் சாப்பிட்டான் ராம்குமார்.

''அண்ணா! நீயும் வந்து உட்கார். நாம் இப்படி வின்ஸ்ஸா வீசுபால்வு

நாளாக்க'' சிவா அழைக்க, ஆர்வமில்லாமல் நிமிர்ந்தான் ராம்குமார்.

''விளையாட்டா? என்னவிளையாட்டு?''

''மியூசிக் பால் அண்ணா! நாம அடிக்கடி விளையாடுவோமே''

''ஓஹோ! இப்ப டி.வி.யில படம் போட்டுடுவாங்களே. இன்னொரு நாள் விளையாடுவோம்.''

''ஹா ஹ்ம் நாங்க எல்லா ஏற்பாடும் பண்ணியாச்சு. இன்னிக்கு டி.வி. கட்''

''என்னடா ஏற்பாடு பண்ணியிருக்கீங்க?'' என்றவாறு வந்து அமர்ந்த அன்னையிடம் நெருங்கி அமர்ந்தான் சிவா.

''அது சஸ்பென்ஸ். விளையாடும் போதுதான் தெரியும். கமான்! காமன்! எல்லாரும் வாங்க'' உற்சாகமாக அழைத்தாள் உமா.

அவசரமாய் எழுந்தாள் சீதா ''நமக்கு இந்த விளையாட்டெல்லாம் சரிப்படாதுப்பா. நான் இந்தப்பாத்திரத்தை எல்லாம் கழுவணும்.''

''அண்ணி! இப்படி ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி நீங்கமட்டும் எஸ்கேப் ஆயிடுறீங்க. இன்னிக்கு உங்களை விடப்போறதில்ல பேசாம உட்காருங்க''

''இல்ல சிவா! எனக்கு வேலை இருக்கு''

''இன்னிக்கு உங்களுக்கு ரெஸ்ட் உட்காருங்க.''

''நைட் என்ன சாப்பிடுறதாம்? சமைக்க வேண்டாமா''

''அதெல்லாம் நாங்கள் பார்த்துக்கிறோம். முதல்ல உட்காருங்க'' சிவா விடாப்பிடியாய் நிற்க. மனைவியிடம் திரும்பினான் ராம்குமார்.

''அவன்தான் அவ்வளவு சொல்றானே. உட்கார்''

''இல்லங்க. இந்த விளையாட்டு வேண்டாம். தோத்தவங்க பாட்டுபாடணும், கவிதை சொல்லணும்னு சொல்வாங்க. அதெல்லாம் எனக்குத் தெரியாதே''

''அண்ணி! உங்களுக்காகத்தான் இன்னிக்கு வேற ஏற்பாடு பண்ணியிருக்கோம்.''

''என்ன ஏற்பாடு?''

''இன்னிக்கு தோற்கிறவங்க பாட்டு பாடவேண்டாம். டான்ஸ் ஆட வேண்டாம், ஆனா உண்மையைச் சொல்லணும்.''

''என்ன?''

''ம், நம்ம லைப்ல சில சமயம் யாரையாவது ஏமாத்தியிருப்போம் இல்ல ஏமாந்திருப்போம். சிலசமயம் யார்கிட்டயாவது மாட்டிட்டு முழிச்சிருப்போம். இந்த மாதிரி ஏதாவது ஒரு உண்மை நிகழ்ச்சியை சொல்லணும்''

''ஐயோ! இது விபரீத விளையாட்டுடா'' உலகநாதன் போலியாக பதறினார்.

''ஆஹா! அப்போ அப்பாகிட்ட நிறைய ரகசியம். இருக்கு. என்னான்னு கேட்டுடுவோம். சீக்கிரம் உட்காருங்க அண்ணி''

லேசாய் சிணுங்கியவாறு உமாவின் அருகில் அமர்ந்துகொண்டாள் சீதா. அவளருகே கணவனும் அமர்ந்து கொள்ள, உமா மியூசிக்கை ஆன் பண்ணினாள். ஏதோ ஒரு ஆங்கிலப்பாடல் இசையோடு ஒலிக்க. சிவா தன் கையிலிருந்த பந்தை தாயிடம் தூக்கிப் போட்டான்.

ஒருவர் கையாக மாறி ராம்குமார் கையில் பால்வந்தபோது இசை நின்றுவிட்டது. அனைவரும் பலத்த சத்தத்துடன் கைதட்ட, சிவா கேட்டான்



''அண்ணா! வசமாய் மாட்டிக்கொண்டாய். சொல்லு. யாரையாவது ஏமாற்றியிருக்கிறாயா?''

ராம்குமார் யோசித்தான். ''ம்? ஏமாற்றினேன் என்று சொல்ல முடியாது. ஆனா தானா வந்து என்கிட்ட ஒருத்தன் ஏமாந்திருக்கான்''

''சொல்லு! சொல்லு!''

''நான் மெடிக்கல் ரெப்பென்றதால எப்பவும் என்கையில பேக் நிறைய சாம்பிள் மெடிஸன்ஸ் இருக்கும்''

''அதான் எல்லாருக்கும் தெரியுமே''

''ஆனா அந்த முட்டாப்பயலுக்குத் தெரியலையே. போனமாசம் பேங்குல போய் ஆர்.டி. கட்டிட்டு வெளியேவந்தேன். கொஞ்சதூரம் நடப்பதற்குள் ஒருத்தன் எம்மேல வேகமா வந்து மோதிட்டான்''

''அச்சச்சோ'' சீதா பதறினாள்.

''நான் சுதாரிக்கிறதுக்குள்ள என் கையிலிருந்து பேக்கை அடிச்சிட்டு போயிட்டான்''

''அப்புறம்? நீயும் ஓடுனியா?''

''நான் ஏன் ஓடுறேன்? என் நடையையும் சூட்கேஸ் பெட்டியையும் பார்த்து நான் பெட்டி நிறைய பணம் எடுத்திட்டுப் போறேன்னு தப்பா நினைச்சுட்டான்னு எனக்கு புரிஞ்சுபோச்சு''

''அப்புறம் என்ன ஆச்சு?''

''அவன் ஓடிப்போன திசையிலேயே நானும் போனேன். ஒரு மரத்தடியில உட்கார்ந்து பேகை திறந்து அலசிட்டு இருந்தான். என்னைப் பார்த்ததும் ஓடினானே ஓட்டம். என்னால் சிரிப்பை அடக்க முடியல்ல. எல்லா மருந்தையும் அடுக்கி எடுத்திட்டேன்'' ராம்குமார் சொல்லி முடிக்க எல்லோரும் ஆரவாரமாய் சிரித்தனர்.

மீண்டும் விளையாட்டு ஆரம்பமாகி இம்முறை உலகநாதனின் கையில் பந்து வந்து நின்றது. திருதிருவென விழித்தவரைப் பார்த்து சிரித்தான் சிவா.

''அம்மா அப்பா முழிக்கிறதைப் பார்த்தா நிறைய விஷயம் இருக்கும் போலிருக்கே''

''அடாவே! ஏன் இப்படி முழிக்கிறீங்க? எதுவா இருந்தாலும் சொல்லுங்க. நான் ஒண்ணும் நினைக்கமாட்டேன்.''

''நான் யாரையும் ஏமாத்தல. ஏமாறவும் இல்ல''

''பின்னே?''

''ஆனா மாட்டிகிட்டு முழிச்சிருக்கேன்'' என்றார் அசடு வழிய.

''வாவ்! சூப்பர். சீக்கிரம் சொல்லுங்கப்பா.''

''அது... உங்கம்மாவை கல்யாணம் பண்ணின மறுநாள்.''

''ஓ. மலரும் நினைவுகளா? ம்.ம்.. சொல்லுங்க?''

''மாமியார் வீட்டு விருந்துக்கு போயிருந்தோமா! எங்க மாமியார் கறிக்குழம்பு அவ்வளவு ருசியா வெப்பாங்க. சாப்பிட்டால் விடவே மனசு வராது. வயிறு முட்ட சாப்பிட்டும் என்னால கறிக்குழம்ப விட முடியல''

''ம்? அப்புறம்?''

''நான் புதுமாப்பிள்ளையாச்சே ஒரு மரியாதைக்காக போதும் போதும்னு பந்தா பண்ணினேன். அவங்களும் சரின்னு கைகழுவிக்கச் சொல்லிட்டாங்க.''

''அட! அப்புறம்?''

''நானும் என்ன பண்றதுன்னு தெரியாம கைகழுவிட்டேன். கொஞ்ச நேரத்தில் எல்லாரும் படுத்திட்டாங்க. எனக்கோ தூக்கம்வரல்ல''

''ஓ.கே. இனிமே நடந்ததை நான் சொல்றேன். எல்லாரும் தூங்கினதும் நீங்க பூனை மாதிரி கிச்சனுக்குள் நுழைஞ்சி கறிக்குழம்பை ஸ்வாஹா பண்ணிட்டு இருக்கும் போது எல்லாரும் பார்த்திட்டாங்க சரியா?'' உமா கேட்க, மறுத்தார் உலகநாதன்.

''இல்ல எல்லாரும் பார்க்கல''

''அப்போ! உங்க மாமியார் மட்டும் பார்த்தாங்களா?''

''அவங்க பார்த்திருந்தா என் மானம் போயிருக்காதே''

''பின்னே? உங்க புது வொய்ப் அதாவது அம்மா பார்த்திட்டாங்களா?''

''ஐயோ. இல்லடா.''

''வேற யாருப்பா பார்த்தது''

''உன் அம்மாவோட அக்கா மகன் ஒரு நாலு வயசு இருக்கும். அவன் தான் பார்த்திட்டான்.''

''எம்ப்பா! இதுக்கா இவ்வளவு பில்-டப்? நானும் என்னமோன்னு நினைச்சிட்டேன். நாலு வயசு குழந்தை பார்த்தா என்ன? பார்க்காட்டி என்ன?''

ராம்குமார் அனுத்துக் கொள்ள அன்னபூரணி சிரிப்பை அடக்கிக் கொண்டிருக்க மனைவியை வெட்கமாய் பார்த்துவிட்டு தொடர்ந்தார் உலகநாதன்.

''அந்த நாலு வயசு குழந்தைதான்டா எம்மானத்தை காத்துல பறக்க விட்டுடுச்சு.''

''என்னப்பா சொல்றீங்க?''

''அது என்னை பார்த்திட்டு ஐயோ பூச்சாண்டி பூச்சாண்டின்னு கத்திச்சா எல்லாரும் கம்பு, கட்டையோட அடுக்களைக்குள்ள வந்திட்டாங்க.''

''ஆஹா! அப்பாவுக்கு சரியான பொங்கப்படி கிடைச்சிருக்குமே'' அன்னபூரணி பீறிட்டுச் சிரித்தவாறே சொன்னாள். ''நல்லவேளை! எங்க அம்மா வால தப்பிச்சுட்டார். மருமகனுக்கு சப்போர்ட் பண்ணி பூசி மெழுகிட்டாங்க. அந்த நேரம் உங்க அப்பா மூஞ்சிய பார்க்கணுமே''

''இப்பவும் கறிக்குழம்பு சாப்பிடும் போதெல்லாம் எனக்கு அந்த சம்பவம் நினைவுக்கு வந்திடும்'' உலகநாதன் தலையைக் குனிந்தவாறே சொல்ல சிரிப்பலை அடங்க வெகுநேரமாயிற்று.

சற்றுநேரம் கழித்தே விளையாட்டு தொடங்க இம்முறை சீதாவிடம் பந்து மாட்டிக் கொண்டது. ''அச்சச்சோ'' கையை உதறினாள் சீதா.

''ஹைய். அண்ணி மாட்டிக்கிட்டாங்க. சொல்லுங்க. நீங்க யாரை ஏமாத்துனீங்க.?''

''ஊஹூம். நான் யாரையும் ஏமாத்தினதே இல்லை.''

''அப்போ கண்டிப்பா ஏமாந்திருப்பீங்க. சொல்லுங்க.''

சிலநொடி மவுனத்திற்குப்பின் வேகமாக தலையாட்டி மறுத்தாள். ''ம் ஹீம். அதையெல்லாம் சொல்ல முடியாது. சொன்னா சிரிப்பீங்க''

''அதுக்குத்தானே இந்த விளையாட்டு. யாரும் நழுவக் கூடாது. சொல்லியே ஆகணும்.''

''ஐயோ'! சொன்னா எல்லாரும் கேலி பண்ணுவீங்க.''



''எம்மா! என்னைவிட வா மோசமான நிலை உனக்கு? சும்மா சொல்லும்மா'' உலகநாதன் உற்சாகப்படுத்த நெளிந்தாள் சீதா.

''சீதா! அப்படி என்னதான் ஏமாந்தே. சொல்லேன்.'' என்ற கணவனைப் பார்த்து முகத்தைச் சுருக்கி வெட்கப்பட்டாள்.

''வேண்டாங்க.''

''சும்மா சொல்லு. நான்தான் கேட்கிறேனில்ல.''

''அதானே. அண்ணனே கேட்கிறான். சொல்லுங்க.''

செல்லமாய் சிணுங்கினாள் சீதா. ''சரி சொல்லுவேன். ஆனா யாரும் கிண்டல் பண்ணக் கூடாது.''

''பண்ணமாட்டோம்.''

''சிரிக்கக் கூடாது''

''அது நீங்கள் சொல்லும் விஷயத்தைப் பொறுத்தது''

''ம். அப்போ சொல்லமாட்டேன்''

''சரி. சிரிக்கலை. சொல்லுங்க.''

''ம். வந்து.. என்னை பெண்பார்க்க வந்தீங்கள்ல?''

''ஆமா!''

''அப்போ நான் வீட்டுக்குள்ள இருந்தேனா? எங்க பாட்டி வந்து என்கிட்ட மஞ்சக்கலர் சட்டை போட்டிருக்கிறதுதான் மாப்பிள்ளை. ஜன்னல் வழியா நல்லா பார்த்துக்கன்னு சொன்னாங்க.''

''மஞ்சளா? நான் சந்தனக்கலர் தானே போட்டிருந்தேன்?''

''அதைத்தான் பாட்டி அப்படிச் சொல்லியிருக்காங்க''

''சரி நீ என்னைப் பார்த்தியா?''

''இல்லங்க. நான் பார்க்கும்போது சிவாதான் யெல்லோகலர் டி-சர்ட் போட்டிருந்தாரா. நான் அவர்தான் மாப்பிள்ளைன்னு நினைச்சுட்டேன்''

''ஓஹோ'' என்று சத்தமாய் சிவா சிரிக்க, ராம்குமாரின் முகம் இருண்டது. அதை கவனியாத சீதா வெகுளித்தனமாய் தொடர்ந்தாள்.

''அப்புறம் காபி கொடுக்க வந்தேனா? அப்புறம் பார்த்தா நீங்கதான் மாப்பிள்ளைன்னு அத்தையும் மாமாவும் சொன்னாங்க. எனக்கு ரொம்ப ஷேமா ஆகிடுச்சு. ரூமுக்குள்ள வந்து என் தலையில நானே குட்டிக்கிட்டேன்''

''ஏன்? என்னை பார்த்ததுக்கா?''

''ஐயோ இல்லங்க. பைத்தியக்காரத்தனமா தம்பிய பார்த்திட்டேனே. அதுக்கு. ரொம்ப அவமானமா இருந்தது.''

''இதுல என்னம்மா இருக்கு. இதே மாதிரி எத்தனையோ இடத்தில நடக்குதே.''

''உலகநாதன் சிரித்தார்.

''அண்ணி'! நீங்க சிவா அண்ணனைத்தான் குட்டியிருக்கணும் அவன்தான் மாப்பிள்ளைமாதிரி வந்தான்'' உமா சொல்ல தன் தலையில் குட்டு வைத்தான் சிவராம்.

''ஏய்! ஐயாவோட பர்சனாலிட்டி அப்படி. நான் ஒன்னும் உன்னை மாதிரி ஒன் அவர் மேக்-அப் பண்ணிட்டு போகல்ல.''

''நானா ஒன் அவர் மேக்-அப் பண்ணினேன்?''

''ஏன் உங்களுக்குள்ள சண்டை? எங்க பாட்டி அரைகுறையா சொன்னதை வெச்சு நான்தான் ஏமாந்திட்டேன்''

"பரவாயில்ல அண்ணி. நல்லவேளை அவசரப்பட்டு மாப்பிள்ளையை எனக்கு பிடிக்கலன்னு சொல்லாம விட்டீங்க சரி. அண்ணனைப் பார்த்ததும் என்ன தோணிச்சு உங்களுக்கு?"

வெட்கமாய் புன்னகைத்தாள். "இந்த ஜென்மத்தில இவர்தான் என் புருஷன்னு தோணிச்சு." என்றாள் மெல்ல.

"வாவ்! சூப்பர்!" கைதட்டினர் இருவரும் "உங்களைப் பார்க்கிற எல்லாருமே உங்க பொருத்தத்தைத்தான் சொல்றாங்க. அதுவும் பெயர்பொருத்தம் ரொம்ப அற்புதமா இருக்கே" அன்னபூரணி பெருமையாய்ச் சொல்ல, கண்களில் நேசத்தோடு கணவனை ஏறிட்டாள் சீதா.

துடைத்து வைத்தது போல் உணர்ச்சியின்றி கருங்கல்லாய் மாறி இருந்தது கணவனின் முகம். பார்வை எங்கோ வெறித்திருக்க, அசையாமல் அமர்ந்திருந்தவனை தொட்டாள் சீதா. சட்டென கைகளைத் தட்டிவிட்டு தம்பியைப் பார்த்தான்.

"உமாவுக்கு ஏதோ வரன் பார்த்ததாய் சொன்னாயே சிவா. அதைப் பற்றி சொல்லு. நல்ல இடமாய் இருந்தால் சீக்கிரம் முடித்துவிடலாம்." ராமின் பேச்சில் அனைவரும் உற்சாகமாகி திருமணப்பேச்சை பேச ஆரம்பித்தனர்.

அங்கே அமர்ந்திருக்க வெட்கப்பட்டு உமா எழுந்து சென்றுவிட, சீதா திகைத்து அமர்ந்திருந்தாள். திருமணப்பேச்சு சுவாரஸ்யமாய் நடக்க, கணவன் ஒருமுறை கூட தன் பக்கம் திரும்பாததை கவனித்துக் கொண்டே இருந்தாள்.

ராம்குமார் எழுந்து கொண்டான். "சரி நீங்க பேசிட்டு இருங்க. நான் வெளியே போயிட்டு வர்றேன்."

"இப்போ எங்கேடா போறே?"

"இல்லப்பா. கல்யாணம்னு முடிவாகிடுச்சு. என்னால முடிஞ்ச அளவு நான் பணம் புரட்ட வேண்டாமா? போயிட்டு வர்றேன். வர லேட்டாகும். சாப்பிட்டு படுங்க. எனக்காக வெயிட் பண்ண வேண்டாம்." என்றவாறு தன் அறைக்குள் சென்றான்.

எழுந்து பின்னால் வந்த சீதாவை பாராதது போல் அவசரமாய் உடை மாற்றிவிட்டு வண்டிச்சாவியை எடுத்துக் கொண்டு வெளியேறியவன் இரவு வெகுநேரமாகியும் வீடு திரும்பவே இல்லை.

கணவனின் பாராமுகம் தன்னை வருத்த, இரவெல்லாம் திகிலாய் விழித்திருந்தாள் சீதா. சொல்ல முடியாத பாரம் மனதை அழுத்தியது.

**என்றும் உனக்காக உயிர்**
**வாழும் துணையில்லையா - அவன்**
**ஒளிவீசும் எழில் கொண்ட**
**சிலையில்லையா!**

# 5

வீடு முழுவதும் உறவினர் கூடியிருக்க பம்பரமாய் சுழன்று கொண்டிருந்த மகளை இழுத்து தனியே கூட்டிப் போனாள் பங்கஜம். கையை உதறினாள் சீதா.

"என்னம்மா இது? எவ்வளவு வேலை இருக்கு. இப்போ எதுக்கு தனியா இழுத்திட்டு வந்தீங்க?"



"அடியேய்! உம்புருஷன் உன்னை நல்லாத்தானே வெச்சிருக்கார்?" தாயின் கேள்வியில் துணுக்குற்றாள்.

"எ...என்னம்மா திடீர்னு இப்படி கேக்குறீங்க?"

"பின்னே நானும் நேத்துல இருந்து பார்க்கிறேன். மருமகன் முகத்திலே துளியும் சிரிப்பில்ல. உங்கிட்ட ஒருவார்த்தை கூட பேசமாட்டேங்கிறார்."

அம்மா அனுபவசாலி. ஒரே நாளில் கண்டுபிடித்து விட்டாள். இவளிடம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். கணவன் ஒரு வாரமாய் தன்னை விட்டு விலகியே நிற்கிறான் என்று தெரிந்து விடக்கூடாது என்பதற்காக முகத்தில் வரவழைத்துக் கொண்ட புன்னகையோடு தாயைப் பார்த்தாள்.

"அம்மா தங்கையோட நிச்சயதார்த்த வேலையில சாப்பிடக் கூட அவருக்கு நேரமில்ல. இப்ப வந்து எங்கிட்ட பேசிட்டு நிற்பாரா?"

"அதுக்கில்லடி என்ன தான் வேலையிருந்தாலும் பொண்டாட்டியைத் திரும்பிக் கூடவா பார்க்கமாட்டார்?"

"அம்மா! எனக்கு என்ன இன்னிக்கு நேத்தா கல்யாணம் ஆகியிருக்கு?"

"ஏய் இப்படி அலட்சியமா விடக்கூடாதுடி. எம்புட்டு வயசானாலும் புருஷன் பார்வை உம்மேலத்தான் இருக்கணும். வேற பக்கம் திரும்பி விடக்கூடாது. புருஷனை முந்தானையில முடிஞ்சு வெச்சிருக்கணும்."

"அதெல்லாம் எனக்குத் தெரியும். என்னை விடுங்க."

"இருடி. அம்மா உன் நல்லதுக்குத் தான் சொல்றேன். எந்த பிரச்சனை வந்தாலும் நீ தான் இறங்கி வரணும். அவரே வருவாருன்னு விடக்கூடாது."

"அம்மா"

"அம்மாடி சீதா. அம்மா எப்போதும் இதையே சொல்றேன்னு நினைக்காதேம்மா. தகப்பன் இல்லாத பிள்ளைகளை தங்கமா வளர்த்திருக்கான்னு அடுத்தவங்க சொல்லணும். அதுக்கேத்த மாதிரி நீங்க வாழணும்."

"சரிம்மா"

"சின்ன வயசுலேயே அப்பாவை இழந்து அம்மா பட்ட கஷ்டம் கொஞ்சம் நஞ்சமில்ல. அந்த வேதனைகளையெல்லாம் நீங்க அனுபவிச்சிடக் கூடாதுன்னு தான் அம்மா அடிக்கடி அறிவுரை சொல்றேன்."

"புரியுதும்மா. புரிஞ்சு நடந்துக்கிறேன்."

"என் கண்ணு. நீ ராஜாத்திடி. சரி நீ போய் வேலையைக் கவனி. அம்மாவும் கிளம்பறேன்."

"சரிம்மா"

"சீதா உன்னை எங்கெல்லாம்மா தேடுறது. உமா உன்னைக் கூப்பிடுறா பாரு." என்றவாறு வந்தாள் அன்னபூரணி.

"இதோ வர்றேன் அத்தை" என்றவாறு உமாவை நோக்கி ஓடினாள் சீதா.

மாலையும் கழுத்துமாய் நிச்சயதார்த்த புடவையில் கணவன் அருகே நின்ற உமாவைப் பார்க்கையில் உள்ளம் பூரித்தது. எத்தனை அழகாய் இருக்கிறாள். மாப்பிள்ளையும் அழகு தான். நல்ல கலகலப்பாகவும் பேசிக் கொண்டிருக்கிறார். உமா சந்தோஷமாக வாழ வேண்டும்.

"என்ன அண்ணி நின்னுட்டீங்க வாங்க" தங்க நிற வளையல்கள் கலகலக்க கையசைத்து அழைத்தாள் உமா.

"இதோ எங்க அண்ணி. பேர் சீதா." மாப்பிள்ளையிடம் அறிமுகம்

செய்து வைத்தாள்.

''ஹலோ அக்கா நல்லா இருக்கீங்களா?'' உரிமையாய் பேசிய ஜீவா வைப் பார்த்து புன்னகைத்தாள்.

''நல்லா இருக்கேன்''

''அண்ணி! அண்ணனையும் கூட்டிட்டு வாங்க. ஒரு போட்டோ எடுத் துக்கலாம்.''

''அண்ணனையா? ரொம்ப வேலையா இருக்காரே?''

''இதோ நான் கூப்பிடுறேன். மிஸ்டர் ராம்குமார்! ஒரு நிமிஷம் வந் துட்டு போங்களேன்.'' ஜீவா அழைத்ததும் நின்றான் ராம்குமார். கையில் இருந்த வெற்றிலைப் பாக்குத் தட்டோடு வந்தான்.

''என்ன மாப்பிள்ளை! குடிக்க எதுவும் கொண்டு வரட்டுமா?''

''அதெல்லாம் வேண்டாம்! வாங்க ஒரு போட்டோ எடுத்துக்கலாம்.''

''போட்டோவா இப்ப எதுக்கு? பிறகு பார்க்கலாம்?''

''அண்ணா இன்னும் கொஞ்ச நேரத்திலே இவங்க கிளம்பிடுவாங்க. ஒரே ஒரு போட்டோ எடுத்துக்கலாம்.''

''வேர்த்து வழிஞ்சு நிற்கிறேனம்மா''

''பரவாயில்லை மச்சான். அழகாத்தான் இருக்கீங்க. வாங்க! அக்கா வோட சேர்ந்து நில்லுங்க.''

''இ..இருக்கட்டும். மாப்பிள்ளை கூட நின்னாத்தான் நல்லாயிருக்கும்'' என சொல்லியவாறே ஜீவாவின் அருகே நின்று கொண்டான்.

உள்ளே எழுந்த ஏமாற்றத்தை வெளிக்காட்டாமல் உமாவின் அருகே புன் னகையோடு நின்று கொண்டாள் சீதா. போட்டோ எடுத்து முடித்த கணமே நகர்ந்து வேலையில் நுழைந்து கொண்டவனை தனியே சந்திக்க இயலாமல் வருத்தமாய் நடமாடினாள்.

இரவான பின்னும் வெகுநேரம் கழித்தே தன் அறைக்குள் நுழைந்தவள் கணவனைக் காணாமல் திடுக்கிட்டாள். எங்கே போனார்? வெளியே வந் தாள்.

''அத்தே! உங்கள் மகனை காணோமே. வெளியே போனாரா?''

''இல்லையேம்மா! நான் கதவை சாத்தும்போது கூட உள்ளே தானே இருந்தான்?'' கால்வலி தைலத்தை பூசிக்கொண்டே பதிலளித்தாள் அன்ன பூரணி.

''என்ன அத்தே! கால் வலிக்குதா?''

''ஆமாம்மா. காலையில இருந்து உட்காரவே இல்லையே?''

''கொடுங்க அத்தே. நான் தேச்சு விடுறேன்.''

''வேண்டாம்மா. நீ போய்ப்படு. உனக்கும் தான் எவ்வளவு வேலை! அப்ப்ப்பா சரியான கூட்டம் இல்ல?''

''எப்படியோ எல்லாரையும் திருப்தியா கவனிச்சாச்சு.''

''கல்யாணத்துக்கு முழுசா ஒரு மாசம் தான் இருக்கு. எப்படித்தான் சமா ளிக்கப் போறோமோ தெரியலை.''

''அதெல்லாம் பார்த்துக்கலாம் அத்தை''

''சரிம்மா நீ போய் அவனைப் பாரு. பாத்ரூம் போயிருப்பானோ? என் னவோ? நீயும் படும்மா. காலையில எழுந்து தங்கியிருக்கிறவங்களை கவ னிக்க அனுப்பனுமில்ல. போய்ப்படு''



''சரி அத்தே!''

''விடி விளக்கை போட்டுட்டு லைட்டை ஆப் பண்ணிட்டு போம்மா.''

''சரி அத்தே!'' விளக்கை அணைத்து விட்டு தன் அறைக்குள் நுழைந் தவள் கணவனைக் காணாமல் புருவத்தைச் சுருக்கினாள். குளியலறைக் கதவு வெளிப்பக்கமாய் மூடப்பட்டிருக்க குழப்பமாய் ஹாலிற்கு வந்தாள்.

நிச்சயத்திற்கு வந்திருந்த நெருங்கிய உறவினர்கள் பாயில் படுத்து ஆழ்ந்த நித்திரையில் இருந்தனர். ஒரு சிலரிடமிருந்து சன்னமான குறட்டை ஒலி கேட்டுக் கொண்டிருந்தது.

படுத்திருந்தவர்களை மிதித்து விடாமல் கவனமாய் பார்த்து நடந்து மாடிப்படியை நெருங்கினாள். மாடிக்கு போயிருப்பாரோ? யோசனையோடு மாடி ஏறியவள் கணவனைக் கண்டதும் நிம்மதியானாள்.

லேசான வெளிச்சமே தெரிய ராம்குமார் முதுகைக் காட்டியவாறு நின் றிருந்தான். ''என்னங்க இங்கேயா நிக்கிறீங்க? கீழே தேடிட்டு இருந்தேன்.''

கணவனிடம் இருந்து பதில் வராததால் நெருங்கி வந்து தோளைத் தொட் டாள். சட்டென தட்டி விட்டான். துடித்துப் போனவளாய் நிமிர்ந்தாள்.

''என்னங்க? என்ன ஆச்சு?''

பதிலில்லை.

''வாங்க படுக்கலாம். இன்னிக்கு ரொம்ப வேலை'' இப்போதும் கண வனிடம் அசைவில்லை. லேசாய் சலிப்பு வந்தபோதும் தாயின் அறிவுரை நினைவு வர முகத்தில் புன்னகையோடு கணவனை உரசி நின்றாள்.

''என்ன ஸாருக்கு பேச வரலையா?''

''ச்சீ! உனக்கு வெட்கமா இல்ல?'' சட்டென விலகி நின்றான்.

''என்னங்க! நீங்க எம் புருஷன். உங்ககிட்ட நிற்க எனக்கு என்ன வெட் கம்?''

''அதானே! உங்கிட்ட போய் அதையெல்லாம் எதிர்பார்ப்பது என் தப்பு தான்.''

''என்னங்க ஒரு மாதிரி பேசுறீங்க?''

''உங்கிட்ட பேசவே பிடிக்கலைன்னு தான் இங்கே வந்து நிற்கிறேன்.'' முகம் மாறினாள். ''என்ன? எங்கிட்ட பேச பிடிக்கலையா?''

''ஆமா பேச மட்டுமில்ல, உன்னை பார்க்கவே பிடிக்கலை.''

''ஏன்?'' பேசும்போதே கண்கள் தளும்பியது.

''ஏன்னு உனக்கே தெரியாதா?''

''தெரியாமத் தானே கேட்கிறேன். நான் என்னங்க பண்ணினேன்?''

''இப்பத்தானே ஒரு தப்பு தெரிஞ்சிருக்கு. இன்னும் என்னென்ன பண் ணியிருக்கியோ யாருக்குத் தெரியும்?'' சிடுசிடுத்தான்.

''தப்பா? என்ன தப்பு பண்ணினேன்?''

''ஓஹோ உனக்கு அது தப்பாவே தெரியலையா?''

''எதுங்க?'' புரியாமல் கேட்டவளை எரித்து விடுவதைப் போல் பார்த் தான்.

''என்னை விட்டுட்டு என் தம்பியைப் பார்த்தாயே அதைச் சொல்கி றேன்.'' அதிர்ந்து போனாள் சீதா. ''என்ன? என்ன சொன்னீங்க?''

அலட்சியமாய் திரும்பிக் கொண்டவனை தோள் பற்றித் திருப்பினாள்.

''என்ன சொன்னீங்க?'' ஆத்திரமாய்க் கேட்டாள்.

''உண்மையைத் தான் சொன்னேன்.''

''எது? எது உண்மை?''

''உன்னைப் பெண் பார்க்க வந்தது நான். நீ யாரைப் பார்த்தாய்?'' திடுக்கிட்டுப் போனாள். ''ஏங்க என்னங்க... இது தெரியாமத் தானே''

''வாயை மூடுடி. நீ எதுக்காக என்னைக் கட்டிக்கிட்டேன்னு எனக்கு இப்பத்தான் புரிஞ்சிருக்கு.''

''என்னங்க'' சீதாவின் இதயம் நடடடத்தது.

''எங்கிட்ட தாலிய வாங்கிட்டு என் தம்பி கூட உல்லாசமா வாழலாம்னு தானே இங்க வந்திருக்கே. நீதான் அவனை டெல்லி வேலையை விடச் சொன்னே. இப்போ இரண்டு பேரும் கூத்தடிக்க வசதியாப் போச்சு''

''ஐயோ'' அலறினாள் சீதா. தீயை வாரிக் கொட்டியது போல் துடிதுடித்துப் போனாள். பூமி பிளந்து தன்னை அப்படியே உள் வாங்கி விடக் கூடாதா? என அரற்றினாள்.

அந்த ராமனாவது ஊருக்கென மனைவியை சந்தேகித்தான். ஆனால் இவன் பெற்ற பிள்ளையாய் நினைக்கும் சகோதரனை அல்லவா தன்னுடன் இணைத்துப் பேசுகிறான். இப்படிக் கொடூரமாய் பேசிய நாக்கை அறுத்தெறிந்தால் என்ன?

தோன்றிய ஆவேசத்தை அன்னையின் அறிவுரை அடக்கியது. ''வெளியில போயிட்டு வர்ற புருஷன் கோபத்துல அப்படி இப்படி கத்தினாலும் நாம பதிலுக்கு பதில் பேசக்கூடாதும்மா. பணிஞ்சு தான் போகணும். சண்டையை வளர்க்கக்கூடாது.''

சீதாவும் பணிந்து தான் போனாள். கண்ணீரை துடைத்து விட்டுக் கணவனை ஏறிட்டாள். ''இதோ பாருங்க. நான் உங்க மனைவிங்க. உங்களைத் தவிர வேற யாரையும் மனசளவுல கூட நினைச்சதில்லை. சத்தியமாச் சொல்றேன் நான் சுத்தமானவங்க. உங்க தம்பி என் கூடப் பொறக்காத புள்ளை தான். அப்படித்தான் நான் நினைச்சிட்டு இருக்கேன்.''

''ச்சீ! இதை நான் நம்பணுமா?''

''நீங்க நம்பணும்னா நான் என்னங்க பண்ணணும். தீக்குளிக்கணுமா?''

''கல்யாணம் நடக்கப்போற வீட்ல இழவு விழ வேண்டாம். நான் சொல்ற மாதிரி செய்றியா?''

''சொல்லுங்க! நீங்க என்ன சொன்னாலும் செய்றேன்.''

''நீ நீ போயிடு'' முகத்தை திருப்பிக் கொண்டு அவன் சொல்ல, அதிர்ந்து துடித்துப் போனாள் சீதா.

''போகணுமா? நான் எங்கே போவேன்?''

''எங்கேயாவது போ. ஆனா என் கண் முன்னாடி மட்டும் வராத. உன் மூஞ்சைப் பார்த்தாலே எனக்கு குமட்டுது. இன்னொருத்தனை நினைச்சுக்கிட்டுத்தானே எங்கூட வாழ்ந்திருக்கே ச்சே''

''அபாண்டமா பேசாதீங்க. இதையெல்லாம் கேட்டா எனக்கு உடம்பெல்லாம் கூசுது.''

''இதோ பார். இந்த வீட்ல ஒண்ணு நீ இருக்கணும், இல்ல நான் இருக்கணும். நீ போகமாட்டே எனக்குத் தெரியும். உன் மனசுக்கு பிடிச்சவனை விட்டுட்டு நீ எப்படி போவே? அதனாலே நானே போறேன்''

தலையில் அடித்துக் கொண்டு அழுதாள் சீதா ''ஐயோ திரும்ப திரும்ப



அசிங்கமா பேசுறீங்களே! நான் எந்த தப்பும் பண்ணலைங்க. உங்களுக்கு நம்பிக்கை இல்லன்னா என்னை உங்க கையால கொன்னுடுங்க.''

''சீச்சி! கிட்ட வராதே. உன் நிழலைக் கூட இனி நான் தொட மாட்டேன்.''

''அப்படி நான் என்னங்க பாவம் பண்ணினேன்? விளையாட்டா ஏமாந்த விஷயம். அதை சொன்னது தான் நான் செய்த பாவமா?''

''இப்ப சொன்ன விஷயத்தை நீ ஏண்டி இவ்வளவு நாளா சொல்லல?''

அதிர்ந்து நெஞ்சில் கைவைத்துக் கொண்டாள். ''ஏங்க இதுக்கா கோவிச்சிட்டு எங்கிட்ட பேசாம இருந்தீங்க? இதுல நான் எந்த தப்பும் பண்ணலையே.''

''தப்புத்தாண்டி. நமக்கு கல்யாணமாகி எத்தனை மாசமாச்சு. இதுவரை இதைப்பற்றி எங்கிட்ட மூச்சு விட்டியா? ஏன் மறைச்சே? உன் மேல தப்பு இருந்ததால தான மறைச்சே?''

''ஐயோ அப்படியெல்லாம் பேசாதீங்க. உங்களை எந்த நிமிஷம் பார்த்தேனோ அந்த நிமிஷத்தில இருந்து இந்த நிமிஷம் வரைக்கும் உங்களை மட்டும் தான் நினைச்சிட்டு இருக்கேன்.''

''இந்த மாயப்பேச்செல்லாம் வேற எவன் கிட்டயாவது வெச்சுக்க.''

''இதோ பாருங்க எதுவா இருந்தாலும் முகத்துக்கு நேரா சொல்லிடுங்க. இப்படி பூடகமா பேசுறது சாடையா சொல்றதெல்லாம் எனக்குப் பிடிக்காது.''

''போய் எம் தம்பிக்கு சேவகம் பண்ணுன்னு சொன்னேன்.'' உரத்த குரலில் அவன் சொல்ல திடுக்கிட்டுத் தள்ளாடினாள் சீதா.

''என்ன சொல்றீங்க?''

''அவனைத் தானே மாப்பிள்ளைன்னு நினைச்சே''

''கடவுளே ஏங்க ஏன் இப்படியெல்லாம் பேசுறீங்க. தெரியாத்தனமா ஏமாந்திட்டேன்னு தானே சொன்னேன்''

''ஏமாந்தது நீ இல்லடி. நான் தான். நீ அவனை விழுந்து விழுந்து கவனிக்கும் போதே எனக்கு சந்தேகம் தான்! அவனை நினைச்சுட்டுத் தானே எங்கூட.....''

''ஐயோ! நாக்கில நரம்பு இல்லாம பேசாதீங்க. சிவா எனக்கு ஒரு சகோதரன் போல. பிள்ளையைப் போல...'' பதறி துடித்தாள் சீதா.

''ஏய் நிறுத்துடி. தப்பு செய்யுறவ பேசுற டயலாக் தானே இது.''

''திருப்பித் திருப்பி தப்பா பேசாதீங்க.''

''அப்படித்தான்டி பேசுவேன். இப்போ நான் மட்டும் பேசுவேன். உமா கல்யாணம் மட்டும் முடியட்டும். உன் கதி என்ன ஆகப்போகிறது பார்.''

''என்னங்க நான் உங்க மனைவிங்க! ஏதோ எதிரி கிட்ட பேசுற மாதிரி பேசுறீங்க.'' கண்ணீர் மல்க கேட்டவளை வெறுப்பாய் பார்த்தான்.

''என் மனைவின்ற பதவியை இழந்து ஒரு வாரமாச்சு. இனி உனக்கும், எனக்கும் எந்த பந்தமும் இல்லை. என் விரல் நுனி கூட உன் மீது படாது. நீ அசிங்கமானவள். உன்னைப் பார்ப்பதையே நான் பாவமாக நினைக்கிறேன். இனி என் அருகில் வராதே.'' கொடும் மொழிகளைக் கொட்டிவிட்டு விடுவிடுவென கீழே இறங்கிச் சென்றவனை இயலாமையால் பார்த்துக் கொண்டு நின்றாள்.

தன்னை தவறாக பேசுகிறான் என்று தெரிந்தும் அவனைப் பற்றி உனக்கு முடியவில்லை. ஆத்திரம் திருமட்டும் நாலு அறை கொடுக்க முடியவில்லை. குரலை உயர்த்தி பேசக்கூட தெரியவில்லையே அம்மா! அறிவுரை சொல்லி சொல்லி என்னை அடிமையாய் மண்புழுவாய் மாற்றி விட்டாயே! கதறி யழ ஆரம்பித்தாள் சீதா.

## 6

**துன்பம் என்றும் ஆணுக்கல்ல**
**அது அன்றும் இன்றும்**
**பெண்களுக்கே - மன்னவன்**
**உன்னை மறந்ததென்ன!**

**ப**த்தே நாளில் பாதியாய் இளைத்து விட்டாள் சீதாலஷ்மி. உடலின் தளர்ச்சி ஓடியாடி வேலை செய்ய முடியாமல் போனது. பசி என்ற உணர்வு மறந்தே போய்விட்டிருந்தது. சிரிப்பு கலகலப்பு மொத்தமாய் மறைந்து விட்டிருந்தது.

உமாவின் திருமண வேலையில் மூழ்கியிருந்தவர்கள் வீட்டிற்கு வாழ வந்த பெண் காயம்பட்டு துடிப்பதை உணர முடியவில்லை. சகோதரர்கள் இருவரும் காலையில் வீட்டை விட்டுப் போனால் திரும்பி வர இரவாகி விடும்.

உலகநாதனோ உற்றார் உறவினர்களை பார்த்துப் பேச, நகை செய்ய, பத்திரிகை அடிக்க என பகல் முழுக்க சுற்றுவதோடு சில சமயம் உறவினர் வீடுகளில் தங்கிவிடுகிறார்.

உமாவும், தோழியர் கிண்டல் பேச்சு, ஷாப்பிங், பேஷியல் என தாயோடு வெளியில் செல்வதும் வருவதுமாக கல்யாணக் கனவில் சந்தோஷத்தில் இருப்பதால் சீதாவை நின்று நிதானித்து உற்று கவனிக்கவில்லை. மற்ற நேரங்களில் கோவில் நேர்த்திக்கடன் அர்ச்சனை என்று அன்னபூரணியும் போய்விடுவதால் தான் மட்டும் தனியே தீவில் வாழ்வது போல் உணர்ந்தாள் சீதா.

கணவனின் பேச்சும் செயலும் நாளுக்கு நாள் அதிகரிக்க சீதா வாயைக் கூட திறக்க முடியாமல் திண்டாடினாள். மொட்டை மாடியே கணவனது படுக்கை அறை ஆனது.

கணவன் இல்லாத படுக்கையில் படுக்காமல் வெற்றுத் தரையில் சுருண்டு கொண்டாள். சாப்பாடு தண்ணீர் என எதையும் உடலோ மனமோ கேட்கவில்லை.

வேலைகளை முடித்து விட்டு தூணில் சாய்ந்து அமர்ந்தாள். யாரிடம் பேசி இதை சரிசெய்வது? கணவனின் வீணான சந்தேகத்தியை எப்படி ஆற்றுவது? கணவன், மனைவிக்குள் உள்ள பிரச்சனையை அடுத்தவரிடம் சொல்லக்கூடாது என்பாளே அம்மா. தங்களுக்குள் பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பாள்.

இவன் தான் தன்னை பார்க்கவோ, பேசவோ பிடிக்காமல் ஒடுகிறானே. இவனிடம் என்னவென்று பேசித்தீர்ப்பது. சாதாரணமாக சொன்ன ஒரு வார்த்தை தன் குடும்ப வாழ்க்கையையே அழித்து விடும் என்று எண்ணவில்லையே.



மற்றவர்கள் கொஞ்ச நேரச் சிரிப்போடு மறந்து விட்ட ஒன்றை தன் கணவன் இத்தனை விபரீதமாய் விஷமாய் எண்ணுவான் என்று தெரியாமல் போயிற்றே. உலர்ந்திருந்த விழிகள் மீண்டும் உடைப்பெடுத்தது.

இந்த இறுக்கமான சூழ்நிலையில் இருந்து கொஞ்சம் வெளியே சென்றால் நிம்மதியாக மூச்சு விட முடியும். ஆனால் எங்கே செல்வது? தனக்கு தெரிந்த ஒரே இடம் தாய் வீடு.

அங்கும் தனியாய் போகமுடியாது. பார்க்கும் போதெல்லாம் அம்மா சொல்லும் ஒரே வார்த்தை 'தனியே வராதே. வந்தால் கணவனோடு வா. தனியாகச் சென்றால் ஊர் வாயை மூட முடியாதாம். ஆளுக்கொன்றாய் பேசுவார்களாம்.

ஊர் பேசுவதைப் பற்றி கவலைப்படுகிறாயே அம்மா. உன் மாப்பிள்ளை பேசும் வார்த்தை என்னை உயிரோடு வதைக்கிறதே. சொல்லி அழக்கூட யாரும் இல்லாமல் தனிமையில் விக்கித் தவிக்கிறேனே அம்மா! என் மனம் துடிப்பதை நீ உணரவில்லையா?

தூரத்தில் எங்கோ யாரோ கதவைத் தட்டினார்கள். மீண்டும் சத்தமாகத் தட்டினார்கள். சீதா அசைந்தாள். யார் வீட்டில் இவ்வளவு நேரம் கதவைத் தட்டுகிறார்கள். அதுவும் இவ்வளவு சத்தமாக?

'' அண்ணி! நான் சிவா. கதவைத் திறங்கள். '' மீண்டும் கதவு தட்டப்பட திடுக்கிட்டு எழுந்தாள் சீதா.

'' ஐயோ நம் வீட்டுக் கதவைத் தான் தட்டுகிறார்கள். '' மூளையும் மனமும் சொன்ன போதும் கால்கள் நடக்க இயலாமல் தொய்ந்தன.

தூணைப் பற்றிக் கொண்டு தரையில் அமர்ந்தாள். கண்களை மூடித் திறந்தாள். கண்களுக்கு எதுவுமே புலப்படவில்லை. அறைக்குள் இருந்த பொருள்கள் எல்லாம் தலைகீழாக தெரிந்தது. தூண் கூட காற்றில் ஆடுவதைப் போல் தோன்றியது.

தலையை உதறிக் கொண்டாள். எழ முயற்சித்தாள். முடியாமல் மீண்டும் கீழே விழுந்தாள். வெளியே மீண்டும் கதவு தட்டப்பட்டது.

'' அண்ணி! அண்ணி! ''

உலர்ந்து போன உதட்டை நாவால் நக்கிக் கொண்டாள். குரலைத் திரட்டி, '' இ...இதோ வர்றேன் சிவா. '' என்றாள்.

'' அண்ணி ஒரு வேளை குளிச்சிட்டு இருக்காங்களோ. நாம வெயிட் பண்ணுவோம். ''

'' பேசாம ஹோட்டல்ல சாப்பிட்டிருக்கலாம். உன்னால தான் இவ்வளவு நேரம் வீணாப்போச்சு. '' கடுப்பானான் ராம்குமார்.

'' எப்படியும் இன்விடேசன் புரூப் காட்டணுமில்ல. அதை காட்டிட்டு சாப்பிட்டுட்டு போயிடலாம்னு பார்த்தேன். அம்மாவும் உமாவும் கூட இல்லையே. ''

'' துர்க்கைக்கு விளக்கு போட போகணும்னு சொல்லிட்டு இருந்தாங்களே. போயிருப்பாங்க. ''

'' பாவம் அண்ணி! வீட்டுக்குள்ளேயே அடைஞ்சி கிடக்கிறாங்க. அண்ணா! உமா மேரேஜ் முடிஞ்சதும் அண்ணியைக் கூட்டிட்டு எங்கேயாவது டூர் போயிட்டு வா. ''

'' எதுக்கு? ''

"எதுக்கா? பாவம்ண்ணா அண்ணி! நாலு இடத்துக்கு கூட்டிட்டுப் போனா சந்தோஷப்படுவாங்கல்ல. பிறந்த வீட்ல இருந்தப்பவும் எங்கேயும் போயிருக்க மாட்டாங்க. நீயாவது கூட்டிட்டுப் போ."

"எனக்கு லீவே கிடைக்காது. நீ வேணா கூட்டிட்டுப் போ."

"அண்ணா எங்களோட வந்தா அது பேமிலி டூர். நீ கூட்டிட்டு போனா ஹனிமூன் எப்படி?" கண்ணடித்துச் சிரித்தான் சிவா.

"நீ கூப்பிடேன். அண்ணி பறந்து வந்துவிடுவார்கள். உன் குரலுக்கு அவ்வளவு மதிப்பு இருக்கு."

"விளையாடாதே சிவா. கதவைத் தட்டு"

"அட என்ன அண்ணா நீ! வாய் நிறைய சீதா சீதா என்பாயே. இப்போது கூப்பிட்டால் என்ன?"

"தெருவில் நின்று ஏலம் போடச் சொல்றாயா?"

"என்னடா பசங்களா! ரெண்டு பேரும் வெளியே நிற்கிறீங்க?" என்றவாறு பூக்கூடையுடன் வந்தாள் அன்னபூரணி. கூடவே உமாவும்.

"அம்மா! பத்து நிமிஷமா கதவைத் தட்டுறோம். அண்ணி கதவை திறக்கவேயில்லையே."

"என்னாச்சு! இந்த நேரம் தூங்க மாட்டாளே. சீதா! அம்மாடி சீதா கதவைத் திறம்மா."

அன்னபூரணியின் குரலில் மெல்ல எழுந்தாள் சீதா. பூமியே சுழல்வதைப்போல ஒரு சுழற்று சுற்றியது. மீண்டும் கீழே விழுந்தாள்.

"அத்தே! என்னால முடியல்ல அத்தே! எழுந்து நிற்க முடியல்ல" முனகலாய் வலித்த குரலில் உமா பதறினாள்.

"அம்மா அண்ணிக்கு என்னவோ ஆச்சு. பாருங்க முனகுறாங்க."

"ஐயோ! எம்பிள்ளைக்கு என்னாச்சு. அம்மாடி! கதவைத் திறம்மா"

ராம்குமாரின் இதயம் தடதடத்தது. ஒருவேளை ஏடாகூடமாய் ஏதேனும் செய்து விட்டாளா?

"அண்ணா! என்ன பண்ணிட்டு இருக்க. வா கதவை உடைப்போம்." சிவாகத்தியதும் திடுக்கிட்டான்.

"ஏண்டா?"

"என்ன ஏண்டா? அண்ணிக்கு என்ன ஆச்சுன்னு தெரியலையே. நாம உள்ளே போனாத்தானே பார்க்க முடியும்?"

"அண்ணா, அண்ணி கிச்சன்ல இருந்தா எப்பவும் பின் பக்க கதவு திறந்து தானே இருக்கும். நீ பின்பக்கம் போய்ப் பாரேன்." உமா சொல்ல, அடுத்த நிமிஷம் சுவரில் ஏறி உள்புறம் குதித்து வேகமாய் பின்பக்கமாய் ஓடினான் சிவா.

கதவு திறந்தே இருக்க, காற்று சிலுசிலுவென வீசிக் கொண்டிருந்தது. "அண்ணி! அண்ணி எங்கே இருக்கீங்க?" குரல் கொடுத்துக் கொண்டே உள்ளே வந்தவன் தரையில் கிடந்தவளைப் பார்த்ததும் பதறிப்போனான்.

"அண்ணி! என்னாச்சு அண்ணி! அண்ணி!" மண்டியிட்டு அமர்ந்து கேட்டான்.

"சி...வா... எனக்கு முடியல்ல." முனகிக் கொண்டே கண்கள் செருகினாள் சீதா.

"அம்மா! அண்ணியைப் பாருங்களேன்." ஓடிவந்து கதவைத் திறந்



தாள். அன்னபூரணி பூக்கூடையை போட்டுவிட்டு ஓடிவந்து மருமகளை வாரியெடுத்து மடியில் போட்டுக் கொண்டாள்.

"அம்மாடி சீதா. என்னம்மா பண்ணுது. என்னம்மா பண்ணுது?" கேட்டுக் கொண்டே கன்னங்களைத் தட்டினாள். லேசாக அசைந்தாளே தவிர பதில் இல்லை.

முகத்தில் தண்ணீர் தெளித்து சிறிது தண்ணீரையும் புகட்டினாள். கடகடவென குடித்த சீதா மறுநிமிடமே பெரிய ஓங்கரிப்புடன் குடித்த நீரை வாந்தியெடுத்தாள்.

"ம்மா! என்னச்சும்மா. ஏன் வாந்தி பண்றாங்கம்மா. ஐயோ மயங்கிட்டாங்கம்மா." சிவா பதறினான்.

"சிவா போய் ஆட்டோவோ, காரோ பிடிச்சிட்டு வா. ஆஸ்பத்திரிக்கு போவோம்."

"சரிம்மா" என வேகமாய்த் திரும்பியவன், சிலையாய் நின்ற அண்ணனை அசைத்தான்.

"அண்ணா அண்ணி பக்கத்தில இரு. நான் போய் கார் பிடிச்சிட்டு வர்றேன்."

"இல்ல நீ இங்கே இரு. நான் போயிட்டு வர்றேன்." என்றவன் இரண்டே நிமிடத்தில் ஆட்டோவோடு வர, அன்னபூரணி சீதாவைப் பற்றி எழுப்பினாள்.

"அம்மா! அவங்களால எப்படி நடக்க முடியும். இந்த அண்ணன் என்ன பண்றான்? அண்ணா வா! அண்ணியால நடக்க முடியாது?"

"சிவா எனக்கு உடம்பெல்லாம் உதறலா இருக்கு. நீயே தூக்கிட்டு வாயேன்." என்றவாறு அங்கேயே நின்று கொண்டான்.

சற்றும் தாமதியாமல் சீதாவை தூக்கிக் கொண்டு ஆட்டோவிற்கு ஓடினான் சிவா.

மருத்துவமனையை அடைந்து உள்ளேகொண்டு போய் அட்மிட் செய்த பதினைந்தாவது நிமிடத்தில் ராம்குமாருக்கு தலைசுற்ற ஆரம்பித்தது.

தங்கையின் திருமணம் வரை பொறுமையாய் இருந்து விட்டு அதன் பிறகு இவளை வெளியே அனுப்பி விட வேண்டும் என்ற முடிவுடன் இருந்தவனது தலையில் இடியை இறக்கினார் மருத்துவர்.

"கங்கிராட்ஸ்! உங்க வொய்ப் கன்சீவ் ஆகியிருக்காங்க"

தாயும், தம்பியும் முகம் முழுக்க பூரிப்போடு மருத்துவரிடம் பேசிக் கொண்டிருக்க மெல்ல விலகி நடந்தான்.

இனி எதைச் சொல்லி இவளை அனுப்ப முடியும்? மருமகளை உள்ளங்கையில் தாங்கும் அம்மாவிற்கு இனி கேட்கவே வேண்டாம். இவளைத் தரையில் விடமாட்டாள்.

இவளைப் பற்றி எதையேனும் சொன்னால் என்னையே பைத்தியக்காரன் என்பாள் அம்மா. ஏனோ சீதாவைப் பார்க்க வேண்டும் என்று கூட தோன்றவில்லை. அங்கே நின்று மற்றவர்களின் சந்தோஷத்தை காணவும் பிடிக்கவில்லை.

அமைதியாக வெளியேறி கால்போன போக்கில் சுற்றி அலைந்து விட்டு வெறும் கையோடு வீட்டினுள் நுழைந்தவனை பார்த்த அனைவரின் கண்களில் கனல் தெறித்தது.

''எங்கேடா போனே? ஆஸ்பத்திரியில ஒரு மணிநேரமா தேடினோம். சொல்லிட்டு போனா என்ன?''

''அண்ணா! உன் சந்தோஷத்தைக் கொண்டாட ஏதாவது ஸ்வீட் வாங்கப் போயிருப்பேன்னு நினைச்சேன். இப்படி சும்மா வந்து நிற்கிறியே.''

''அப்படி எங்க தான் போனே? சொல்லித் தொலையேன்''

''சீதா! உன்னைப் பார்க்கணும்னு எவ்வளவு ஏங்கினா தெரியுமா? நாங்க தான் நீ கோவிலுக்கு போயிருக்கன்னு சொல்லி அவளை சமாதானப்படுத்தினோம். இப்பக்கூட நீ வந்தப்புறம் தான் சாப்பிடுவேன்னு அடம்பிடிக்கிறா. போ, போய் அவளைக் கூட்டிட்டு வா''

''அம்மா! அண்ணியை ஸ்ட்ரெயின் பண்ண வேண்டாம். அண்ணன் கிட்ட சாப்பாடு கொடுத்து விடுவோம். அண்ணன் ஊட்டட்டும்.''-சிவா சொல்ல, உமா வேகமாய் தட்டு நிறைய சாப்பாடு வைத்து அண்ணனிடம் நீட்டினாள்.

''போண்ணா! அண்ணியை சாப்பிடவை''

பதிலேதும் பேசாமல் வாங்கிக் கொண்டு திரும்பியவனை தாயின் குரல் அதட்டியது. ''டேய் நில்லுடா!'' நின்றான்.

''ஆமா! உனக்கென்ன பேயா பிடிச்சிருக்கு?''

''அம்மா''

''பின்ன என்னடா? பொண்டாட்டி உண்டாகியிருக்கா. அதுவும் முதல் குழந்தை. உன் முகத்தில் ஒரு துளி சந்தோஷத்தைக் காணோம்.?''

''சந்தோஷமா இருந்தா சினிமாவில மாதிரி அவளைத் தூக்கி சுத்தணுமா. எனக்கு நடிக்கத் தெரியாது.''-பட்டெனச் சொன்னான்.

''டேய்! எங்கிட்டயே நடிக்கிறியா? நீ எதையோ மனசுல வெச்சிகிட்டுத் தான் இப்படி பேயறைஞ்சமாதிரி திரியுற''

அதிர்ந்து நிமிர்ந்தான். 'அம்மாவுக்குத் தெரிந்து விட்டதா?'

''சொல்லுடா! என்ன பிரச்சனை உனக்கு? எதுவா இருந்தாலும் வாயைத் திறந்து சொல்லு. அப்பத்தான் பிரச்சனை தீரும்.''

''ஒன்னும் இல்ல. நான் சும்மா கல்யாண டென்ஷன்ல இருக்கேன்.''

''அண்ணா! அதுல என்ன டென்ஷன் இருக்கு? கிட்டதட்ட எல்லா பொருளும் வாங்கியாச்சு. பட்ஜெட் போட்டு செலவு பண்றோம். லோ. கடனும் வாங்க வேண்டாம். பிறகென்ன கவலை?''

''அதுக்கில்ல. ஒருத்தன் கிட்ட கொஞ்சம் பணம் கேட்டிருந்தேன்.''

''வேண்டாம் அண்ணா! நம்மிடம் உள்ளதை வைத்தே சமாளித்து விடலாம். யாரிடமும் கடன் வாங்க வேண்டாம்.''

''சரி''

''இப்ப உன் நினைப்பும், கவனிப்பும் அண்ணிகிட்டதான் இருக்கணும். போ, போய் சாப்பிடவை.''

''ம்''-என்றவாறு தன் அறையை நோக்கி நடந்தான்.

''அண்ணா! கொஞ்சம் சிரிச்சிகிட்டே தான் போயேன். நீ இப்படி உர்ரென்று இருந்தால் நாளை உன் பிள்ளையும் உன்னைப்போல் தான் பிறக்கும்.''- சிவா கேலியாய்ச் சொல்ல, நின்று திரும்பி தம்பியைப் பார்த்தான் ராம்குமார்.

''என்னைப் போல் பிறக்காது.''



''பின்னே? ஓ! அண்ணி மாதிரி பிறக்கணுமோ?''

''ம்ஹூம். உன்னைப் போலத்தான் பிறக்கும்''

''என்ன?''-வியப்பாய் பார்த்தான் சிவா.

''ஆமாம். உன்னைப்போல் அழகாய்.. துறுதுறுப்பாய்.. கலகலப்பாய் பிறக்கும். உன் அண்ணிக்கும் அதுதான் பிடிக்கும்.''

''டேய்! நம்ம நினைக்கிற மாதிரியா பிறக்கும். தகப்பன் நீ. உன்னை மாதிரிதாண்டா பிறக்கும்.''

''இல்லம்மா. தம்பி மாதிரிதான் பிறக்கும். வேணும்னா குழந்தை பிறந்த பிறகு பாருங்களேன். உங்களுக்கே தெரியும்.''-உறுதியாகச் சொன்னான். கணவனின் குரல் கேட்டு சந்தோஷமும் வெட்கமும் போட்டி போட, கட்டிலை விட்டு இறங்கி, சோர்ந்த உடலில் சக்தியைத் திரட்டி பெரு முயற்சி செய்து வாசல் வரை வந்து நின்ற சீதா கணவனின் பேச்சில் சுக்கு நூறாக சிதறினாள்.

கணவனின் பேச்சின் உள் அர்த்தம் புரிய தலை சுழன்றது. மற்றவர்களுக்கு புரியாவிட்டாலும் சீதாவிற்கு தெளிவாக புரிந்து விட கணவனை சற்று வெறுப்பாய் நோக்கினாள். ஏற்கனவே குமட்டிக் கொண்டிருந்தவளுக்கு கணவனின் கெட்ட எண்ணத்தால் மீண்டும் குமட்டிக் கொண்டு வந்தது.

# 7

**பாலைப்போல கள்ளும் கூட**
**வெண்மையானது-பருகிடாமல்**
**விளங்கிடாது உண்மையானது**
**நீயும் இங்கு காணக்கூடும்**
**ஓர்தினம் இந்த பால் மனம்!**

அறைக்குள் நுழைந்து கதவை சாத்தியவன் தட்டை கீழே போட்டான். சுவரோரமாய் அமர்ந்து சுவரில் சாய்ந்திருந்த சீதாவிடம் அசைவில்லை. அவளது மனம் உலைக்களமாகி கொதித்துக் கொண்டிருந்தது. கண்கள் சிவப்பேறிக் கொண்டிருந்தன.

''என் நிலைமையைப் பார்த்தியா? உம் மூஞ்சையே பார்க்கக்கூடாதுன்னு விலகிப்போனேன். இப்போ.. உங்கூட ஒரே ரூம்ல. ச்சே! நினைக்கவே அருவருப்பா இருக்கு''.

''எனக்கும் அப்படித்தான் இருக்கு''-சீதாவின் குரலில் கடுமை தொனித்தது.

''உன்னையே விரட்டி அடிக்கணும்னு இருக்கேன். இதுல குழந்தையாம்! எவன் கேட்டான் இதை. ச்சே! என்னை சாகடிக்கத்தான் இது உண்டாயிருக்கு.''

சீதாவிற்கு பொசு பொசுவென கோபம் கனன்றது. புருஷன் எது பேசினாலும் பொறுத்துபோம்மா. தாயின் குரல் கோபத்தில் நீரூற்றியது.

''ஒவ்வொரு நாளும் இது எப்போ பொறக்குமோ எப்படி பொறக்குமோன்னு நான் நெருப்பு மேல நிக்கணும். ம்ஹூம்! நான் கூட உன்னை பெரிய பத்தினின்னு நினைச்சிட்டேன். மருந்தைக் குடிச்சாளோ மாத்திரையை தின்னுட்டாளோன்னு கொஞ்ச நேரத்தில ஆடிப்போயிட்டேன்.''

சீதாவின் புருவங்கள் உயர்ந்தது. ''ஏன்? நான் ஏன் மருந்தைக் குடிக்கணும்?''

''ம்? உன் பத்தினி தனத்தை நிரூபிக்கிறதுக்கு அதான் அந்த ராமாயண சீதை தீக்குளிச்சாளே. அதை மாதிரி''-அலட்சியமாய் அவன் சொல்ல, சீதாவின் முகம் கனன்றது. உள்ளே தலை தூக்கிய தாயின் போதனைகளை அடக்கி ஒடுக்கி காலடியில் போட்டு அதன் மீது ஏறி நின்றாள். கணவனை நேராய் நிமிர்ந்து பார்த்தாள். மனதில் எழுந்த துணிவு குரலிலும், முகத்திலும் தெறித்தது.

''அந்த சீதை செய்த தப்பை நான் ஒருநாளும் செய்யமாட்டேன். தீக்குளிச்சு என் கற்பை நிரூபிச்சுத்தான் உங்க கூட குடும்ப நடத்தணும்னா அப்படி ஒரு வாழ்க்கையே எனக்குத் தேவையில்லை.''

''பேசுவடி. உன்னால பேசத்தானே முடியும்? நீ சுத்தமானவன்னு நிரூபிக்க முடியுமா?''

''முடியும்'' என்றாள் உறுதியாய்.

''என்ன? முடியுமா? எப்படி?''

''உங்களை எரிக்க என்னால நிரூபிக்க முடியும்?''

அதிர்ந்து நகர்ந்தான் ராம்குமார். ''ஏய்! என்னடி உளர்ற?''

''உண்மையைத் தான் சொல்றேன்.''

''என்னடி உண்மை''

''உங்களுக்கு அக்னி குண்டம் வளர்க்க வேண்டாம். ரெண்டு லிட்டர் கெரசின் போதும். தலையில் ஊற்றிக் கொள்ளுங்கள். நான் பத்தினி என்பது உண்மையானால் நான் கொளுத்தும் தீக்குச்சி உங்களை எரிக்காது.''

''ஏய்! பைத்தியமாடி நீ''

''இதே முறையை அன்று சீதை கையில் எடுத்திருந்தால் இன்று உங்கள் ஆண் வர்க்கத்திற்கு இந்த சந்தேகம் என்ற பேய் பிடித்திருக்காது. சரி என்னால் இதற்கு ஒரு தீர்வு கிடைக்கட்டும்.''

''ஏய்! ஏய்! உளறாதே!''

''என் வயிற்றில் ஜனித்திருக்கும் சிசு என் கழுத்தில் தாலிகட்டி என்னுடன் குடும்பம் நடத்திய என் கணவனால் உண்டானது. இதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் உங்கள் சந்தேகத்தை நான் தீர்க்க வேண்டாமா?''

''அதுக்காக.. என்னையே கொளுத்துவியா?''

''கண்டிப்பா. எத்தனை காலம் தான் சீதையே தீக்குளிப்பாள். ராமன்களும் குளித்துப்பாருங்களேன்.''

''எவ்வளவு திமிர்? எங்கிருந்து வந்தது உனக்கு இத்தனை திமிர்?''

''ஏன்? உங்களுக்கு மட்டும் தான் இருக்குமா திமிர்?''

''புரிஞ்சு போச்சுடி. நீ ஏதோ திட்டத்தோடத்தான் இப்படிப்பண்றே. என்னைக் கொளுத்திட்டு என் தம்பிய கட்டிக்கலாம்னு பார்க்கிறியா?''

''நீ உன் சகோதரியை மணப்பாயா? உன் தாயை மணப்பாயா?''

''ஏய் பல்லை தட்டி விடுவேன்.''

''கோபம் வருகிறதா? சிவா என் சகோதரன். என்னை தன் தாயாய் பார்க்கிறவன். அவனை நான் மணப்பதா? உன் புத்தியில் என்ன சாக்கடையா ஓடுகிறது?''

''ஏய்! என்னடி மரியாதை தேய்கிறது?''

''ஒரு கணவனாக நீ என்னிடம் நடந்து கொள்ளவில்லை. என் பிள்ளைக்கு



தகப்பனாகவும் நடந்து கொள்ளப்போவதில்லை! பிறகென்ன மரியாதை உனக்கு?''

''ஆமாம். அது உன் பிள்ளைதான். என் பிள்ளை இல்லை. நான் ஏற்றுக் கொள்ளவும் மாட்டேன்.''

''ஏற்றுக் கொள்ளுங்கள் என்று யார் காலிலும் விழுந்து கெஞ்சமாட்டேன்.''

''பின்னே? அப்பன் யாருன்னு கேட்டா என்ன சொல்வ?'' மனைவியை உற்றுப் பார்த்துக் கேட்டான். சீதாவின் விழிகளில் ஒரு துளி கண்ணீர் கூட இல்லை.

நிறுத்தி நிதானமாய்ச் சொன்னாள். ''உன் அப்பா செத்துவிட்டார் என்று சொல்லி வளர்ப்பேன்.''

''பாதகி! நான் ஒருத்தன் குத்துக்கல்லா இருக்கும் போதே இப்படிச் சொல்றியே. நீயெல்லாம் ஒரு பெண்ணா?''

''ம்ஹூம். நீங்கள் என்ன சொன்னாலும் எதைச் செய்தாலும் மறுத்துப் பேசாமல் இருந்தால் நாங்கள் குலமகள். எதிர்த்து கேட்டால்..''

''கேட்கக்கூடாதுடி. அதுக்காகத்தான் வெறும் பத்தாங்கிளாஸ் படிச்ச உன்னைக் கட்டினேன். நீ இவ்வளவு மோசக்காரின்னு தெரியாமப் போச்சே''

''மனசுல இவ்வளவு அழுக்கையும், வன்மத்தையும் வச்சிட்டு இருக்கிற உங்களுக்கு கல்யாணம் ஒருகேடா?''

''எல்லாத்தையும் நீ மறைச்சிட்டு என்னை பழிக்கிறியா?''

''அப்படியெதை மறைச்சேன். பெண் பார்க்க வரும் மாப்பிள்ளை தன் கண்ணில் படும் பெண்களை இதுதான் பெண்ணா? இவளாக இருக்குமோ என பார்க்க மாட்டீர்களா? அதையெல்லாம் நாங்கள் குற்றம் சொல்ல முடியுமா?''

''அதுவும் இதுவும் ஒன்றா?''

''ஒன்றுதான். என் மனதில் கள்ளம் இல்லை. அதனால் சஞ்சலமும் இல்லை. ஆனால் உங்கள் மனதில் எல்லாக்குப்பையும் மண்டிக்கிடக்கு. அதனால மனைவியின் கர்ப்பத்தைக் கூட ஏற்றுக் கொள்ள முடியவில்லை.''

''என்னால ஏற்றுக் கொள்ள முடியாது. உன்னையும் இங்கே இருக்க அனுமதிக்க மாட்டேன்.''

''ஏன்? இது என் வீடு. நான் வாழவந்த வீடு.''

''நானே வேண்டாம் என்கிறேன். பிறகு எப்படி வாழ்வாய்? யாருடன் வாழ்வாய்?''

''என் குழந்தையோடு வாழ்வேன். என் மாமன், மாமியாரோடு வாழ்வேன்.''

''அப்போ! உனக்கு நான் தேவையில்லை.''

''என்னை சந்தேகித்து என் பெண்மையை அவமதித்து என் கருவை கேள்வியாக்கிய உங்களை என் வாழ்நாள் முழுக்க கணவனாக ஏற்றுக் கொள்ள மாட்டேன்.''

''இது போதும்டி. நீ எப்படி வாழ்ந்திடுறேன்னு நான் பார்க்கிறேன். இந்த பேப்பர்ல கையெழுத்துப்போடு''-வேகமாய் எழுந்து அலமாரியைத் திறந்து சில பேப்பர்களை எடுத்து அவனிடம் நீட்டினான். எல்லாமே திட்டமிட்டு செய்கிறான் என புரிந்துபோனது.

''என்னது இது?''-மிடுக்காய்க் கேட்டாள்.

''விடுதலைப் பத்திரம்''

''யாருக்கு விடுதலை?''

''உங்கிட்ட இருந்து எனக்கு!''

''கண்டிப்பாத்தாமாட்டேன்.''

''நான் தான் உனக்கு வேண்டாமே. பிறகென்ன?''

''ஓஹோ. நீங்க சந்தேகப்படுவீங்க. எங்களை சாகச் சொல்லுவீங்க. கடையில புள்ளையோட தவிக்க விட்டுட்டு ஈஸியா விடுதலை வாங்கிடுவீங்க. இதெல்லாம் எங்கிட்ட நடக்காது.''- ஒற்றை விரலை நீட்டி எச்சரித்தாள் சீதா.

ராம்குமாரே மிரண்டு தான் போனான். நில் என்றால் நிற்கும் உட்கார் என்றால் உட்காரும் சீதாவா இவள்? இவளுக்கு எப்படி வந்தது இத்தனை துணிவு? சாது மிரண்டால் காடு தாங்காது என்பார்களே. அது இது தானா?

''என்ன முழிக்கிறீங்க? வாழ்வோ, சாவோ எனக்கு இந்த வீடுதான் நிரந்தரம். அதே மாதிரி உங்களுக்கும் இந்த ஜென்மத்தில் நான் மட்டும் தான் பொண்டாட்டி. இன்னொரு பெண்ணோட வாழ்க்கையும் கெட்டுப்போக விடமாட்டேன்.''

''நீ என்னடி விடுறது? நான் வெளியே போய் எவளையாவது கட்டிகிட்டா என்னடி செய்வ?''

''ம் கட்டிக்கலாம். ஆனா நிம்மதியா வாழ முடியாது.''

''என்ன? உன் நினைவு வந்து உறுத்தும்னு நினைக்கிறியா? அதுக்கு வேற ஆளைப்பாரு.''

''அட! இதயமே இல்லாதவனுக்கு நினைப்பு எப்படி வரும்? நான் அந்த அர்த்தத்தில் சொல்லல''

''பின்னே? சாபம் கொடுக்கிறியா?''

''நடக்கப்போறதைச் சொன்னேன். இன்னொரு பெண்ணைக் கட்டிக் கொண்டு அவள் நின்றால் நடந்தால், சிரித்தால் உங்களுக்கு பல்வேறு எண்ணங்கள் வருமே. பழமையில் ஊறிய என் அம்மா போதித்து வளர்த்த என்னுடனே உங்களால் குடும்பம் நடத்த முடியவில்லை. இன்னொருத்தி கூட வாழ முடியுமா?''

''அதைப்பற்றி நீ கவலைப்பட வேண்டாம். எனக்கு வாழத்தெரியும்.''

''உங்கள் சந்தேகப்புத்தி கொஞ்சம் கொஞ்சமாய் உங்களை அரித்து பைத்தியக்காரனாக்கி நடுத்தெருவில் நிற்கவைக்கப்போகிறது. அது என் கண் முன்னால் நடக்க வேண்டாம்.''

''பெரிய பத்தினி? நீ சாபம் கொடுத்து பலித்து விடப்போகிறதா?''

''பலித்து விட்டால் நான் பத்தினி என்று ஒத்துக் கொள்வீர்களா?''

''அதை அப்போது பார்ப்போம்.''

''அப்போதும் நான் உங்களை ஏற்றுக் கொள்ளமாட்டேன். அதனால் என்னைத் தேடி வரவேண்டாம்.''

''பார்க்கிறேன்டி. என்னை இழந்துட்டு நீ எப்படித்தான் வாழறேன்னு பார்க்கிறேன். பொட்டச்சி உனக்கே இவ்வளவு திமிர் இருந்தா நான் ஆம்பளை என்னால வாழ முடியாதா?''

''பார்க்கலாம்''-ஒற்றை வார்த்தையோடு அறையை விட்டு விலகினாள்.

''ஏய். நில்லுடி! எங்கே போற? எல்லார்கிட்டேயும் சொல்லப்போறியா?'' அதட்டலாய் கேட்டுக் கொண்டிருக்கும் போதே வீட்டினுள் பங்கஜத்தின் குரல் கேட்டது.



''சீதா! என் ராஜாத்தி''-தாயின் குரலில் மௌனமாய் வந்தவளை திருஷ்டி கழித்தாள் பங்கஜம்.

''என் கண்ணு! இதனால தான் உடம்பு சோர்ந்து போயிருந்தியா? நான் கூட என்னவோ ஏதோன்னு பயந்திட்டேன். இந்தா கோவில் பிரசாதம்''

''அம்மா! நைட்டே ஓடி வந்திருக்கீங்க. காலையில வந்திருக்கலாமே''

''அது எப்படி? சம்பந்தி போன் மூலமா விஷயத்தைச் சொன்ன பிறகு வீட்ல இருக்க முடியுமா? அதான் பார்வதி அத்தைய சாந்திக்கு துணையா விட்டுட்டு வந்தேன். உடம்பு எப்படிம்மா இருக்கு?''

''ம். இப்ப பரவால்லம்மா''

அப்போது பெரிய பார்சலுடன் உள்ளே நுழைந்தான் சிவா.

''அடடே! அத்தே எப்போ வந்தீங்க? நல்லா இருக்கீங்களா?''

''இப்பத்தான் வந்தேன் தம்பி.''

''சரியான நேரத்தில தான் வந்திருக்கீங்க வாங்க. இப்படி உட்காருங்க. அண்ணி நீங்களும் தான்.''

''என்ன சிவா?''

''சொல்றேன். முதல்ல உட்காருங்க. அத்தே! அம்மா எல்லாரும் வாங்க.''

''என்னடா சிவா. அப்படி என்னதான் வாங்கிட்டு வந்திருக்கே''

''அம்மா! நம்ம பிரகாஷோட வொய்ப் இப்ப கர்ப்பமா இருக்காங்கல்ல''

''ஆமா''

''அவங்க கிட்ட போய் இப்போ என்னெல்லாம் சாப்பிடணும் எதெல்லாம் சாப்பிடக்கூடாதுன்னு கேட்டு அண்ணிக்கு பிடிச்சதெல்லாம் வாங்கிட்டு வந்திருக்கேன்.''

''ஏன்டா அவசரக்குடுக்கை. இப்போ அண்ணிக்கு மூணுமாசம் தான்டா ஆகுது. இப்ப எது சாப்பிட்டாலும் வாந்தி பண்ணிடுவா.''

''அதுக்கும் ஒரு மருந்து இருக்கு. வாங்கிட்டு வந்திருக்கேன்.''

''சிவா. எனக்கு எதுக்கு இதெல்லாம்? சாப்பாட்டை பார்த்தாலே குமட்டுது.'' முகத்தைச் சுளித்தாள் சீதா.

''அதுக்காகத்தான் அண்ணி இதை வாங்கிட்டு வந்தேன். அம்மா! இந்தக் கவர்ல எல்லா பழங்களும் இருக்கு. ஒன் அவருக்கு ஒரு வாட்டி ஜூஸ் எடுத்துக் குடுங்க''

''சரி''

''இதுல பிரெட், ஜாம், ஸ்வீட் பன், கேக் எல்லாம் இருக்கு. அப்பப்போ சாப்பிட வையுங்க.''

''சரிடா. ஆமா! அது என்ன?''

''இது அண்ணியோட ஸ்பெஷல். அண்ணி! இதை எப்பவும் உங்க ரூம்ல வெச்சிக்கங்க.''- என ஒரு பார்சலை நீட்டினான்.

''எ.. என்ன சிவா?''

''மாங்காய். நெல்லிக்காய் அப்புறம் புளிப்பு மிட்டாய்''

''எ.. எனக்கா?''

''ஆமா அண்ணி. இந்த மாதிரி நேரத்தில புளிப்பா சாப்பிடணும்னு தோணுமாமே. அதான் வாங்கிட்டு வந்தேன்.''

சீதாவின் கண்கள் கலங்கின. ''சிவா! சிவா! இதையெல்லாம் எனக்காக தேடித்தேடி வாங்குனீங்களா?''

''ஆமா அண்ணி! நம்ம குடும்ப வாரிசை சுமக்கிறீங்க. நாங்க உங்களை பத்திரமா பார்த்துக்க வேண்டாமா?''

பங்கஜம் கூட நெக்குருகிப்போனாள். எத்தனை தங்கமான பிள்ளை இது!

''அண்ணி! சீக்கிரமே ஒரு பெண் குழந்தை பெத்து தந்திடுங்க.''

''எம்ப்பா! பெண் குழந்தை கேட்கிற''

''உமா இன்னும் கொஞ்ச நாள்ல புருஷன் வீட்டுக்கு போயிடுவால்ல. அடுத்த மகாலஷ்மி இந்த வீட்ல துள்ளிக்குதிச்சு விளையாடட்டும்.''

''அண்ணா! ரொம்ப அவசரப்படாதே. இன்னும் ஏழுமாசம் நாம வெயிட் பண்ணனும்.''

''சிவா! உனக்கு குழந்தைங்க மேலே அவ்வளவு ஆசையா?''

''இருக்காதா? என்னை விட அவனுக்குத்தான் ஆசையும் எதிர்பார்ப்பும் இருக்கும்.''-ஒரு மாதிரியான குரலில் சொன்னவாறே வந்தான் ராம்குமார்.

''உண்மைதான் அண்ணா. ஆனா உனக்கு அப்படி எதுவும் இல்லையா?''

''அது உன் குழந்தை தானே? அதான் உனக்கு இவ்வளவு ஆசை''- சொன்ன கணவனை பார்வையால் பொசுக்கினாள் சீதா.

சிவாவோ எந்தக் கபடமும் இன்றி சிரித்தான். ''அட! ஆமாம். அது நம் பிள்ளைதானே. என்னை சித்தப்பா என்று அழைக்குமே. அப்போ என் மகள் தானே.'' குதூகலித்தான்.

''இதுக்கு என்ன சொல்ற?'' என்பதாய் மனைவியைப் பார்த்தவனது பார்வையைக் காணப்பிடிக்காமல் வெறுப்பாய் முகத்தைத் திருப்பிக் கொண்டாள் சீதா.

## 8

**இரவென்றால் மறுநாளே**
**விடியும் உன்தோட்டத்தில்**
**அப்போது பூக்கள் மலரும்!**

**பெ**ட்டி படுக்கையோடு புறப்பட்ட மகனைப் பார்த்து அதிர்ந்து போனாள் அன்னபூரணி. ''ராம்! என்னப்பா இது? திடுதிப்புன்னு கிளம்பி நிக்கிற?''

''திடீர்னு தான் வேலைய மாத்தினாங்க. உடனே ஜாய்ன் பண்ணனும்மா. அதான் கிளம்பிட்டேன்.''

''ஏண்டா? பேசாம அதே வேலையிலயே இரேன். இதுக்காக அவ்வளவு தூரம் போகணுமா?''

''ஏம்மா! இதோ இருக்கிற மும்பைதானே. நினைச்சா வந்திட்டு போறேன். பதவி உயர்வும்மா. புது வேலை, புது இடம், புது லைப், என் லைப்பே மாறப்போகுதும்மா.''

''அதெல்லாம் சரிடா, கல்யாணத்துக்கு இன்னும் நாலுநாள் தான் இருக்கு. இந்த நேரம் போறியே.''

''நாளைக்கு காலையில வேலையில் ஜாய்ன் பண்ணிட்டு மறுநாளே வந்து கல்யாணத்தை அட்டெண்ட் பண்ணிட்டு போயிடுறேம்மா.''

''வந்துட்டு போயிடுவியா. டேய் நீ தான்டா வீட்டுக்கு மூத்தபுள்ள



நீதானே கூடமாட இருந்து எல்லா வேலையும் பார்க்கணும்.''

''அதான் சிவா இருக்கானே. அவன் பார்த்துப்பான்.''

''சரிடா. அதை விடு. சீதா இப்படி இருக்கும் போது நீ அவ்வளவு தூரம் போறுமா.''

''நம்ம வீட்டு வாரிசு உண்டான நேரம் தான் எனக்கு திருப்புமுனையா இருக்கு. அதை கெடுத்துக்க முடியுமா?''

''வேலை முக்கியம் தான். ஆனா அதை விட சீதா முக்கியமில்லையா?''

''அதெல்லாம் சிவா பார்த்துப்பான். என்னை விட அவனுக்குத்தான் ரொம்ப அக்கறை''

''டேய்! நாங்க அக்கறையா இருக்கிறது பெரிசில்லடா. கட்டினவன் பேசுற வார்த்தையிலும் காட்டுற அன்பிலயும் தான்டா ஒரு பொண்ணு தன் னோட வலியையும் வேதனையையும் மறப்பா.''

''அம்மா இப்படி எதையாவது பேசி என் முன்னேற்றத்தைத் தடுக்காதீங்க. இன்னும் ஒரு மணிநேரத்தில நான் ரெயில்வே ஸ்டேஷன்ல இருக்கணும். கிளம்பறேன்.''

''டேய் இருடா. அப்பாகிட்ட சொல்ல வேண்டாமா?''

''அப்பா எப்போ வர்றது? நான் எப்போ சொல்லிட்டு புறப்படுறது? நீயே சொல்லிடும்மா.''

''டேய். நீ பாட்டுக்கு கிளம்பிட்டு போற. அப்பா வந்து எங்கிட்ட கத்து வாரே.''

''நான் என்ன ஒரேயடியாவா போறேன். போய் போன் பண்றேன். அப்ப பேசிக்கிறேன்.''

''சரிடா. அதுக்கு ஏன் இப்படி வார்த்தை விடுற? ரொம்பதூரம் போற. பார்த்து பத்திரமா போயிட்டு வா. அப்பப்ப போன் பண்ணு.''

''ம். ம்''

''சீதாகிட்ட சொல்லிட்டியா?''

''அவ தூங்கிட்டு இருக்கா. எழுந்ததும் சொல்லிடுங்க.''

''என்ன? அவகிட்ட கூட சொல்லலே இல்லையா? டேய்! உண்மையச் சொல்லு நீ எங்கே போற. ஏன் இவ்வளவு அவசரமாப்போற. அதுவும் கட்டின பொண்டாட்டிகிட்ட கூட சொல்லாம?''-பதட்டமானாள் அன்னபூரணி.

''அம்மா! ஏற்கனவே கம்பெனியில இந்த ஜாபுக்கு சொல்லியிருந்தேன். இப்ப ஒரு மணி நேரத்துக்கு முன்ன தான் போன் வந்தது. நான் உடனே கிளம்பிட்டேன்.''

''அதுக்கு அவகிட்ட கூட சொல்லாம போகணுமா?''

ராம்குமார் முகம் கறுத்தது. ''உங்க சின்னமகன் டெல்லி போய் சம்பாதிச்சானே. அப்போ தடுத்தீங்களா? நான் முன்னேறுவது மட்டும் உங்களுக்கு பிடிக்கலையா?''

அன்னபூரணி பேச்சற்று போனாள். ''ரா.. ராம்! என்னடா இது? ஏன் இப்படிப் பிரிச்சுப் பேசுற?''

''இன்னும் நிறைய பேசியிருப்பேன். இப்ப எனக்கு நேரமில்ல. ஆனா ஒரு நாள் பேசுவேன். அப்போத் தெரியும் உங்களுக்கு என் கஷ்டம் எல்லாம்! ஆட்டோ ரொம்ப நேரமா வெயிட்டிங்கல நிக்குது. நான் கிளம்புறேன்.'' சொல்லிவிட்டு தன் பொருட்களோடு வேகமாய் போய் ஆட்டோவில் ஏறி

அமர்ந்ததும் ஆட்டோ பெரிய உறுமலோடு புறப்பட்டுச் சென்றது.

அந்த உறுமலில் சோர்வாய் படுத்திருந்த சீதா கண் விழித்தாள். சற்று நேரத்திற்கு பிறகே பார்வை தெளிவானது. வயிற்றைப் புரட்ட, மெல்ல எழுந்து அறையை விட்டு வெளியே வந்தாள்.

வாசலில் உறைந்த நிலையில் நின்று கொண்டிருந்த மாமியாரின் தோளைத் தொட்டாள். திடுக்கிட்டு திரும்பியவள் மருமகளைப் பார்த்ததும் புன்னகைத்தாள்.

''எழுந்திட்டியாம்மா? ஆரஞ்சு பழம் பிழிஞ்சு தரட்டுமா?''

''கொஞ்சம் நேரமாகட்டும் அத்தே. ஆட்டோ சத்தம் கேட்டதே. யார் வந்தாங்க அத்தே''

''அ..அது''-தடுமாறிய அன்னபூரணி அவசரமாக யோசித்தாள். வயிற்றுப் பிள்ளைக்காரியிடம் எப்படிச் சொல்வது? சொல்லாமல் இருக்கவும் முடியாதே. இதமாய் பதமாய் சொல்லி வைக்கலாம். ராம் போனில் பேசும் போது மனைவியை சமாதானம் செய்து கொள்வான் என்ற நம்பிக்கையில் மருமகளின் மனம் நோகாதவாறு நாசூக்காய் சொல்லி முடித்தாள்.

''போயிட்டாரா? நிஜமாவே போயிட்டாரா?''- விரக்தியாய் கேட்ட மருமகளை உள்ளே அழைத்து வந்து அமர வைத்தாள்.

''அம்மாடி! அவனுக்கும் உன்னை விட்டுட்டு போக மனமே இல்லை. ஆனா பெரிய வேலையாம். நாளைக்கே சேரணுமாம். உங்கிட்ட சொன்னா அழுது அடம்பிடிப்ப. உன் உடம்புக்கு ஆகாதுன்னு சொல்லிட்டு என்னைச் சொல்லச் சொன்னான்மா''

மாமியாரை வியப்பாய் பார்த்தாள் சீதா. ''அப்படியா சொன்னார்?''

சீதாவின் குழப்பத்திற்கான விடை உமாவின் திருமணம் வரை கிடைக்கவே இல்லை. மும்பை சென்றவனிடம் இருந்து எந்தத் தகவலும் வரவில்லை.

உலகநாதனும் சிவாவும் அன்னபூரணியிடம் எகிறிகுதித்தனர். சற்று ஆத்திரம் அடங்கியதும் அவனது போனில் தொடர்பு கொள்ள முயற்சித்து தோற்றனர்.

''போனை ஆப் பண்ணி வெச்சிருக்கான்.''

''ஒரு வேளை நம்பர் மாத்தியிருப்பானோ''

''கல்யாணத்திற்காவது வருவானா? கேட்கிறவங்க கிட்ட பதில் சொல்ல முடியாதே''

''அண்ணிகிட்டயாவது சொல்லிட்டு அட்ரஸ் போன் நம்பர் ஏதாவது கொடுத்திட்டு போயிருக்கலாமே. அண்ணன் ஏன் இப்படிப் பண்றான்?''

''விடிஞ்சாக் கல்யாணம். இவன் கிட்ட இருந்து எந்தத் தகவலும் வரலையே. அப்படி எங்கே தான் போய்த் தொலைந்தான்?'' -ஒருவர் மாற்றி ஒருவராய் அங்கலாய்த்துக் கொண்டார்களே தவிர, அனைத்துக்கும் காரணமான ராம்குமாரிடம் இருந்து எந்த பதிலும் கிடைக்கவில்லை

உமாவின் திருமண நாளும் வந்தது. கேட்கும் அனைவரிடமும் அன்னபூரணியே ஏதேதோ சொல்லி சமாளித்தாள். பங்கஜம் எத்தனையோ முறை துருவி துருவிக் கேட்டும் சீதா மட்டும் வாயை திறக்கவே இல்லை

திருமணம் நல்ல படியாய் முடிந்து கணவன் வீட்டிற்கு உமா சென்று விட மசக்கையை காரணம் காட்டி படுக்கையிலேயே கிடந்தாள் சீதா. சாப்



பிடாமல், சாப்பிடப் பிடிக்காமல் உடல் வற்றிப்போக, மருத்துவர் திட்டித் தீர்த்தார்.

''எம்மா! வீட்ல ஆயிரம் பிரச்சனை இருக்கும். அதுக்காக வயிற்றுப் பிள்ளையோடு இப்படியா பட்டினி கிடப்பே. நான் தந்த மருந்து மாத்திரையெல்லாம் ஒழுங்கா சாப்பிடுறியா இல்லையா?''

சீதாவிடம் இருந்து எந்த பதிலும் இல்லாமல் போகவே அன்னபூரணியை தனியே அழைத்துப் பேசினார்.

''இதோ பாருங்கம்மா. அந்தப் பொண்ணு மனதளவில் ரொம்ப பாதிப்படைஞ்சிருக்கா. முதல்ல அவகிட்ட பேசி அவ துக்கத்தை வெளிக்கொண்டு வாங்க. இப்படியே விட்டா அது பெரிய பாதிப்பாயிடும்.''

''டாக்டர்''

''ஆமாம்மா. அந்தப் பொண்ணு ரொம்ப அனீமிக்கா இருக்கா. கர்ப்பமா இருக்கும் போது உடம்பு மனது ரெண்டுமே உற்சாகமா சந்தோஷமா இருக்கணும். இப்படியே இருந்தா தாய்க்கும், சேய்க்கும் ஆபத்து தான்.''

''டாக்டர். அப்படியெல்லாம் சொல்லாதீங்க. எனக்கு எம்மருமகளும் என் பேரப்பிள்ளையும் பத்திரமாக கிடைக்கணும்.''

''அது உங்க கையிலதான் இருக்கு. அவங்ககிட்ட பேசி அவங்க மனசில என்ன இருக்குன்னு கண்டுபிடிச்சு அதுக்கான தீர்வை பண்ணுங்க. வேளாவேளைக்கு சாப்பிட வையுங்க. நெக்ஸ்ட் வீக் கூட்டிட்டு வாங்க''

''சரி டாக்டர். நான் பொறுப்பா பார்த்துக்கிறேன்.''- மருமகளை கைத்தாங்கலாய் அழைத்துக் கொண்டு வெளியேறினாள்.

வீட்டை அடையும் வரை இருவரிடமும் அசைவில்லை. சீதா வெறித்த பார்வையோடு அமர்ந்திருக்க, அன்னபூரணி பலவித எண்ணத்தோடு யோசனை செய்து கொண்டே வந்தாள்.

வீட்டை அடைந்து ஆட்டோவை விட்டு இறங்கும் போதே சிவா ஆர்வமாய் ஓடிவந்தான்.

''அம்மா! டாக்டர் என்ன சொன்னாங்க?''

''உள்ளே வா. சொல்றேன்.''-அமைதியாய் வீட்டினுள் நுழைந்து சீதாவை அமர வைத்தாள். குளுகோஸ் கரைத்து குடிக்கக் கொடுத்தாள்.

''அம்மா! டாக்டர் என்னம்மா சொன்னாங்க? ஏன் அண்ணியால சாப்பிட முடியல்ல. ஏதாவது சொன்னாங்களா?''

''ம். சொன்னாங்க. அப்பா எங்கே?''

''கடைக்கு போயிருக்காங்க. ஏம்மா?''

''அப்பாவும் வந்துடட்டும். நிறைய பேசவேண்டிருக்கு.'' தாயின்குரலில் முகம் மாறினான் சிவராம்.

''அம்மா! என்ன? எதுவும் பிராப்ளமா?''

''ஆமா! சரி நீ போன காரியம் என்னாச்சு? அவனோட அட்ரஸ் எதுவும் கிடைச்சதா?'' சிவா தயக்கமாய் சீதாவை பார்த்துவிட்டு தாயிடம் திரும்பினான். ''இல்லம்மா! அண்ணன் கம்பெனியில எந்த பதவி உயர்வும் கிடைக்கல்ல. இவனே வேலையை ராஜினாமா பண்ணியிருக்கான்''

அன்னபூரணி அதிர்ந்தாள். ''என்னடா சொல்ற?''

''ஆமாம்மா. உங்கிட்ட பொய் சொல்லியிருக்கான். மும்பையில அவங்களுக்கு பிராஞ்ச் எதுவும் கிடையாதாம். வேற வேலை கிடைச்சிருக்குன்னு

சொல்லி ரிஸைன் பண்ணிட்டு போயிருக்கான்''

அன்னபூரணி உடல் அதிர நிற்க முடியாமல் தரையில் அமர்ந்தாள். கொஞ்சம் பயமாய் சீதாவை திரும்பிப் பார்த்தாள். சீதாவிடம் எந்த அசைவும் இல்லை. அதே வெறித்த பார்வையோடு அசையாமல் அமர்ந்திருந்தாள்.

''சி... சிவா! இவன் அப்படி எங்கேடா போயிருப்பான்? இதுவரைக்கும் ஒரு போன் கூட பண்ணலையே'' குரல் நடுங்கக் கேட்டாள்.

''அதாம்மா எனக்கும் புரியல்ல. அப்பா வந்ததும் பேசிட்டு அடுத்து என்ன பண்ணலாம்னு முடிவெடுப்போம்''

''சிவா! போலீசில் ஏதாவது ரிப்போர்ட் பண்ணவோமா?''

''அம்மா! அவன் ஒண்ணும் காணாமல் போகல்ல. அவனே விரும்பிப் போயிருக்கான் நாம என்னன்னு ரிப்போர்ட் பண்றது?''

''அதுக்ில்லடா! மாசமும் கூடிட்டே போகுது. இந்தப் பொண்ணு வேற பிரமை பிடிச்சாப்புல இருக்கா. இப்படியே விட்டா ரெண்டு உசுருக்கும் ஆபத்துன்னு டாக்டரம்மா சொல்றாங்கடா'' தாயின் தவிப்பில் திடுக்கிட்டுப் போனான்.

''அம்மா! என்னம்மா சொல்றீங்க?''

''அவன் வரணும்டா. வந்தாத்தான் சீதா முகத்துல சிரிப்பைப் பார்க்க முடியும். இப்போதைக்கு நம்மளவிட இவளுக்குத்தான்டா அவன் முக்கியம். அவனை எப்படியும் வரவழைக்கணும்டா. எனக்கு என் மருமகளும் பேரப் புள்ளையும் எந்த கஷ்டமும் இல்லாம இருக்கணும் சிவா! அவனைத் தேடுடா. எப்படியாவது கூட்டிட்டு வாடா''

''அவர் வரமாட்டார் அத்தே'' சீதாவின் மரத்தகுரலில் அதிர்ந்து திரும்பினான்.

''சீதா! நீ என்னம்மா சொல்ற?''

''அவர் வரமாட்டார் அத்தே''

''எம்மா இப்படிச் சொல்றே. ஏன் வரமாட்டான்?''

சீதா மௌனமாய் இருக்க, சிவா நெருங்கினான். ''அண்ணி! எதுவா இருந்தாலும் சொல்லிடுங்க. இப்படியே மௌனமா இருந்து உங்களை நீங்களே கஷ்டப்படுத்திக்காதீங்க. சொல்லுங்க அண்ணி. ஏன் வரமாட்டான்?''

''அவருக்கு என்னை பார்க்கவோ பேசவோ பிடிக்கலியாம் சிவா?''

''சேச்சே! என்ன அண்ணி சொல்றீங்க? அண்ணனுக்கு உங்க மேல எவ்வளவு பிரியம்?''

''நானும் அப்படித்தான் நினைச்சிட்டு இருந்தேன் சிவா. ஆனா நீங்களோ நானோ நினைச்ச மாதிரியில்ல உங்க அண்ணன்'' தொண்டை அடைத்தது.

''அண்ணி! என்ன சொல்றீங்க?''

''சீதா! உங்களுக்குள்ள என்னம்மா பிரச்சினை? என்ன நடந்தது?''

''அத்தே! நான் இதை எப்பவோ உங்ககிட்ட சொல்லியிருக்கணும். ஆனா அவர் எதுவுமே சொல்லாம போயிட்டதால நானா எப்படிச் சொல்லன்னு விட்டுட்டேன்''

''சொல்லும்மா. என்ன நடந்தது?''

''அத்தே! நான் யாரு அத்தே?''

''இது என்னம்மா கேள்வி? நீ என் மருமக. இந்த வீட்டு மகாலட்சுமி''

''நான் எப்படிப்பட்ட பொண்ணு அத்தே?''



''நீ தங்கமாச்சே. உனக்கு ஏன் இப்போ இந்தக் கேள்வி''

''அத்தே! நான் தப்பானவளா? எனக்கு தப்பு செய்யத் தெரியுமா?'' கேட்கும் போதே கண்களில் நீர் நிறைந்தது.

''என் கண்ணே! உன்னைப் போய் யார் அப்படிச் சொன்னது? யார் என்று சொல். சொன்னவளின் நாக்கை அறுத்துடுறேன்''

''உங்க புள்ள சொல்லிட்டாரு அத்தே. என் நடத்தையை என் கற்பை என் கர்ப்பத்தை களங்கப்படுத்திட்டாரு அத்தே'' கதறிக் கொண்டே அன்னபூரணியின் மடியில் சாய்ந்தாள் சீதா.

திடுக்கிட்டுப் போனாள் அன்னபூரணி. சிவா விழிகள் தெறித்து விடுவதைப் போல் ஆத்திரமாய் விழித்தான். விழிகளில் கோபச்சிவப்பேறியது. உள்ளங்கையை இறுகமூடி சுவற்றில் குத்தினான்.

அன்னபூரணியின் உடலும் உள்ளமும் பதறியது. ''அம்மாடி! ராஜாத்தி. என்னம்மா சொல்றே? என்னம்மா நடந்தது? அந்தப்பாவியா சொன்னான்?''

''ஆமாம் அத்தே. கல்யாணம் ஆன நிமிஷத்தில் இருந்து அவரைத்தானே என் கடவுளா நினைச்சி வாழ்ந்தேன். அவரைத் தவிர இந்தக் குடும்பத்தைத் தவிர வேறு எதையுமே நினைக்கலியே. என்னை எப்படி அத்தே அவர் சந்தேகப்படலாம்? நான் தப்பு பண்ணுவேனா? சொல்லுங்க அத்தே'' கத்திக் கதறியவளை அணைத்துக் தேற்றினாள் அன்னபூரணி.

''அம்மாடி! அழாதேம்மா. வயிற்றுப்பிள்ளைக்காரி இப்படி தேம்பக்கூடாதும்மா. அழாதேம்மா. அவனெல்லாம் ஒரு மனுஷன்னு அவன் சொன்னதுக்காக நீ ஏம்மா அழுறே. எழுந்திரு தங்கம். அழாதேடா கண்ணு''

''அவனுக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு. முட்டாள். அம்மா மாதிரி இருக்கிற உங்களைப் போய்.... எப்படி? அம்மா! அவனை நான் தேடுறேம்மா. தேடிக் கண்டுபிடிச்சி.. அவனை'' சிவா ஆத்திரமாய் பற்களைக் கடித்துக் கொண்டிருக்கும் போது வாசலில் நிழலாடியது.

''ஸார்! போஸ்ட்''

''இதோ வர்றேன்'' சிவா குரல் கொடுக்க.

''ஸார்! இங்கே சீதா லஷ்மின்றது யாரு?'' அழுத விழிகளோடு நிமிர்ந்தாள்.

''நான் தான்!''

''உங்களுக்குத்தாம்மா. ரிஜிஸ்டர் போஸ்ட்''

''எனக்கா?'' கேட்டுக் கொண்டே விழிகளைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தாள். கையெழுத்திட்டு கவரை வாங்கினாள். சற்றே பெரிதான கவர். யாராக இருக்கும்? யோசனையாய் அனுப்புனர் முகவரியைப் பார்த்தாள். வெறுமையாய் இருந்தது.

''பிரிங்க அண்ணி. என்ன லட்டர்னு பார்ப்போம்''

''சி.. சிவா! எனக்கு கையெல்லாம் உதறுது. நீங்க பிரிங்களேன்''

''கொடுங்க அண்ணி'' என்றவன் வாங்கி அவசரமாய் பிரித்தான். கவர் திறந்து உள்ளே இருந்த புகைப்படங்கள் கீழே சிதறின.

''அடடா! கீழே விழுந்திடுச்சே'' என குனிந்தவன் மின்சாரம் தாக்கியவனைப் போல் அதிர்ந்து உறைந்துபோனான்.

சிவாவின் அதிர்வைக் கண்டு அன்னபூரணியும் சீதாவும் அப்போது தான் வீட்டினுள் நுழைந்த உலகநாதனும் கீழே சிதறிக்கிடந்த போட்டோக்களைப்

பார்க்க அனைவரின் முகமும் உறைந்துபோனது.

மணக்கோலத்தில் ராம்குமாரும் ஏதோ ஒரு பெண்ணும். கோவில் வாசலில் மாலையும் கழுத்துமாய் நின்றிருந்த புகைப்படம். உரிமையாய் அந்தப் பெண்ணின் தோள்மேல் கைபோட்டு பற்கள் தெரிய சிரித்துக் கொண்டிருந்தான்.

சீதாவின் கண்கள் நிலைகுத்திப்போயின. உடலைவிட்டு உயிர்பிரிந்தாற் போல் ஒரு வெறுமை. தலை மீது பாறாங்கல்லை வைத்ததுபோல் கனம். இதயம் எரிமலையாய் வெடித்துச் சிதற கீழே கிடந்த புகைப்படங்களை பார்த்தாள். அனைத்திலும் பல வித கோணங்களில் தன் கணவன் அந்தப் பெண்ணுடன் தெரிய சீதாவின் பார்வை மங்கியது. கண்களில் இருள்சூழ மயங்கிச் சரிந்தாள்.

**ஓடும் தண்ணீரும் நீ தொட்டா**
**பன்னீரு உனக்கென்ன ராசாத்தி**
**கண்ணீரு உன்னைக் காத்திடுவேன்**
**கண்ணுக்கொரு கண்ணாக!**

# ௭

புயல் அடித்து ஓய்ந்து போயிருந்தாற்போல் இருந்தது வீடு. ஆளுக்கொரு திசையில் சுருண்டு கிடக்க, சிவா ஆத்திரத்தின் உச்சியில் இருந்தான்.

''ஏன் அண்ணி! இவ்வளவு விஷயம் நடந்திருக்கு. எங்ககிட்ட ஒரு வார்த்தை சொல்லணும்னு தோணலியே உங்களுக்கு? அப்போ நாங்கள்லாம் அந்நியமாத்தான் தெரியுறோமா?''

பதட்டமாய் மறுத்தாள் சீதா. ''ஐயோ! அப்படியில்ல சிவா. இந்த பிரச்சனை தொடங்கும் போது உமா கல்யாண வேலை நடந்திட்டு இருந்தது. அப்புறம் எனக்கும் உடம்பு முடியாமல் போச்சு''

''அவன் போகும் போதாவது சொல்லியிருக்கலாமே அண்ணி. அவன் காலை உடைச்சி வீட்டோட போட்டு நான் சாப்பாடு போட்டிருப்பேனே. இப்படி திமிரெடுத்துப் போய் இன்னொரு பெண்ணை கட்டிக்க விட்டிருப்பேனா?''

''எங்கிட்ட கூட சொல்லலியேம்மா நீ? பெத்தவ? எப்படி நம்ம சொல்றதை நம்புவான்னு நினைச்சிட்டியா?''

''இல்லத்தே! அவர் போகும்போது எதுவுமே சொல்லலியே. ஒருவேளை தன்னோட தப்பை உணர்ந்து மனம்வருந்தித்தான் போறார்ன்னு நினைச்சேன்''

விரக்தியாய் சிரித்தாள் அன்னபூரணி. ''அவனா? தான் செய்த தப்பை உணர்ந்து திருத்திக்கிற பழக்கம் ஒரு நாளும் கிடையாதே. தன் தப்பு தான் சரி என்பானே''

''அம்மா! நான் ஒரு மாசம் லீவு போட்டுட்டு அவனைத் தேடுறேம்மா. அவன் எந்த மூலையில ஒளிஞ்சிட்டு இருந்தாலும் சரி. கண்டுபிடிச்சி இழுத்திட்டு வந்து அண்ணியோட கால்ல போடுறேன்'' சிவா கோபாவேசமாகச் சொல்ல, சீதா நிதானமாய் கேட்டாள்.

''எதுக்கு சிவா?''

''என்ன அண்ணி கேட்கிறீங்க? உங்களை இந்த நிலைமையில விட்



டுட்டு போனவனை அப்படியே விட்டுடுறதா?''

''காணாம போயிருந்தா கண்டுபிடிக்க கொடுங்கன்னு கேட்டிருப்பேன் சிவா. ஆனா விட்டுட்டு போனவரை ஏன் தேடணும்?''

''அப்போ!''

''அப்படியே விட்டுடலாம் சிவா''

''அண்ணி புரிஞ்சுதான் பேசுறீங்களா?''

''எல்லாம் யோசித்துத்தான் பேசுறேன்''

''இல்ல அண்ணி. நாளைக்கே குழந்தை பொறந்தா அதோட தகப்பன் எங்கேன்னு கேட்குமே. அதுக்கு என்ன பதில் சொல்வோம்?''

''செத்துப் போயிட்டான்னு சொல்லணும்டா'' அன்னபூரணியின் குரலில் அனைவருமே மிரண்டு போயினர். உலகநாதன் பதறினார்.

''அன்னம்! என்ன பேசுற நீ வயித்துப்பிள்ளைக்காரிய வெச்சிட்டு...''

''அத்தே சொன்னதுல எந்தத் தப்பும் இல்ல மாமா''

''என்னம்மா நீயும் அவளை மாதிரியே பேசுற..''

''மாமா! அவர் எம்மேல உள்ள கோபத்துல விலகி போயிருந்தா என்னிக்காவது ஒருநாள் வருவாருன்னு காத்திருப்பேன் ஆனா! என்னைப் பழி வாங்குறதா நினைச்சிகிட்டு எவளையோ கல்யாணமும் பண்ணியிருக்காரே''

''அவனுக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்திருந்தா போட்டோ எடுத்து நமக்கே அனுப்பியிருப்பான். புள்ளத்தாச்சி பொண்ணுக்கு அந்த அதிர்ச்சியைத் தாங்கமுடியுமான்னு யோசிச்சானா?''

''யார் கண்டது? அந்த அதிர்ச்சி தாளாம இவளுக்கு ஏதாவது ஆகட்டும்ற வெறியில கூட அனுப்பியிருப்பான். இனிமே சீதாவே அவனை ஏத்துகிட்டாலும் எனக்கு அவன் மகன் இல்லை. நான் தலைமுழுகிட்டேன்''

''அத்தே'' மாமியாரைக் கட்டிக் கொண்டாள் சீதா. கண்ணீர் பொங்கியது.

''அத்தே! என் அம்மாகூட என்னைப் புரிஞ்சுக்கலையே. என்னைத்தானே திட்டிட்டு போனாங்க. ஆனா நீங்க...''

''உன் அம்மாவையும் குறை சொல்ல முடியாதம்மா.. கணவன் இல்லாமல் உங்கள் இருவரையும் வளர்த்து ஆளாக்கியதே பெரிய விஷயம். உன் தங்கையின் திருமணப் பேச்சின் போது நீ வாழாவெட்டியாய் வீட்டில் வந்து அமர்ந்தால் உன் தங்கையின் திருமணம் தடைபட்டுவிடக்கூடாது என்று பயந்திருப்பார்கள்''

''ஆனா நான் எந்த தப்பும் பண்ணலியே அத்தே''

''திருமண வாழ்க்கையில் யார் மீது தப்பு இருந்தாலும் பழியை பெண் மட்டும் தானேம்மா சுமக்கிறா. இதுதானே காலம்காலமாய் தொடருது''

''அத்தே! இனி... இனி நான் என்ன பண்ணுவேன் அத்தே. எங்கே போவேன்?''

''நீ ஏம்மா எங்கும் போகணும்? இது உன் வீடு. இது உனக்கு நிரந்தரமான கூடு. இங்குதான் நீ இருக்க வேண்டும்''

''அத்தே''

''நீ அழக்கூடாதும்மா. உன்னை பிரிந்ததை எண்ணி அவன்தான் அழ வேண்டும். நீ ஏன் அழுறே. அழக்கூடாது'' விழிநீரை துடைத்துவிட்டாள்.

''அத்தே! நான்...''

''அம்மான்னு சொல்லும்மா''

''அத்தே''

''ஆமா! இனி நீ எனக்கு மகள். கடைசிவரை என் மகளாவே இருந்திடு'' கண்ணீர் மிகுதியால் அன்னபூரணியை கட்டிக் கொண்டாள் சீதா. ''இது போதும் அத்தே. இனி நான் எதற்கும் கலங்கமாட்டேன். உங்கமகளா என் காலம் முழுக்க வாழ்ந்திடுறேன்''

உலகநாதன் பேச்சற்று நிற்க, சிவா தாயிடம் கடிந்து கொண்டான்.

''அம்மா! அப்போ அண்ணியை இப்படியே வெச்சிருப்பீங்களா?''

''டேய்! முதல்ல குழந்தை நல்லபடியா பொறக்கட்டும். அதுக்கப்புறம் எதை எப்படிச் செய்யணும்னு எனக்குத் தெரியும்''

''சரி அன்னம். ஏழு மாதம் பொறந்தாச்சு. இனி சீமந்தம் பிரசவம்னு எவ்வளவோ இருக்கே''

''நான் பார்த்துக்கிறேன்ங்க''

''நீ செய்வ. ஆனா வர்றவங்க ராமைப் பத்திக் கேட்பாங்களே. எத்தனை நாள் மறைக்க முடியும்? இப்ப மறைச்சாலும் குழந்தை பிறந்த பிறகு பிரச்சனை பெரிதாகாதா?''

''ஏன்? பிரச்சனை பெரிதாகும்?''

''என்ன அன்னம். குழந்தையப் பார்த்து உன் அப்பன் உம் அம்மாவை விட்டுட்டு ஓடிப்போயிட்டான்னு சொன்னா குழந்தையோட மனசு என்ன பாடுபடும். அதோட எதிர்காலமே வீணாகிடாதா?''

சீதாவும் அன்னபூரணியும் தவிப்பாய் பார்த்துக் கொண்டனர். சில நிமிட யோசனைக்குப் பிறகு மகனிடம் திரும்பினாள் அன்னபூரணி.

''சிவா! உன் கம்பெனியில உனக்கு வீடு கொடுத்திருங்காங்களே''

''ஆமாம்மா''

''அந்த சாவி உங்கிட்டதானே இருக்கு. திருப்பிக் கொடுத்திட்டியா?''

''இல்லம்மா. எங்கிட்டதான் இருக்கு''

''நல்லது. நாம அடுத்த வாரமே அந்த வீட்டுக்குப் போயிடுறோம். ஏற்பாடு பண்ணு''

''ஏம்மா?''

''காரணமாத்தான் சொல்றேன். இங்க இருந்தா நாளாக ஆக ஒவ்வொருத்தரா வந்து துக்கம் விசாரிக்கிற மாதிரி விசாரிச்சிட்டே இருப்பாங்க. காயத்தை கிளறிவிட்டுட்டே இருப்பாங்க.

அதனால நாம அந்த வீட்டுக்கு போயிடலாம். புதுஇடம். புது மனிதர்கள். சீதாவிற்கும் ஆறுதலா இருக்கும். தேவையில்லாத கேள்விகளும் வராது. என்ன சொல்ற?''

''அப்போ.. இந்த வீடு?''

''இதை வாடகைக்கு விட்டுடலாம். அப்பப்போ வந்து பார்த்துக்கலாம். நீங்க என்னங்க சொல்றீங்க?''

''ம். இது நல்ல ஐடியாதான். செய்யலாம். ஆனா''

''என்ன ஆனா?''

''அம்மா சீதா. ராம் ஒருவேளை நம்மைத்தேடி இங்கே வந்தான்னா?''

''மாமா! இப்போ அவர் இன்னொருத்தியோட புருஷன் மாமா. அதோட என்கிட்ட சபதம் போட்டுட்டு போயிருக்கார். அதனால வரமாட்டார்''



''வந்தால்?''

''அத்தே சொன்ன அதே பதில்தான் மாமா''

''அவ பெத்தவ. ஏதோ கோபத்தில் சொல்லுவா. ஆனா உன் வாழ்க்கைம்மா இது. இதுல அவசரப்படக்கூடாதும்மா''

''மாமா! தெரியாம தப்பு செய்திட்டா மன்னிச்சு ஏத்துக்கலாம். ஆனா தெரிஞ்சே செய்த பாவத்தை துரோகத்தை எப்படி மாமா மறக்க முடியும்?''

''அதுக்கில்லம்மா..''

''மாமா.. இன்னிக்கு உங்க பையன் செய்த அதே தப்பை நான் செய்திட்டு நாளைக்கு மனம்திருந்தி வந்தா உங்கள் பிள்ளை ஏற்றுக்கொள்வாரா?'' மருமகளின் கேள்வியில் திணறிப்போனார் உலகநாதன்.

''முடியாதில்ல மாமா. அது என்ன மாமா நியாயம்? ஆம்பிளைங்க நினைச்சப்ப எல்லாம் ஊர்மேய்ஞ்சிட்டு வரலாம். நாங்க மறுக்காம ஏத்துக்கணுமா?''

''சேச்சே அப்படிச் சொல்லலம்மா! குழந்தைக்காக''

''உலகத்தில எத்தனையோ குழந்தைங்க தகப்பன் இல்லாம தாய் இல்லாம இருக்கு மாமா. என் பிள்ளையை தாயா தகப்பனா நான் வளர்த்துப்பேன்''

''குழந்தை ஏங்கிப் போகுமேம்மா''

''மாமா! நீங்க சொல்ற மாதிரி ஒருவேளை உங்கபுள்ள வந்து நான் அவரை ஏத்துகிட்டா என் குழந்தையோட நிலைமை இன்னும் மோசமாகிடுமே மாமா''

''என்னம்மா சொல்றே''

''இது வயித்துல இருக்கும் போதே தப்புதப்பா பேசி சேத்தைவாரியடிச்சிருக்கார். நாளைக்கு இது பொறந்து வளரும் போது அவரோட சந்தேகமும் தாறுமாறா வளருமே. அது ஆங்காரமா வெறுப்பா மாறி எங்குழந்தை மேலே காட்ட ஆரம்பிச்சிட்டா''

''வேண்டாம்மா... அப்படிச் சொல்லாதே''

''கேட்கவே முடியல இல்ல மாமா. ஆனா இதெல்லாம் நடந்தா எம் புள்ளை வாழ்க்கை என்ன ஆகும் மாமா? எனக்கு என் வாழ்க்கையைவிட என் குழந்தை முக்கியம் மாமா?''

''அவன் மனசும் மாறலாமேம்மா''

''மாறாது மாமா. ஒரு குடிகாரனை மாத்திடலாம். ஒரு கொலைகாரனை, பேராசைக்காரனை, ஏமாற்றுக்காரனைக் கூட மாத்திடலாம். ஆனா ஒரு சந்தேகப் பிராணியை கடைசிவரை மாத்தவே முடியாது. மாறவும் மாட்டார்''

''அப்படி இல்லம்மா...'' தந்தையை இடைமறித்தான் சிவா.

''போதும்ப்பா. விட்டுடுங்க. அண்ணி சொல்றதுலயும் உண்மை இருக்கு. இனி இதைப்பத்தி பேசாம நடக்க வேண்டியதைப் பார்ப்போம்''

''என்னடா நீயும் இப்படிச் சொல்ற?''

''அப்பா. நாம ஆம்பளைங்க. ரொம்ப சுலபமா சொல்லிட்டோம் அண்ணா வந்தா ஏத்துக்கங்கன்னு. ஆனா மனசளவுல அடிபட்டது அண்ணி. கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கப்பா. விளையாட்டா சொன்ன ஒரே ஒரு வார்த்தைக்காக அண்ணியை இந்த நிலையில விட்டுட்டு போனானே. அவன் ஒரு மனுஷனா?''

''போனவன் அதே வேகத்தில் ஒரு கல்யாணமும் பண்ணி அந்த போட்டோவை நமக்கே அனுப்பியிருக்கான்னா அவன் எவ்வளவு பெரிய ஸாடிஸ்ட்டா இருப்பான். அவனைப் போய் எப்படிப்பா அண்ணியால ஏத்துக்க முடியும்?''

உலகநாதனிடம் பேச்சில்லாமல் போனது.

''அட்வைஸ் ஈஸியா பண்ணிடுறோம்ப்பா. அடுத்தவங்களோட வலியையும் புரிஞ்சுக்கணும் நாம. அண்ணி காயம்பட்டு போயிருக்காங்க. நம்மால அவங்களோட வலி அதிகரிக்கக் கூடாது''

''சரிப்பா..''

''நம்ம அன்பு தான் அண்ணிக்கும் பொறக்கப்போகிற நம்ம குடும்ப வாரிசுக்கும் பாதுகாப்பு அரண், ஆறுதல், சந்தோஷம் எல்லாமே. என்னப்பா சொல்றீங்க?''



''அந்த டாக்டர் எப்படி அனாதை ஆனார்?''

''அவரது சொந்தக்காரங்க எல்லோருமே அவரிடம்தான் ட்ரீட்மெண்ட் எடுத்தாங்களாம்!''

-நாஞ்சில்க. நாகராஜன், பறக்கை

''சரிப்பா... இனிமே நான் என்ன சொல்ல? நாம அந்த வீட்டுக்கே போயிடுவோம்''

''அம்மா! நீங்க வீட்டுப் பொருளை எல்லாம் பேக் பண்ணுங்க. நான் அந்த வீட்ல எல்லாம் கரெக்ட் பண்றேன்''

''சரிடா'' என்ற அன்னபூரணி தனியாளாய் நின்று அனைத்து வேலைகளையும் முடித்து நான்கே நாட்களில் புதுவீட்டிற்கு குடியேறியும் விட்டாள்.

புதிய வீடு அனைவருக்குமே பிடித்துபோய்விட சீதாவிற்கு மிகவும் பிடித்துப்போனது. மொட்டைமாடியில் நின்றால் கடற்கரைக்காற்று அள்ளிக் கொண்டு போனது.

தூரத்தில் தெரிந்த கடல் அலைகளை இமைக்காமல் பார்த்து ரசிப்பதும், மாலை நேரங்களில் அன்னபூரணியின் கைகளைப் பற்றிக் கொண்டு கடற்கரை மணலில் காலார நடப்பதும் அருமையாகத் தான் இருந்தது.

அன்னபூரணியின் அன்பிலும் கவனிப்பிலும் தாய்மையின் பூரிப்பிலும் சீதாவின் உடலும் முகமும் மெருகேறி மின்னியது.

குழந்தை வளர்ந்து நெளிவதும் உதைப்பதும் புதுவித இன்பமாய் இருக்க, ஒவ்வொரு நிமிடத்தையும் ரசித்தாள்.

ஒன்பது மாதம் பிறந்ததுமே ஊர்கூட்டி சீமந்தம் செய்தாள். கைநிறைய வளையல்களோடும் முகத்தில் பூசிய சந்தனத்தோடும் இருந்த மருமகளை நெட்டிமுறித்தாள்.

அன்று காலார நடந்து வரலாம் என தோன்றிய போதே சீதாவின் வயிற்றில் எதுவோ பிசைந்தது. இதுதான் பிரசவ வலியா? இப்படித்தான் இருக்குமோ? மெல்ல மெல்ல வலி அதிகரிக்க, அன்னபூரணியிடம் வந்தாள்.

''அத்தே! இன்னிக்கு நடந்ததுபோதும். வீட்டிற்கு போலாமா?''



''ஏம்மா? கால் வலிக்குதா?''

''இல்ல அத்தே. வயிறு ஒரு மாதிரி பிசையுற மாதிரி வலிக்குது''

''அடடா. எப்போ இருந்தும்மா''

''இப்பத்தான். கொஞ்சநேரமா....''

''வாம்மா! வீட்டுக்கு போகலாம். நடக்க முடியுமா?'' கேட்டுக் கொண்டே மருமகளை அணைத்தபடி நடக்க, சீதாவிற்கு பயமும் பதட்டமும் அதிகரித்தது.

## 10

**மலர்போல சிரிக்கின்ற பிள்ளை**
**கண்டு மகிழாத உயிரொன்றும்**
**இல்லை மடிமீது தவழ்கின்ற முல்லை**
**மழலைச் சொல் இன்பத்தின் எல்லை**

பஞ்சுப் பொதிபோல் மடிமேல் உறங்கிக்கொண்டிருந்த குழந்தையை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் சீதாலஷ்மி. சிவா ஆசைப்பட்டுக் கேட்டதுபோல் மகாலஷ்மியே பிறந்திருந்தாள்.

ரோஜா நிறத்தில் பட்டுக்கன்னமும் வட்டக் கருவிழியுமாய் சீதாவை பிரதி எடுத்தாற்போல் பிறந்திருந்தாள் மகாலஷ்மி. தலைநிறைய கருகருவென பட்டுப்போன்ற சுருள் முடி. சிப்பியைப்போல் மூடியிருந்த விழிகள். சிவந்த சிறிய உதடுகளை இறுக மூடியவாறே உறங்கிக்கொண்டிருந்தாள்.

குழந்தையை பார்த்த கணம் முதலே சீதா தன் துயரங்கள் அனைத்தையும் மறந்திருந்தாள். தானும் புதிதாய் பிறந்ததுபோல் புதிதாய் பூத்ததுபோல் முகத்தில் அப்படியொரு மலர்ச்சி. சிவா குழந்தை பிறந்ததைக் கொண்டாடி மருத்துவமனை முழுவதற்கும் இனிப்பை வழங்கினான்.

உலகநாதனும் அன்ன பூரணியும் குழந்தையை விட்டு நகரவே இல்லை. அக்கம் பக்கம் படுக்கையில் உள்ள நோயாளிகள் அவர்களின் உறவினர்கள் என வரிசையாய் வந்து பார்த்துவிட்டுச் செல்ல அன்னபூரணி மருமகளிடம் கிசுகிசுத்தாள்.

''குழந்தைக்கு திருஷ்டி பட்டுடும். சீக்கிரமே வீட்டுக்கு போயிடணும்''

''ஆமா அத்தே! எனக்கும் ஹாஸ்பிட்டல்ல இருக்க பிடிக்கலை. டாக்டர்கிட்ட கேளுங்களேன். வீட்டுக்கு போவோம்.''

''ஆமா. இன்னிக்கே அனுப்பிடுவாங்கன்னு நர்ஸ் சொன்னா. ஏங்க! டாக்டர்கிட்ட போய்க் கேட்டுட்டு வாங்களேன்''

''சரி. நீ குழந்தையைப் பார்த்துக்க'' என்றவாறு உலகநாதன் வெளியேறியதும் குழந்தையை எடுத்து தொட்டிலில் படுக்க வைத்தாள் அன்ன பூரணி.

''எப்பவும் மடியிலே போட்டா சூடு. தொட்டில்ல போட்டு பழகணும். அப்பத்தான் சரியா தூங்குவா''

''சரி அத்தே''

''உனக்கு ஹார்லிக்ஸ் கலந்து தரவா?''

''வேண்டாம் அத்தே. மாமா வந்திடட்டும். டாக்டர் என்ன சொன்னாங்கன்னு கேட்டுட்டு பார்க்கலாம்''

''சரி. நான் இந்த துணிகளை அலசி காயப்போடுறேன்''

''நான் அலசிடுறேன் அத்தே''

''ம்ஹூம். பச்சை உடம்புக்காரி, சும்மா தண்ணியில கை வைக்கக்கூடாது. நான் எதுக்கு இருக்கேன்? நீ சும்மா படு''- என்றவாறு குழந்தை நனைத்துவிட்ட துணிகளை சேகரித்துக் கொண்டு பாத்ரூமை நோக்கி நடக்க, காதில் கேட்ட பரிச்சயமான குரலில் நின்றாள்.

''என்னைக் கேட்காம நீங்க எப்படி இந்தக்காரியம் பண்ணலாம். நான் இதை சும்மா விடமாட்டேன். போலீசுக்கு போவேன்''- ஒரு ஆணின் உரத்த குரல் கேட்க, அந்தக் குரலை அடையாளம் கண்டுகொண்டு சீதாவும் திடுக்கிட்டு மாமியாரைப் பார்த்தாள்.

''அத்தே! இது.. இது அவர் குரல் மாதிரியில்ல, ?''

''நானும் அதான் யோசிக்கிறேன். அவன் இங்கே எப்படி? இரு, நான் பார்க்கிறேன்''- என்றவாறே துணிகளை ஓரமாய் வைத்துவிட்டு அறையின் வாசலை நோக்கிச்சென்றாள் அன்னபூரணி.

''எங்ககிட்ட ஏன் லார் கத்துறீங்க? உங்க மனைவி கிட்ட போய்க் கேளுங்க. சத்தம்போட்டு பேஷண்ட்டை டிஸ்டர்ப் பண்ணாதீங்க'' பெண் மருத்துவர் பதில் சொல்லிக் கொண்டிருக்க, கதவை லேசாய்த் திறந்து அந்த இடைவெளியில் வெளியே பார்த்தவள் அதிர்ந்துபோனாள்.

ராம்குமார் கோபமாய் எதிரில் இருந்த அறைவாசலில் நின்று கத்திக் கொண்டிருக்க, பதட்டமாய் கதவை சாத்தி தாளிட்டாள் அன்னபூரணி.

''என்ன அத்தே?''

''அவன்தான். அந்த கடன்காரன் தான்.''

''அவரா? இங்கே ஏன் வந்திருக்கிறார் அத்தே. ஒருவேளை.. குழந்தை பிறந்தது தெரிந்திருக்குமோ?''

''இல்லம்மா! இவன் வேற எதுக்கோ வந்திருக்கான். டாக்டரம்மாகிட்ட கத்திட்டு இருக்கானே''

''அத்தே! என்னன்னு பாருங்களேன். என் குழந்தையை எடுத்து என் கையில கொடுத்திடுங்க அத்தே''

''அட என்னம்மா நீ. தெருவில போறவன் வர்றவனுக்கெல்லாம் நாம ஏன் பயப்படணும்?''

''ஆனா.. அவர் எதுக்கு வந்திருக்காருன்னு தெரியலியே?''

''இரு. ஜன்னல் வழியா பார்க்கிறேன்''- கிசுகிசுப்பாய் கூறி விட்டு ஜன்னலை பாதியளவே திறக்க, ராம்குமாரின் குரல் துல்லியமாய்க் கேட்டது.

''மிஸ்டர்! சும்மா கத்தி கூச்சல் போடாதீங்க. இது ஹாஸ்பிடல்''

''ஹாஸ்பிடலா இது? சுடுகாடு. என் குழந்தையை எனக்குத்தெரியாமல் சாகடித்த சுடுகாடு. நான் இதை சும்மாவிடப் போவதில்லை''- ராம்குமாரின் அலறலில் அதிர்ந்து மெல்ல கட்டிலை விட்டு இறங்கினாள் சீதா.

மாமியாரை நெருங்கி ஜன்னலின் இடைவெளியில் பார்வையை பதித்தாள். அவன்தான். தன்னை உதறிவிட்டு ஓடியவன்தான். ஆனால் இந்த நான்கைந்து மாதங்களில் நிறைய மாறியிருந்தான். எப்போதும் பளபளவென சவரம் செய்து சுத்தமாய் இருக்கும் முகம் இப்போது அலட்சியமாய் விடப்பட்டிருந்தது.

கறுப்பும் வெள்ளையுமாய் முள் முள்ளாய் தாடி வளர்ந்திருந்தது. அணிந்திருந்த உடைகூட அழுக்காய் கசங்கியே இருந்தது. ஆனால் கொடூரமான



குரலும் வஞ்சகத்தனமான முகமும் கொஞ்சமும் மாறாமல் இருந்தது. இவனது கூக்குரலை கேட்க சகியாமல் அந்தப்பெண் சற்று தடுமாறியவாறே நடந்து வந்தாள்.

போட்டோவில் பார்த்த அதே பெண். இன்று மாடர்ன் டிரெஸ்ஸில் சற்றே சோர்வாய் தெரிந்தாள். சோர்வையும் மீறி அவளது முகத்தில் கோபம் தொனித்தது. அவனை நேராய் பார்த்து சீற்றமாய்க் கேட்டாள்.

''இப்ப எதுக்கு இப்படி கூச்சல் போட்டுட்டு இருக்கீங்க?''

சட்டென அவளை நெருங்கினான். ''என்ன? நான் கூச்சல் போடுறேனா?''

''பின்னே பாட்டு பாடிட்டு இருக்கீங்களா? உங்க பாட்டை கேட்கிற நிலையில நான் இல்ல. வெளிய போங்க''- அந்தப்பெண்ணின் அசாத்திய துணிச்சலில் சீதா வாயைப்பிளந்தாள்.

இப்படியெல்லாம் கூட பேசலாமா? இவரும் கையை ஓங்காமல் இருக்கிறாரே. புதுமனைவியாச்சே. மும்பைக்கு போவதாகத்தானே சொன்னார். இப்போது இங்கே எப்படி? இவர்களுக்குள் என்ன பிரச்சனை? குழப்பமாய் அவர்களை கவனிக்கத் தொடங்கினாள்.

''நான் வெளியே போகணுமா? இரு. உன்னை.. இந்த டாக்டரை என்ன செய்கிறேன் பார்''- என்றவாறே தனது செல்போனை கையிலெடுத்தான்.

அந்தப்பெண் கதவில் சாய்ந்து கொண்டே அலட்சியமாய் கேட்டாள்.

''என்ன பண்ணப் போறீங்க?''

''ம்? போலீஸ்ல கம்ப்ளெயின்ட் கொடுக்கப்போறேன்''

''என்னன்னு?''

''என் குழந்தையை என் அனுமதி இல்லாம எனக்குத்தெரியாம கலைச்சிட்டாங்கன்னு சொல்வேன்''- ராம்குமார் ஆவேசமாய் சொல்ல அவள் அலட்சியமாய் தோளைக் குலுக்கினாள். ''ஓ.கே. சொல்லுங்க. நானும் சொல்லிடுறேன்''

''நீ.. நீ.. என்ன சொல்லப்போறே?''

''இந்த ஆள் ஏற்கனவே கல்யாணமானவன். எங்கிட்ட அதை மறைச்சு என்னைக்கல்யாணம் பண்ணிக்கிட்டான்னு சொல்லுவேன்''- அவள் அசராமல் சொல்ல, ராம்குமாரின் முகம் வெளுத்தது.

''முத பொண்டாட்டி இருக்கும்போது, இன்னொரு கல்யாணம் பண்ணினா எத்தனை வருசம் உள்ளே இருக்கணும்னு தெரியுமா?''

பேச்சு மூச்சின்றி நின்றவனை இன்னும் ஏளனமாய் பார்த்தாள்.

''அவகிட்ட இருந்து சட்டப்படி நீங்க பிரியல்ல. எங்கிட்ட உண்மையை மறைச்சிருக்கீங்க. அதோட தினம் தினம் ஏதாவது ஒரு காரணத்தை வெச்சு எங்கூட சண்டைபோட்டு என்னை இம்சை பண்றீங்க. நாளாக ஆக ஒரு மனநோயாளிபோல மாறிட்டு இருக்கிற உங்களை நம்பி நான் எப்படி குழந்தை பெத்துக்க முடியும்?''

ஆங்காரமாய் கத்தினான் ராம்குமார். ''ஏய்! என்னடி சொன்னே? நான்.. நான் மனநோயாளியா? நானா?''

''ஆமா. எந்தக்காரணமும் இல்லாம இப்படி காட்டுக்கத்தாய் கத்தினா அதுக்கு வேற என்ன பேரு? முதல்ல உங்களுக்குத்தான் டிரீட்மெண்ட் எடுக்கணும்''

''ஏய்! என்னை பைத்தியக்காரன்னே முடிவு பண்ணிட்டியா?''

''நிச்சயமா! இன்னும் கொஞ்சநாள்ல முழுப்பைத்தியமா ஆகப்போறீங்க, அதுக்கு முன்னால உங்களை ஹாஸ்பிடல்ல சேர்க்கணும்''- காவேரியின் குரலில் இன்னும் ஆவேசமாகி கதவில் ஓங்கிக் குத்தினான்.

''ஆமாண்டி. நான் பைத்தியக்காரன்தான். என்னை தெய்வமா மதிச்ச என் சீதாவை காலால் எட்டி உதைச்சிட்டு உன்னைப்போய் கட்டினேனே. நான் பைத்தியம் தான்டி.''

சீதாவும் அன்னபூரணியும் திகைப்பாய் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். ''என் சீதா பத்தினிடி. அவ சொன்னா. என்னோட நிலைமை இப்படி ஆகும்னு அவ சொன்னா. அப்போ எனக்கு புரியலையே. அவ பத்தினி. அவ பத்தினிதான். அவசாபம் பலிச்சிடுச்சு. நான் பைத்தியம்தான்''

''உங்க காலைத்தொட்டுக் கும்பிட்டா பத்தினி. தட்டிக்கேட்டா நாங்க பத்தினி இல்லையா? எல்லாப்பெண்களுமே பத்தினிதான். உங்களை மாதிரி கேடுகெட்ட ஆண்களால் தான் எத்தனையோ பெண்களோட வாழ்க்கையே மாறிப்போயிடுது.

இப்பவும் ஒன்னும் கெட்டுப்போயிடல. உங்களுக்கு விருப்பம்னா நீங்க உங்க பத்தினி கூடவே போய் வாழலாம். எனக்கொன்னும் ஆட்சேபனை இல்ல''- காவேரியின் முடிவில் அறைக்குள்ளிருந்த இருவர் மட்டுமல்ல ராம்குமாரே அதிர்ந்து போனான்.

உடல் வெடவெட என நடுங்க காவேரியை நிமிர்ந்து பார்த்தான்.

''ஏய்! நீ என்ன சொல்றே?''

''உங்களுக்கு விருப்பம்னா நீங்க அவகூடவே போகலாம்னு சொன்னேன்''

''இல்ல. அவ கூட... அவ முகத்தைக் கூட என்னால பார்க்க முடியாதே. அவளை என்னவெல்லாம் பேசினேன். என் முகத்துல அவ விழிக்க மாட்டா. என் அம்மா என்னை வெட்டிக் கொன்னே போட்டுடுவாங்க! என்னால எப்படி போக முடியும்? முடியாது''

''அப்போ பொத்திகிட்டுப்போங்க. நான் கொஞ்சநேரத்தில வீட்டுக்கு வந்திடுவேன். சும்மா இங்கே நின்னு கத்தி என்னை கேவலப்படுத்தாதீங்க''

''காவேரி.. நீ என்ன சொன்னாலும் கேட்கிறேன். ஆனா நீ எதுவும் பண்ணிடாதே.. எனக்கு குழந்தை வேணும்.''

''அதெல்லாம் எப்பவோ முடிஞ்சுபோச்சு. இனி பேசி பயனில்லை''

''அடிப்பாவி! நீயெல்லாம் ஒரு பெண்ணா? அது...இப்படி ஒரு பாதகச் செயலை செய்ய உனக்கு எப்படி மனசுவந்தது? அது... உனக்கும் குழந்தை தானே''

''முடிஞ்சுபோனதைப் பத்தி பேசவேண்டாம். எனக்கு எப்பத் தோணுதோ அப்பப்பெத்துப்பேன்.''

''அப்போ நான். என்னோட விருப்பம். எதுவுமே உனக்கு முக்கியமில்லையா? என் குழந்தையை உருத்தெரியாம கலைச்சமாதிரி என்னையும் விரட்டியடிச்சிடுவியா?''

''நியாயமா பார்த்தா உங்களை நான் எப்பவோ விரட்டி இருக்கணும். ஆனா எங்கழுத்தில தாலி கட்டியிருக்கிங்களே. அந்த பாவத்துக்கு நான் வாழ்ந்து தானே ஆகணும்.''



''அப்போ கடைசிவரை இப்படியேத்தான் இருப்பியா? என்னை ஒரு மனிதனா மதிக்கமாட்டியா?''

''முதல்ல நீங்க மனுஷனா நடக்கப்பாருங்க. அதுக்கப்புறம் மத்தது எல்லாம் பார்த்துக்கலாம். முதல்ல இங்க இருந்து போங்க. எல்லாரும் வேடிக்கை பார்க்கிறாங்க. எனக்கு அசிங்கமா இருக்கு''

''காவேரி! நான்...''

''வெளியே போங்க'' படீரென கதவை அறைந்து மூடினாள். தொய்ந்து போய் திரும்பினான் ராம்குமார். தன்னைச் சுற்றி நின்றவர்களை பார்த்து அவமானத்தால் குனிந்து வெளியேறினான். பார்த்துக் கொண்டிருந்த இருவர் கண்களிலும் துளி கண்ணீர்.

எதுவும் பேசாமல் அமைதியாய் வந்து தொட்டிலில் அசைந்த குழந்தையை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள் சீதா. மௌனமாய் வந்து மருமகளின் தலைகோதினாள் அன்னபூரணி.

''என்னம்மா.. வருத்தமா இருக்கா?''

கண்ணீரோடு நிமிர்ந்து சிரித்தாள் சீதா. ''இல்ல அத்தே. என் மனசில உள்ள பாரமெல்லாம் விலகின மாதிரி இருக்கு. அவர் என்னை பேசினதை நினைச்சி எத்தனையோ நாள் அழுதிருக்கேன். ஆனா இன்னிக்கு நம்ம கண் முன்னாடி நடந்ததைப் பார்த்தப்ப சத்தியமா எனக்கு வருத்தமில்ல அத்தே. உண்மையைச் சொல்லணும்னா இன்னிக்குத்தான் என் மனசு நிம்மதி அடைஞ்சிருக்கு''

''சீதா''

''ஆமாம் அத்தே. என்னை விட்டுட்டு ஓடினவரை அவ ஓட ஓட விரட்டினாளே. இவரை மாதிரி ஆண்களுக்கு இப்படிப்பட்ட பெண்கள்தான் கிடைக்கணும்''- ஆவேசமாய் சொன்னவளை கனிவாய் பார்த்தாள் அன்னபூரணி.

''அத்தே! என் கர்ப்பத்தை களங்கப்படுத்தினாரே. இப்போ அவ கால்ல விழாத குறையா கெஞ்சினாரே பார்த்தீங்களா? என் கண்ணீர் அவரை சும்மா விட்டுடுமா. எத்தனை நாள் அழுது தீர்த்திருப்பேன். அத்தே! இனிமே நான் அழமாட்டேன் அத்தே''

''நீ ஏம்மா அழணும்?''.

''அதானே! நான் ஏன் அழணும். நான் என்ன தப்பு பண்ணினேன் தப்பு பண்ணினது அவர். அவர்தான் அழணும்''

''அதான் அழறானே''

'''அத்தே! அவ விரட்டிவிட்டாலும் நாம அவரை சேர்த்துக்கூடாது அத்தே''

''வீட்டு வாசப்படியைமிதிக்க விடமாட்டேம்மா. நீ கவலைப்படாதே.''

''நாம ஏம்மா அவன் மூஞ்சில முழிக்கப்போறோம். மாமா வந்ததும் நாம வீட்டுக்குகிளம்பிடணும். அப்புறம்.. மாமாவுக்கு இதெல்லாம் தெரியவேண்டாம் என்ன?''

''சரி அத்தே. ஆனா சிவாகிட்ட கண்டிப்பா சொல்லணும்''

''ம். சொல்லலாம்.''

''என்னை அம்மாவா பார்க்கிறேன்னு சொன்னாரு அத்தே. அவரு கூடப் போயி என்னை இணைச்சி பேசலாமா. இவருக்கு இன்னும்



''தலைவருக்கு விளையாட்டு தொடர்பான அறிவே கிடையாதா?''

''ஏன் என்னாச்சு?''

''டென்னிஸ் விளையாட்டை தொடங்கி வைக்க வந்தவர் கத்தரிக்கோல் எடுத்து நெட்டை (வலை) கட் பண்ணிட்டாரே!''

-பழ.கவிதா சிவமணி, புன்செய்ப்புளியம்பட்டி.

இருக்கு அத்தே. கடவுள் இருக்கார் அத்தே.''

''இப்பல்லாம் கடவுள் உடனுக்குடன் தண்டனை கொடுத்திடுறாரே. அதுவும் பாதிக்கப்பட்டவங்க கண்முன்னாலயே''

''அத்தே! அந்தப் பொண்ணும் அப்படி செய்திருக்கக்கூடாதே''

''எப்படி?''

''முழு உருவம் அடையாவிட்டாலும் அதுவும் ஒரு உயிர் தானே. அதைப் போய் எப்படி கலைக்கலாம்? அது பாவம்தானே''

''குழந்தையோட அருமை புரியாம போனவன்தான் அவன். அவனுக்கு இதுவும் வேண்டும். இப்பவே பாக்க பைத்தியக்காரன் மாதிரிதான் இருக்கான். இப்படியே சண்டைபோட்டுட்டு இருந்தான்னா இன்னும் கொஞ்ச நாள்ல சட்டையைக்கிழிச்சிட்டு அலையப்போறான். பாரேன்''

''வேண்டாம் அத்தே.. நல்லவரோ கெட்டவரோ. இப்போ அந்த பெண் அவரோட மனைவி. உங்க சாபத்தால அந்தப்பொண்ணு கஷ்டப்பட வேண்டாம்''

''என்ன பொண்ணும்மா நீ. உன்னைப்போய் தூக்கியெறிய அந்த முட்டாப்பயலுக்கு எப்படி மனசு வந்தது? அவனை சுமந்த இந்த வயித்தை நெருப்பால பொசுக்கணும்''

''அத்தே! அப்படிச் சொல்லாதீங்க. இந்த வயித்துலதானே ரெண்டு அற்புத வைரங்களும் பொறந்தது. உங்க கருவறை கோவில் அத்தே''

அவளை பரிவுடன் அணைத்துக் கொண்டாள் அன்னபூரணி

கதவு தட்டப்பட்டதும் எழுந்தாள் அன்னபூரணி, ''யாரு?''

''நான்தான் அன்னம்'' - கணவனின் குரல் கேட்டதும் கதவைத்திறந்தாள்.

''டாக்டர்பில் எல்லாம் தந்திட்டாங்க. பணம் கட்டிட்டு மருந்து மாத்திரையெல்லாம் வாங்கிட்டு வந்திட்டேன். கிளம்புங்க நான் கார் பிடிச்சிட்டு வர்றேன்''

புதிய மகாலட்சுமியை கொண்டாட உற்சாகத்துடன் கிளம்பிக்கொண்டிருந்தனர் அந்தக் குடும்பத்தினர்.

**முற்றும்**

Owned, Published, Printed and Edited by Kannan AdityanR, from 246, Anna salai, Chennai- 600 006 at Deviyin Kanmani Achagam.